80—பக்கங்கள்.

ஓம் பரப்பிரம்மணே நம:

அமிர்தகுணபோதினி

அறிவை விளக்கி, உற்சாகத்தைப் பெருக்கவல்லதான விகடமும், ஆநந்தகரமான அநுபவ விநோத ஞானகலா விலாஸங்களும் நிறைந்திலங்கும் அமிர்தச் சுவையுள்ள மாதப் பத்திரிகை.

பத்திராசிரியர்:—திரிசிரபுரம் எஸ். ஜி. இராமாநுஜலுநாயுடு

"எண்ணிய எண்ணியாங் கெய்துப எண்ணியார்
திண்ணிய ராகப் பெறின்." (திருக்குறள்.)

கமலம்-9.	சென்னை பவஷு புரட்டாசிமீ 1உ	இதழ்-102.
Vol. 9.	1934 மஷு செப்டம்பர்மீ 15உ	No. 102.

ஆனந்த தர்சனம்



"சொல்லினால் சொலப்படாது தோன்றுகின்ற சோதி நீ." எளியேம் எங்கு இருப்பினும், இல்லத்தை விட்டு எந்தத் தூரநாட்டிற் கிடப்பினும், அங்கெல்லாம் நின்னருள் தோன்றிச் சூழ்ந்து எங்களைக் காத்தருளும் காட்சியும், எங்களை ஆண்டருளும் நின் கருணை ஆட்சியும், இடர் தொலைத்து இன்பம் ஊட்டும் மாட்சியும், நின்னருள் சூட்சியும் என்னே! என்னே!! எமது திடசித்தமும் தைரியமும் இடையிடையே தளர்ந்து படுங்காலந்தன்னில் ஓ! இறைவா! நீயன்றோ புதுஊக்கமும் புதுவழியும் புதுஉதவியும் தோன்ற வைத்து எம்மைத் தலைநிமிர்ந்து நடக்கச் செய்கின்றனை. எங்கள் மானமும் தன்மதிப்பும் ஜீவியமும் பரமாத்மாவே! உம்மாலன்றோ காப்பாற்றப்பட்டு வருகின்றன. எம்து இந்த உலகத்துத் தைரியமெல்லாம் நீயேயன்றோ? என்றும் எங்கட்கு அறிவூட்டும் எம்பெருமானே! உமது அற்புதங்களை அறிவதற்கும், எமது ஆத்ம உஜ்ஜீவனத்துக்கும், மோக்ஷத்துக்கும் அருமையான தத்துவங்களை விசாரிக்கும்பொருட்டு உத்தம ஞானத்தை எங்கட்குத் தந்தருள்வாய். எமது கருத்துகள் ஈடேறுமாறு உமது திருஞான சம்பந்த சகாயத்தை அனுக்கிரகித்தருள்வீராக. எமது மனத்தை மருட்டாநின்ற பிசகான கொள்கைகளினின்றும் எம்மை ரக்ஷிப்பாய். எமது பிதாவும்

வெளிச்சமுள்ள இடமெல்லாம் குதூகலமே. வெளிச்சம் உண்டாயின் மனோ சமாதானமுமுண்டு. பிழைப்புக்கு வழி கிடைத்தால் அதுவே முதல் வெளிச்சம்.

குருவுமாகிய நீ மெய்யான நெறியில் எமது ஆன்மாக்களைச் செலுத்திக் காப்பாய். எங்கள் மனசாக்ஷியைத் தீக்ஷண்யப்படுத்திக் கடமையினின்றும் உத்தரவாதத்தினின்றும் பிசகாதிருக்கச் செய்வாய். எல்லாவற்றிலும் உம்மிடத்துக்கொண்ட நம்பிக்கையே இன்றியமையாப் பொருளென உணர்த்துவாய். சத்திய ஞானத்தால் எமது புத்தியை விகாஸப்படுத்துவது (மலரச் செய்வது) போலவே, எமது அந்தரங்கமும் நின்னை நேசிக்கும்படி செய்து, எங்கள் மூவகைக் கரணத்தோடு நின் கட்டளைக்கு இசைந்து நடக்கக் கிருபை செய்வாய். நினது நியமனத்துக்கிசைந்து ஒழுகாமற் போவோமாயின் எமது விசுவாசத்தால் ஆகும் பயன் என்ன? உமது அருளினால் நாங்கள் அறியும் ஒவ்வொரு உண்மையையும் எமது வாழ்க்கைக்குத் துணையாக்கிக் கொள்வோமாக. எமது கடமையென்று அறிகிற யாவற்றையும் உடனுக்குடன் செய்ய முயல்வோமாக. சத்திய ஞானத்தைக் கிரகிப்பதில் சோர்வடையா ஊக்கத்தோடு முயன்று, எமது வழியில் நேர்படுகிற உபகரணங்களை ஆவலோடும் கைக்கொள்வோமாக. பரமபக்தர்களுடைய கிரந்தங்களாலே எமது அறிவை வளர்ப்போமாக ஸன்மார்க்கர்களுடைய சகவாசத்தால் எமது வைராக்கியத்தைத் தீக்ஷண்யப்படுத்தி, எமது மனோதாருட்டியத்தைப் பலப்படுத்துவோமாக. சர்வதா நினது சிந்தையால் எமது ஆன்மாக்கள் பரிசுத்தமாகி, எமது வாழ்நாள் சிறிதென்பதையுமுன்னி, உலக ஆடம்பரங்களை வெறுக்கச் செய்வோமாக. எங்களுடைய ஞானக்கண் முன்பாக நின் ஞானஒளி என்றைக்கும் பிரகாசித்து பக்தியிலும் சன்மார்க்கத்திலும் மேன்மேலும் பெருகும்படி அனுக்கிரகிப்பதாக. ஓம் தத்ஸத்.

ஃ

"மழை இல்லை, பனி உண்டு" ஓராண்டு முழுதும் இடைவிடாமல் பனி பெய்ந்தாலும் காலத்தில் மழை பொழிவதற்கு ஈடாகுமா? மழை பெய்தாலன்றோ பயிர்கள் விளையும். பனியால் என்ன பிரயோஜனம்? அதுபோல், பதினாயிரம் மனுஷ்யர்கள் ஸகாயம் செய்தாலும், தெய்வ ஸகாயம் இல்லையேல் எந்தக் காரியமும் நிறைவேறாது. அநேக பந்துக்கள் விவாகிதையான ஒரு ஸ்திரீக்கு ஸகாயகர்களா யிருப்பினும், புருஷனுடைய பிரீதியை இழந்தால் என்ன பலன் பெறுவாள்? சதுர் சாஸ்திர பண்டிதனாயினும் தெய்வ பக்தி யில்லாதவன் மூடனே. வேண்டிய பொருளைப் புதைத்து வைத்து சோற்றுக்குக் கஷ்டப்படுகிறவனைத் தரித்திரனென்று சொல்லத் தடை என்ன? கங்கைக்கருகில் குடியிருந்தும் அதில் ஸ்நானம் செய்யாதவன் பாபியேபோல், ஏராளமான திரவியத்தை வைத்துக்கொண்டிருந்தும், அதைத் தரும விஷயத்தில் செலவு செய்யாமலும், அதனாலுண்டாகும் சந்தோஷத்தை யனுபவியாமலு மிருப்பவன் அவிவேகியே.

ஃ

உ௯௦௪ "பாலைப் பார்ப்பதோ? பாத்திரத்தைப் பார்ப்பதோ?" என்பர். பாலையும் பார்க்கவேண்டும்; பாத்திரத்தையும் பார்க்கவேண்டும். கிணற்றின் ஆழத்தையும் பார்க்கவேண்டும்; கயிற்றின் நீளத்தையும் பார்க்கவேண்டும்.

என் மனமாகிய வீட்டில் கவலைகளாகிய பல விருந்தாளிகள் வந்து உட்காருகின்றனர். இவர்களுக்கு அன்னம் படைக்க என்னாலாகுமா?

சரீரமும் மனமும் சேர்ந்து மனுஷ்யனுவதால் இரண்டையும் கவனிப்ப தவசியம். சரீர போஷணையை மட்டும் கவனித்து புத்தியை விசாலப்படுத் தாதவரும், புத்தி விசாலத்தை மட்டும் கவனித்து சரீர ஆரோக்கியத்தை அலக்ஷியம் செய்வோரும் ஒருவர்க்கொருவர் உயர்வு தாழ்வில்லாத மூடர் களேயாவர். சரீரம், மனம், நடக்கை ஆகிய இம்மூன்றையும் கிரமப்படுத்து வதே படிப்பின் கருத்து. ஹிருதய சுத்தமும் விருத்தியாகவேண்டி கல்வி கற்கிறோம். பலஹீனமுண்டானுல் புத்திசாலித்தனமிருந்தும் பயன்படாது. ஹிருதய சுத்தத்தை ஸ்திரப்படுத்தாத படிப்பு கடவுளுடைய சாபத்தையும் அதிர்ப்தியையும் விளைக்கும். சுத்தமில்லாதவன் பாபம் செய்வதில் பின்னடை யான். தேகசக்தியும் மனேசக்தியும் பலப்படுமாயின் மனிதன் எப்போதும் ஆநந்திதனுகவே இருப்பான். புஸ்தகங்களைப் படித்துவிடுவதால் கல்வி மானுக முடியாது. அநேக விஷயங்களைப் பெரியோர்களிடமிருந்து தெரிந்துகொள்ளவேண்டும். தானும் பரிசிலனை செய்யவேண்டும். எப்பொழு தும் பகவத் பக்தியிலேயே மனது இருக்கவேண்டும்.

ஃ

"அவரவருக்கு ஒரு அடையாளம்" அரசனுடைய தர்பாருக்குச் செல் வோர் காற்சட்டையும், அங்கியும், சரிகை அங்கவஸ்திரமும், தலைக்குட்டை யும் தரிக்கவேண்டுமென்று விதியுண்டு. எனக்கு இராஜபக்தி வேண்டியவரை இருக்கின்றதாதலின், வெளிவேஷம் அவசியமில்லை யென்றால் தர்பாருக்குள் விடமாட்டார்கள். அதுபோல, பகவானுடைய தர்பாருக்குச் செல்ல விரும் பும் பக்தர்கள் அவருக்குப் பிரியகரமான நாமம், விபூதி போன்ற சின்னங் களைக் கட்டாயம் தரிக்கவேண்டும். அவற்றை வீண் வெளிவேஷமென் றெண்ணி அலக்ஷியம் செய்வது தகாது. பெரியோர்கள் அநுஷ்டித்து வந்த விஷயங்களில் பக்தியில்லாதிருப்பதற்குக் காரணம் அவற்றின் பெருமையை விசாரித்தறியாததேயாம்.

ஃ

"எதுவும் பஞ்சபூதங்களின் சேர்க்கை" குடத்தைச் செய்வதற்கு மண் வேண்டும். அதை இளக்குவதற்குத் தண்ணீர் அவசியம். இளகிய மண்ணைக் கெட்டியாக்குவதற்குக் காற்று முக்கியம். பின்னர் அக்குடத்தைச் சூளையில் போட்டுச் சுடுவதற்கு அக்கினி வேண்டும். ஆகாசத்தின் அவசியம் சொல்லவேண்டியதில்லை. ஆகவே, பஞ்சபூதங்களும் சேர்ந்து குடமாகிறது. உலகத்திலுள்ள பொருள்களை யெல்லாம் பிரித்துப் பார்த்தால் பஞ்சபூதங்க ளாகும். அவற்றைத் தவிர வேறு பொருள் எது? ஆயினும், நாம ரூப பேதங் களால் வஸ்துக்களின் தன்மை வித்தியாஸப்படுகிறது. ஸந்தர்ப்பத்துக்குத் தக்கபடி அபிமானமும் அருவருப்பும் உண்டாவதால், எந்தப் பொருளிலும் விவேகிகள் இச்சை கொள்ளுகிறதில்லை.

ஃ

"தேனும் பாலும் கற்கண்டும்" இவை மூன்றும் நாவிற்கு இன்பத் தைத் தருகின்றன. இதைப்போல், பெரியோர்களுடைய சொற்கள் செவி

கதறும்போது கைவிட்டுப் போய் திரும்பியே வராத வைத்தியர், சுகப் பட்டபின் மெதுவாக எட்டிப் பார்க்க வாசல் பக்கம் வருகிறார்.

க்கு வெகு இன்பமாக இருக்கும். எப்போதும் ஸந்தோஷ சித்தர்களாய், கிருபா நோக்குடையவர்களாய், மிருது மதுர வசனங்களை யுரைப்பவர்களா யிருப்பதால் ஸாதுக்களுடைய ஸகவாஸம் சிலாக்கியமென்றோம். துஷ்டர்களின் வாயில் தூஷணைச் சொற்கள் நிறைந்திருக்கும். பக்தர்களின் வாக்கில் பகவந் நாமங்கள் தோன்றிக்கொண்டிருக்கும். ஆதலின், பாபிகளைக் கண்டால் பாம்பைக் கண்டஞ்சுவதுபோல் பயந்து ஒதுங்கவேண்டும். அப்போது தான் பெருமைதங்கிய மனம் கெடாதிருக்கும்.

ஃ

"தானொன்று நினைக்கத் தெய்வமொன்று நினைத்தது" என்னும் பழமொழி பொய்யல்ல. நல்லவர்களுக்கு எவ்விதமான இடையூறும் விளைக்க எவராலுமாகாது. ஆவதுபோல் தோன்றுவது இன்னும் கொடுவினை புரிந்து பாப மூட்டையைச் சுமப்பதற்கேதான். அவரவர் செய்த புண்ய பாபங்களுக்குத் தக்க பலனை யனுபவிக்க வேண்டியது ஈசுவராக்ஞை. அதற்கு மாறாக நடக்க யாராலாகும்? பிறரைக் கெடுக்க எத்தனிப்பது தனக்கே கேட்டை விளைக்கும். இதைவிட உலகத்தில் வேறு நற்பாடமில்லை.

ஃ

"கலக்கமும், மயக்கமும், இருளும்" வரம்பற்ற மஹா விஷயங்களை வரம்புடைய அறிவினராகிய நாம் ஆலோசிக்கப் புகுந்தால், எப்பக்கம் பார்த்தாலும் சுத்த இருளாய்த்தானிருக்கும். எங்கும் கலக்கங்களும், மயக்கங்களும் மிகுந்திருக்கும். ஓர் சமயம் துரியோதனனுக்குத் தோன்றியபடி, நிலமே ஜலமாயும், ஜலமே நிலமாயும் பலவிதம் மாறுபட்டுக் காட்டும். இதைத் தெரிவிக்கவே ஸ்ரீமத் சங்கராசாரிய ஸ்வாமிகளின் திருவாக்கை இங்கு தருகிறோம்:—"குரூரங்களும் அநீதிகளும் உண்டாயிருப்பவைகளைக் கடவுள்மீது சுமத்திப் பேசக்கூடாது. ஏனென்றால், கடவுள் சுயேச்சையாய் நடக்கவில்லை. கடவுள் ஒன்றைச் சார்ந்தே இந்த ஏற்றத் தாழ்வுள்ள உலகத்தைச் சிருஷ்டிக்கிறார். "எதைச் சார்ந்து?" என்று கேட்பீராயின், தர்ம அதர்மத்தையென்று பதில் கூறுகிறோம். சிருஷ்டிக்கப்பட்ட ஆத்மாக்களின் தர்ம அதர்மத்தைச் சார்ந்து சமமற்ற சிருஷ்டி உண்டாவது கடவுளின் குற்றமன்று. நெல்லும் கோதுமையும் உண்டாவதற்குப் பொதுவான காரணம் மழையாயினும், நெல்லும்—கோதுமையும் என்கிற இயற்கை வித்தியாசங்களுக்குக் காரணங்கள் அவைகளின் தனித்தனி விதைகளின் மாறுபட்ட சக்திகளேயாகின்றனவோ, அப்படியே தேவர்களையும் மனிதர்களையும் மற்றவைகளையும் சிருஷ்டிப்பதில் பொதுவான காரணம் கடவுளாயினும், அவர்களுடைய தனித்தனி ஆத்மாக்களிற் படிந்த மாறுபட்ட செய்கைகளே, அவர்களுக்குள் காணப்பட்ட வித்தியாசங்களுக்குக் காரணங்களாகும்."

ஃ

"மூத்தம் தந்து பக்தி செய்யவேண்டுமென்ற சித்தம்" ஸ்ரீ கிருஷ்ண சைதன்ய ஸ்வாமிகள் ஜகந்நாதத்துக்குத் தமது சிஷ்யர்களுடன் சென்ற

நிறைந்த வாழ்வும், உயர்ந்த பதவியுமே மனிதர் விரும்புவர். வைத்த அந்தக் குறி தவறிவிடினோ?

போது, அவ்விடத்திய கோபுரம் அவரை யழைத்துப் பேசுவதுபோலும் அவருக்குத் தோன்றிற்றும். ஸ்வாமிகள் தாம் தனியாக ஜகந்நாதரை சேவிக்க விரும்பியவராய் கிருஷ்ணப் பிரேமையோடும் கோவிலை நோக்கி ஓடினார். கோயிலின் வாயிற்படியில் சேவகர்கள் காவல் காப்பதையும் கருதாது உட்சென்று ஜகந்நாத விக்கிரகத்தினைக் கட்டி யணைத்து முத்தமிடத் தாவினார். மேடைமீதிருந்த ஸ்வாமியைப் பிடிக்கக் குதித்தேறினார். ஆனால், பிடி தவறிக் கீழே விழுந்து மூர்ச்சிதரானார். இதுவன்றோ தம்மையே மறந்த பக்தி நிலை! இதுவன்றோ கிருஷ்ணப் பிரேமை!!

இடையில் விட்டுவிட்ட வழக்கம்.

ஒரு வழக்கத்தைத் தொடர்ந்து செய்கையில் ஞாபகம் சரியாயிருந்து, அவ்வழக்கத்தின்படி நடந்துகொள்ளவைக்கிறது. சிறிது தவறினும் உடனே ஞாபகம் உண்டாய்விடுகிறது. ஒரு வழக்கத்தைச் சிலநாள் விட்டு வைத்திருந்து மறுபடியும் அதைச் செய்யப் புகுகையில், அடிக்கடி அவ்வழக்கமான காரியத்தை மறந்துவிடும்படி ஆகிறது. சோப்பு போட்டுக் குளிக்கும் ஒருவர் அவ்வழக்கத்தைச் சிலகாலம் விட்டிருந்து ஒருநாள் சோப்புடன் நீராடச் சென்றால், சோப்பை மறந்துபோய் குளித்துவிட்டு, அப்பால் சோப்பைப் பார்த்ததும், சோப் போட்டுக் குளிக்காமற்போனோமே என்று எண்ணமிட நேருகிறது. இவ்விதமே பாதரக்ஷையை சதா தரிக்காமல் என்றோ ஒருநாள் போடுகிறவர்கள் தாங்கள் சென்ற இடத்தில் அதைக் கழற்றிவைத்துவிட்டு அந்த ஞாபகமில்லாமலே பிறகு வெறுங்காலுடனேயே நடந்து சென்றுவிடுகிறார்கள். பிறகு ஞாபகம் வந்து ஓடிச் சென்று பார்க்கையில அதற்கு முன்பே அதை எவரேனும் கொண்டு போய்விடுகிறார்கள். இது வழக்கத்தை இடையில் விட்டு விட்டுப் பிறகு மறுபடியும் தொடங்கியதின் பலன்!

சிலர் நம்மை எட்டிப் பாராமலும், கவனிக்காமலும் இருந்தாலுங்கூட, அவசரகாலத்துக்குமட்டும் தவறாமல் வந்து துணையாயிருந்து எல்லாம் செய்கிறார்கள். நாம் ஊரில் இல்லாத சமயம் ஒரு முக்கிய காரியம் ஏற்பட்டால் அதைச் சிரத்தையாகக் கவனித்து அநுகூலமாக்கிவிட்டு, ஒன்றுமே செய்யாதவர்கள்போல வேஷம் போடுகிறார்கள். இத்தகையோரைச் சந்திக்கும்போது நம்மை யறியாமலே பரவசமுண்டாகிறது. நாம் கோபம் கொதித்து என்ன பேசினும், அதையும் பொறுத்துக்கொண்டு குலாவ வருவார்கள். நாம் திட்டுவது ஒரு திட்டாக அவர்களின் மனதிற் படவுங் காணோம்! நமது திட்டு அவர்களுக்கு மிட்டாய் லட்டுபோலாய்விடுகிறது.

அமிர்தகுணபோதினி

பவஹு புரட்டாசி௴ 1உ

பாதரக்ஷைத் தொழில் பயின்ற சிறுவன்.

எதிலும் தொழிலின் நட்பம் கண்டு உயர்வதே திறமை.

"ஓ! என்ன சொன்னாய்? போயும் போயும் செருப்பு தைக்கிற தொழிலிலா அமரப்போகிறாய்? என் வயிற்றில் பிறந்த பிள்ளை ஈனத்தொழில் செய்வதா? நானோ மேலோர்களுடைய வம்சத்திற் பிறந்தவள்; என்னுடைய தந்தை குரு பீடத்திலிருந்தவர்; உன் சகோதரியை ஒரு பெரிய பிரபு விவாகம் செய்திருக்கிறார்; உன் சகோதரனோ ராஜாங்கத்தில் பெரிய பதவியைப் பெறப்போகிறான். அவர்களுடைய அந்தஸ்தையும் அபிவிர்த்தியையும் வெட்கக் கேடான உன்னுடைய நிலைமை கெடுத்து விடுமே? ஒரு அற்பனான தையற்காரனுக்குப் பிறந்த உன் தந்தை தன் ஈன புத்திக்குத் தக்கபடி உனக்கு இந்தத் தொழிலைத் தேடி வைத்தாரா? ஆ! அப்படிப்பட்ட ஈனஜாதி மனிதனுக்கு நான் மனைவி யானேனே" என்று ஒரு தாயார் தன் குமாரனைக் கேட்டாள். இந்த விருத்தாந்தம் வெகு வருஷங்களுக்கு முன் ஜர்மனி தேசத்தில் நடந்தது.

—"என் தாயே! வீணாக என் தந்தையைத் தூற்றாதே அம்மா. நான் அவ்வளவு புத்திசாலி யல்லாததால் என் பிதா இந்தத் தொழிலைத் தேடித் தந்தார். எத்தொழிலாயினும், உண்மையாய் உழைத்து வேலை செய்வதில் வெட்கமுமில்லை; இகழ்ச்சியுமில்லை."

—"மகனே! இந்தச் சக்கிலியத் தொழிலைவிட, பட்டாளத்திலாவது, கப்பல் வேலையிலாவது போய்ச் சேரக்கூடாதா?"

—"அம்மா! அதையும் என் தந்தை யோசியாமலில்லை. பள்ளிக்கூடத்தில் படித்துப் பரீக்ஷையில் தேர்ந்தால்தான் பட்டாளத்தில்

கழுத்தில் மாங்கல்யக் கயிற்றுடன் இருக்கும் பவுன் காசுகளை யழித்துப் புது நகை செய்துகொள்கிறார்கள். விற்கப் புகுகையில் பவுன் காசுகளுக்குள்ள விலை மதிப்பு, அதை அழித்துச் செய்த நகைகளுக்கு இராது.

சேரலாம். அதற்கு சம்பளம் கொடுக்கப் பிதாவுக்கு சக்தியில்லை. அவருடைய சம்பாத்தியமெல்லாம் என் சகோதரனுடைய படிப்புச் செலவுக்கே போதாமலிருக்கிறதே! கப்பல் வேலையோ எனக்குத் தெரியாது. எனக்கு அதிக வயதாய் விட்டதால் இனி நான் கப்பல் வேலையிற் சேர முடியாதாம். முன் பணம் கட்டாமல் அதில் சேர இயலாது. முன்பணம் கொடுக்க நமக்கு வழியில்லையே!"

என்று சொல்லிக்கொண்டே அச் சிறுவன் கலகல வென்று கண்ணீர் விடலானான். அவனுடைய தந்தைக்கு அவ்வளவு வறுமை நேர்ந்ததும்—வீணாடம்பரங்களையும் பெருமைகளையும் கருதிய அவனுடைய தாயாரின் மிதமற்ற செலவுகளினாலேயே யன்றி வேறல்ல.

—"அடா நீசப் பயலே! என்ன கஷ்டமானாலும் நீ சக்கிலியத் தொழில் செய்யவே கூடாது. என் பேச்சைத் தள்ளி நடந்தால் நீ க்ஷேமமாக வாழமாட்டாய்" என்றாள் தாயார்.

ஃ

அவள் இவ்வாறு சொல்லுகையில், "ஐயோ பாவம்! ஒன்று மறியாத இப்பேதைப் பாலகனை நீ இவ்வாறு சபிக்கலாமா?" என்று சொல்லிக்கொண்டே வெகு கம்பீரமான வடிவமுள்ள,—ஆனால், வயது தளர்ந்து மெலிந்த,—ஒருவர் உள்ளே நுழைந்தார். அவர் அங்கே பேச்சாடின பெண்ணுக்குக் கணவனும், சிறுவனுக்குத் தந்தையுமாம். அவர் உடம்பு மெலிந்து போனது அத்தனையாகக் கிழத்தனத்தாலன்று; மனிதர்களை உயிருடனே தகிக்க வல்லவையான, அவர் மனதில் குடிகொண்டிருந்த, பலவகைக் கவலைகளினாலேயேயாம். அவர் சாதாரணமானவரன்று; கிறிஸ்தவக் கோயிலில் பிரஸித்தரான வேதோபந்நியாசகர்; மிகுந்த பாண்டித்திய முடையவர். பல கலைகளையும் கற்றுத் தேர்ந்தவர். கம்பீரமாய்ச் சபைகளில் பேசும் தீரமும், வாக்சாதுரியமு முடையவர். உத்தம குலத்திற் பிறந்தவர். இத்தகையவர் இவ்விதமான வறுமையின் கஷ்டதசையை அநுபவிக்கும்படியானது யாது காரண மென்பீர்களோ? அது ஒரு பெரும் கதை. ஆடம்பரமும் அடங்காமையும் கொண்ட மனைவியால் வந்த அனர்த்தக் கதை அது.

ஃ

அந்தப் பெரிய மனிதருக்கு லாரேன்ஸ்வெபர் என்று பெயர். அவர் மார்க்டபர்க்கு நகரத்துக்கு அருகில் ஒரு சிறிய

தான் ஒருவர்மீது எவ்வளவு கசப்பு வைத்திருந்தாலும், அவரது குணங்களில் தோஷம் சொல்ல முடியாததால், அவரும் தன்னை மறவாததால், முற்றிலும் வெறுக்க முடிகிறதில்லை.

காணியாட்சிக்காரனுடைய குமாரர். அவன் தன் நிலங்களைப் பயிர் செய்வதோடு, தையல் வேலையும் செய்து ஜீவனம் பண்ணி வந்தான். லாரென்ஸ் என்பவர் ஒன்பது பிள்ளைகளுள் கடைசியானவர். மற்றப் பிள்ளைகளின் உபயோகத்திற்கே அந்தக் குடும்பத்து ஆஸ்திகள் செலவழிந்து போனமையால், இந்தக் கடைசி மகனை ஆலயத்துக்கு வேண்டிய கல்விகள் கற்கும்படி செய்ததில் 18-வயதில் ஒரு பரீக்ஷையில் தேறினர். பிறகு ஒரு வருஷத்திற்கெல்லாம் தாய் தந்தையர் இறக்க, புசிப்புக்கே கஷ்டமாகி, சில பணக்காரப் பிள்ளைகளுக்குப் படிப்பு சொல்லிக் கொடுப்பதில் கிடைத்த பணத்தைக்கொண்டு ஜீவனம் செய்து, அத்துடன் தானும் ஊக்கத்தைக் கைவிடாமல் படித்துத் தேறி 23-வது வயதில் ஒரு பெரிய பரீக்ஷை கொடுத்து மிக்க கௌரவம் பெற்றவராகி காஸெல் நகரத்தில் ஒரு பெரிய குரு பீடத்திலிருந்த அம்மான் ஒருவரிடம் போய்ச் சேர்ந்து சுகமாயிருந்தார். இப்படியிருக்க, அத்தேசத்தில் ஓர் யுத்தம் உண்டாக, அதில் சேரவேண்டாமென்று அம்மான் தடுத்தும், தேசாபிமானத்தால் தூண்டப்பெற்றுச் சேர்ந்து யுத்தத்தில் வெற்றி பெற்ற பிறகு, தன் அம்மானிடம் வந்து சேர்ந்து எவ்வளவு வேண்டியும் சேர்த்துக்கொள்ளாமல் அந்த அம்மான் துரத்திவிட்டான். அதன் பின்பு பல இடங்களில் அலைந்து திரிந்து, கடைசியில் ஓர் ஊரில் ஒரு காணியாட்சிக்காரரின் குமாரத்தியை மணந்து, அவளுக்குச் சீதனமாக வந்த நிலத்தைப் பயிரிட்டு ஜீவனம் நடத்தினர். எப்போதும் நல்ல உழைப்புள்ளவர். ஆயினும், ஐயோ! அவருக்கு வாய்த்த மனைவி குடித்தனத்தின் கருத்தை யறியாத வீணடம்பாக்காரி; கணவன் சொல்லைக் கேளாத நாரி! எப்பொழுது எதிர் பேசும் மனைவி வாய்த்தாளோ அப்பொழுதே இவ்வுலகத்துச் சுகம் என்பது இல்லாது போய்விட்டது. மாமனர் உயர்ந்த பதவியிலிருந்ததால் அவரால் ஏதாவது சகாயம் பெறலாமென்று இருந்ததில், அவரும் இறந்துபோக, அந்த ஆசையும் நாசமாயது. எதுபோயினும் தனக்கு இணங்கி நடக்கும் நற்குணமுள்ள மனைவியிருந்தால் எத்துயரையும் சகித்திடலாம். ஆனல், அவளோ தன் கணவனை ஒரு புதிய விநோத விளையாட்டுக் கருவிபோல் பாவித்து ஆட்டிவந்தாள். கணவன் மனைவிக்குள் எத்தனை சண்டைகள் இருப்பினும், குழந்தைகள் எப்படியோ பிறந்துவிடுகின்றன! முதலில் ஒரு பிள்ளையும், பிறகு ஒரு பெண்ணும் பிறந்தனர். மூத்தவனுக்கு உத்தியோகமும், பெண்ணுக்கு விவாகமும் செய்வித்ததில் மனைவியின் வீணடம்பரத்தில் ஆஸ்தி முழுதும் தீர்ந்து புஸ்தகங்களையும் விற்க நேர்ந்தது. கடைசி

சிறு குடிசையானலும் தனக்கென்று ஒரு சொந்த வீடு இருந்தால், தன் இஷ்டப்படி மலஜலம் கழித்துக்கொண்டு வியாதிப் படுக்கையில் நிம்மதியாய்க் கிடக்கலாம். பிறர் வீட்டில் அப்படிக் கிடந்தால் ஒப்பமாட்டார்கள். நிமிஷத்திற்கு ஒரு குற்றம் கூறுவர்.

யில் பிறந்த எர்மன் என்ற எளிய பையனுக்குப் படிப்பிக்கவோ, கண்ணியமான ஒரு வியாபாரத்திற் பழக்கவோ கையில் பணமில்லாமல் லாரென்ஸ் விசாரமுற்றிருக்கையில், ஸாக்ஸனி தேசத்தில் பாதரக்ஷை வேலை செய்துகொண்டிருந்த அவர்களுடைய சிற்றப்பன் முறையான பந்து ஒருவன் இவர்களுடைய க்ஷேமசமாசாரங்களைத் தெரிவிக்கும்படி எழுதிய கடிதமொன்று வந்தது. உடனே லாரென்ஸ் தனது கஷ்டங்களை விவரித்துப் பதில் எழுத, அதற்கு விடையும் சீக்கிரம் வந்தது. அக்கடிதத்தில் "உமது பிள்ளைக்காக நீர் விசாரப்படவேண்டாம்; என்னிடம் அனுப்பிவிட்டால் நான் அவனைப் போஷித்து யோக்கியதையும் கற்பிக்கிறேன். என் வீட்டிலுள்ள பத்துப் பிள்ளைகளோடு அவனும் பதினோராவது பிள்ளையாயிருக்கட்டும். அவன் எனக்கு ஒரு பாரமல்ல" எனக் குறிப்பிட்டிருந்தது. இந்தக் கடிதத்தின் மேலேதான் ஆரம்பத்திற் சொல்லிய கொடிய வாக்குவாதம் உண்டாயிற்று. இனி, அதன்மேல் நடந்ததைக் கவனிப்போம்.

ஃ

லாரென்ஸ் தனது கதியின்மையை எவ்வளவோ சொல்லியும் அவர் மனைவி பாதரக்ஷைத் தொழிலுக்கு ஒப்பவில்லை. ஆயினும், வேறு வழியின்மையால் லாரென்ஸ் தன் குமாரனை சிற்றப்பனிடம் அனுப்பிவிட்டார். காஸ்பர் எனும் அந்தச் சிற்றப்பன் எர்மன் எனும் அச்சிறுவனைத் தன்சொந்த குமாரன்போலவே பாராட்டி ஆறுவருஷ காலம் தன்னிடம் வைத்திருந்து தொழில் கற்றுத் தந்து, பின் தாய் தந்தையரைப் பார்த்துவிட்டு வரும்படி அனுப்ப, எர்மன் அவ்வண்ணமே தந்தையினிடம் சென்றான். தந்தை தன் சிறு குமாரனை அன்புடன் வரவேற்றார். தனது மூத்த குமாரன் பர்லின் நகரத்தில் நியாயசபைத் தலைவனாய் அதிகாரம் பெற்றிருந்ததால், அவனைப் போய்ப் பார்த்தால் ஏதாவது நன்மை கிடைக்குமென்று தன் சிறு குமாரனை அங்கு அனுப்பினார். தந்தையின் வாக்கை வேதவாக்கென நம்பிய எர்மன் அவ்விதமே தன் தமயன் இருக்குமிடம் போய்ச் சேர்ந்து, இனிய வார்த்தைகளால் ஒரு கடிதம் எழுதித் தான் காண வந்திருப்பதாகக் கொடுத்தனுப்பினான். அப்பொழுது யாரோ சில பெரிய மனிதர்கள் அந்தத் தமயனைப்பார்க்க வந்திருக்கிற தருணம்.

ஃ

எர்மனுடைய கடிதத்தை அவன் தமயன் கண்டதும் மிகக் கோபம்கொண்டு ஒரு கடிதமெழுதி, அதனுள் ஒரு ரூபாய் வைத்து மடித்துக் கொடுத்தனுப்பிவிட்டான். வெளியே போய் எர்மன் அந்

எது நசிப்பினும் எண்ணம் நசியாது; அதைத் தீயும் எரிக்காது; நீரும் அவிக்காது; நாளுக்குநாள் விருத்தியே யடையும்.

தக் கடிதத்தைப் பிரித்துப் பார்த்தபோது அதில் எழுதியிருந்த தாவது;—“உனக்கு சிறிதும் விவேகமில்லை; உன் அந்தஸ்து என்ன; என் அந்தஸ்து என்ன? நீயாவது இப்பொழுது இங்குவந்து என்னைப் பார்க்கவாவது; நீ இந்த நகரத்திலேயே வசிக்கக்கூடாது; வசித்தால் எனக்கு மிகவும் இகழ்ச்சி உண்டாகும்; உன்னால் நமது மாதாவின் குலத்திற்கு இழிவு நேர்ந்தது போதாதா? நீ எங்கேயாவது தூரதேசத்தில் ஓடிப்போய்ப் பிழை; வேண்டுமானால் ஒவ்வொரு சமயத்தில் சிறிய பொருள் உதவி செய்கிறேன்; இன்று நீ என்னைப் பார்க்க வேண்டுமாயின் இராத்திரி இன்ன இடத்திற்கு வந்து சேர்” என்று எழுதியிருந்தது. இத்தனைக்கும் அதில் கையெழுத்தில்லை. அதைப் பார்த்தவுடனே எர்மன் மனங் கசந்தது. அந்தக் கடிதத்துடன் ரூபாயையும் அப்படியே நன்றாய்ச் சுருட்டி ஒரு பையில் முடிந்து உறுதியாய்க் கழுத்திலே கட்டிக்கொண்டு, இனி இவனுக்கும் நமக்கும் செத்தால் தீட்டேயொழிய, வாழ்ந்தால் உறவில்லையென்று நிச்சயித்து, அகதிக்கு ஆகாயமே துணையென்று கடவுளையே நம்பிக்கொண்டு அங்கிருந்து தேசங்கள் சுற்றப் புறப்பட்டான். அவன் ஏழையேயன்றி, அவன் நெஞ்சு ஏழ்மை யுடையதில்லை. “உடன் பிறந்தார் சுற்றத்தாரென் றிருக்கவேண்டாம்” என்பது சரியாயிற்று. எர்மன் தனது தமயன் செய்த கேவலத்தைக் கடைசி நாள்வரை மறக்கவில்லை. அதுவே மான புருஷனின் வேலை.

ஃ

எர்மன் தான் போகும் ஊர்களில் அங்கங்கேயுள்ள தொழிற்சாலைகளைப் பார்த்து அங்கங்குள்ள விசேஷங்களைத் தெரிந்துகொண்டும், தகுந்த இடங்களில் தானும் தொழில் செய்து திரவியம் சம்பாதித்துக்கொண்டும், வாலிபத்தில் முழுமூடராயிருந்து வயது வந்த பிறகு சிறந்த பண்டிதர்களான பல மகான்களைப் போலவே இடையிடையே தான் வாலிபத்தில் கல்வி கற்றிராத குறையைத் தீர்த்துக்கொள்ளும்படி தேசபாஷை முதலியவைகளையும் விருப்பமாய்க் கற்றறிந்துகொண்டும், ஐரோப்பாவிலுள்ள பல தேசங்களும் சுற்றினான். அப்போதப்போது தகப்பனுர்க்கும் பொருள் உதவிசெய்து வந்தான். அந்த ஏழைத்தந்தை தனது குமாரனைப் பிறகு பார்க்கவேயில்லை. எல்லாம் வறுமையின் கொடுமையே. இவ்வாறிருக்கத் தந்தை இறந்துபோனாரென்ற செய்தி கேள்விப்பட்டு மிக்க விசனமடைந்து சுதேசம் திரும்பிவிட்டான். ஃ

அவ்விடத்திலே மாக்டபர்க்கு நகரத்தில் ஒரு சீமானுடைய மகள் பாதரக்ஷை தைப்பது முதலிய தொழில் செய்யும் தோல்

என் இடுக்கண்களுக்குந் தினகரன் வாரானோ? வருவானாயின் இடுக்கண்களைக் களையும் எதுவைப் பெறுவேனன்றோ?

வியாபாரசாலை வைத்திருந்தாள். அந்தத் தொழிற்சாலைக்கு அவள் நியமித்த காரியக்காரர்கள் உண்மையாக நடவாமையினால் அவர்களை நீக்கி வேறு பலரை நியமித்தும், அப்போதும் வியாபாரம் சரியாக நடந்தேறாமல் நஷ்டமும் நேரிடும்போலிருந்தது. அதனால் அவள் தன் தொழிற்சாலைக்குத் தகுந்த காரியதரிசி ஒருவன் வேண்டுமென விளம்பரஞ் செய்திருந்தாள். எர்மன் அச்சீமாட்டியைக் கண்டு கொள்ள, அவளும் இவனுடைய யோக்கியதைகளைக் கேள்வியுற்று வெகு சந்தோஷமாய் அவனைக் காரியதரிசியாக நியமித்துக்கொண்டாள். எர்மன் தோல் வியாபாரங்களில் மிகத் தேர்ச்சிபெற்றவனாகையால், இவன் கையின்கீழ் அந்த வியாபாரம் மிகவும் விருத்தியடைந்து வந்தது. வெகு சரசமான விலைக்குச் சரக்குக் கிடைத்த ஒரு சமயத்தில் அவன் தன் கைப்பொருளையும் கடனுக்கக் கொடுத்துச் சரக்கு வாங்கி அதற்குப் பாடுபட்டானென்றால், அந்தத் தொழிற்சாலையை விருத்திக்குக் கொண்டுவருவதில் அவனுக்கு இருந்த ஆஸ்தையைப்பற்றி நாம் வேறென்ன சொல்லவேண்டும். அவனுடைய உண்மையான நடத்தைகளையும், யோக்கியதையையும், சாமர்த்தியத்தையும் கண்டு அந்தச் சாலையின் யஜமானி மிகவும் மகிழ்ச்சிகொண்டாள். அதனால், அவனையே தான் கலியாணம் செய்துகொள்ள வேண்டுமென்ற எண்ணமும் நாளளவிலே அவள் மனதில் உண்டாயிற்று. இனி எர்மனுக்கு நற்காலமே.

ஃ

அவளுடைய தொழிற்சாலை இதற்கு இணை மற்றெதுவும் இல்லையென்னும்படியான நிலைமைக்கு வந்தபிறகு, ஒருநாள் எர்மன் அந்தச் சாலையின் யஜமானியை நோக்கி, நான் எத்தனை நாளைக்கு ஒருவன் கீழ் வேலை செய்கிறது; சுயமாய் ஒரு தொழிற்சாலை ஸ்தாபிக்கவேண்டும்; எனக்கு செலவுகொடு என்று கேட்க, அவள் அவனது குற்றமற்ற மனதைக் கண்டு, மிகவும் மகிழ்ச்சிகொண்டு, "இந்தச் சாலை உங்களுடையதே யன்றி என்னுடைய தல்லவே; இதை விட்டுத் தாங்கள் மற்றெங்கே போவது" என்று சொல்லி, தன் விவாகக் கருத்தை வெளியிட்டு வேண்டிக்கொண்டாள். எர்மன் எந்த விதத்திலும் தடைசொல்ல முடியாமல் அந்தப் பெண்ணைக் கடைசியில் விவாகம் செய்துகொள்ளலானான். தன் யஜமானியே தன் மனைவியாவது பெரிய அதிர்ஷ்டமல்லவா? தெய்வம் கண் திறந்தது

சிலர் நான்கு ரூபாய்க்கு ஒன்றை வாங்கி அதை ஐந்து ரூபாயென்று சொல்லி ஏமாற்றி விடும்போது, பிறகு உண்மையான விலையைத் தெரிந்துகொண்டு கேட்டால், தங்கள் கமிஷனை எடுத்துக்கொண்டு கொடுத்ததாகக் கூறிச் சமாளிக்கப் பார்க்கிறார்கள். இவர்கள் எடுத்துக்கொண்ட கமிஷனை சாமான் வாங்கிவந்தபோதே தெரிவிப்பதன்றோ யோக்கியதையாகும். இது அவர்களின் அற்பமான கபட புத்தியையே காட்டுகிறது.

என்று சொல்லலாம். முயற்சி மெய்வருந்தக் கூலிதரும் என்பதும் நன்கு பலித்தது.

ஃ

ஒரு வருஷத்திற்கெல்லாம் அவர்களுக்கு ஒரு ஆண் குழந்தை பிறந்தது. அக்குழந்தைக்கு 'லாரேன்ஸ்' எனவே பாட்டன் பெயரை இட்டார்கள். (அந்த எளிய பாட்டன் இக்குழந்தையைக் கண்டு களிப்பதற்குப் பிராப்தியில்லை.) அம்மகன் நாளொரு மேனியும் பொழுதொரு வண்ணமுமாக வளர்ந்து வெகு புத்திசாலியா யிருப்பதுகண்டு, எர்மன், இச்சிறுவனை நன்றாய்ப்படிப்பித்து, பாதரக்ஷைக்காரன் பிள்ளையும் பிரபுவாகக்கூடும் என்பதை நமது அண்ணனுக்குத் தெரிவிக்க வேண்டுமெனத் தீர்மானித்து, அதற்கு வேண்டிய முயற்சி செய்துகொண்டிருந்தான். பின்பு அவர்கள் நாளுக்கு நாள் வர்த்தகத்தில் விருத்தியடைந்து மிகுதியாகப் பொருள் சேர்த்துக் கொண்டு, 'நற்குண நற்செய்கைகள் நிறைந்த நாயகமணிகள்' என்று யாவரும் கொண்டாட வெகு கண்ணியமாக வாழ்ந்திருந்தனர்கள்.

ஃ

இவ்வாறிருக்க, எர்மனுடைய சகோதரி பல துன்பங்கள் அனுபவித்து இறந்தாளெனவும், தாய் கூழுக்கும் கந்தைக்குங்கூட வழியில்லாமல் அல்லாடித் தவிக்கிறாளெனவும் எர்மனுக்குத் தொழில் கற்பித்த சிற்றப்பன் மூலமாய்த் தெரிய வந்தது. அது கேட்டு எர்மன் மிக்க விசனமடைந்து, தந்தையின் சமாதியைத் தரிசிக்க வேண்டுமென்று உத்தேசித்து அவ்விடம் சென்றான். அங்கே, தன் தாய் தவித்துக் கொண்டிருந்த தவிப்பைப் பார்த்து மனம் தாளாமல் தன் வீட்டிற்கு வந்து சுகமாயிருக்கும்படி அழைக்க, அவள், தன் கைப் பொருள் யாவும் செலவு செய்து காப்பாற்றிய மூத்த மகனும் மகளும் தன்னைக் கைவிட்ட செய்திகளை யெல்லாம் சொல்லிப் புலம்பி, தான் தெரியாமல் செய்த பிழைகளைப் பொறுத்துக் கொள்ளும்படி வேண்டிக்கொண்டு, அவனுடன் அவன் வீடு போய்ச் சேர்ந்து சுகமாயிருந்தாள். மிக்க கண்ணிய குணமுள்ள மருமகளும் தன் எளிய மாமியின் வார்த்தைக்கு எதிர் வார்த்தை சொல்லாமல் அதிக விசுவாசத்துடன் அவளை ஆதரித்து வந்தாள். உயர்குடியிற் பிறந்த பெண்கள் அதற்கேற்ப உயரிய குணஸம்பன்னைகளாகவே இருப்பர்.

ஃ

இதற்கு இடையில் சிறுவனான லாரென்ஸ் பல கலைகளைக் கற்றுத் தேர்ந்து பல பரீக்ஷைகளும் கொடுத்து நிபுணனானான்.

"எங்கேயோ இதைப் பார்த்திருக்கிறேன்" என்று ஞாபகம் வருதல்—பூர்வ வாசனை யென்னு கொள்ளவேண்டும்.

ஏர்மன் ஒரு பெரிய தொழிற்சாலைக்குத் தலைவனாய் ஒரு பெரிய பிரபுவென்று சொல்லத் தக்கவனாயிருந்தான். ஏர்மனுடைய அண்ணனே பெரிய கடன்காரனாய் தன் பெண்ஜாதியுடன் ஒரு பெண்ணையும் பிள்ளையையும் நடுத் தெருவில் அல்லாடவிட்டு இறந்து போனதாக அந்நகரத்து நியாயாதிகாரி வந்து தெரிவித்து, நீர்தான் இனி அவர்களைக் காப்பாற்றவேண்டுமென்றார். 'கடன்காரனாய்' என்ற பேச்சைக் கேட்டவுடனே ஏர்மன் எழுந்து குதித்துக் கூத்தாடி, "கடன்காரன் ஆனான்! கடன்காரன் ஆனான்! இன்றுதான் எனக்குச் சந்தோஷமாயிற்று" என்று கூவினான். ஏனெனில், தன்னை அவமதித்து அனுப்பிய அண்ணனிடம் கொடிய பகை கொண்டிருந்தான். அதனால் அவன் பல வருஷங்கள் வரையில் அண்ணனைப் பற்றி யாதொன்றும் விசாரிக்கவில்லை. அண்ணனை இறந்தவர்களில் ஒருவனாகவே கருதி, அவன் பெயரைக்கூட ஒருவரும் தன் முன் சொல்லக் கூடாதென்று திட்டஞ் செய்திருந்தான். சந்திரன் போல உலகமெங்கும் விளங்கிய அவனது கீர்த்தியில் இந்த ஒரே ஒரு சிறிய களங்கம் அமைந்திருந்தது அவனது அருமை மனையாட்டிக்குக் கூட அவன் இப்படி யிருப்பது சரியல்ல வெனவே தோன்றியிருந்தது. அண்ணன் செய்தி தெரிவிக்க வந்தவரிடம் முன்பு தன் அண்ணன் செய்த அவமதிப்பை ஏர்மன் எடுத்துக் கூறினான். அவர் இனி பேசினால் பேச்சு வளருமென்று, தான் சொல்லவேண்டியதை ஒரு கடிதத்தில் எழுதிவைத்துப் போய்விட்டார்.

ஃ

அக்கடிதத்தில் அண்ணன் மூத்தமனைவியின் துர்க்குணங்களால் கஷ்டதசைக்கு வந்தானென்றும், அவள் இறந்தபின் இரண்டாவதாக விவாகம் செய்த பெண் மிக்க குணவதியென்றும், அவளுக்கு ஒரு குமாரனும் குமார்த்தியும் உண்டென்றும், அண்ணன் தன் தம்பிக்கு முன்செய்த கொடுமையை நினைத்து மனம் வருந்தினானென்றும், தன் தம்பியிடமே போய் அவனை யடுத்துப் பிழைக்கும்படி தன் மனைவிக்குச்சொல்லி உயிர்விட்டானென்றும் தெரியவந்தது. இச் செய்தியை யறிந்த ஏர்மனுடைய குமாரன், உலகத்தில் ஒருவரும் வருந்தக் கண்ணால் பார்க்கப் பிரியமுடையவனல்லவாகையால், தன் தந்தையை சமாதானப்படுத்தி, பர்லின் நகரத்துக்குச்சென்று தன் பெரிய தந்தையின் மனைவியையும் இரு குழந்தைகளையும் அழைத்துக்கொண்டுவந்து தன் தந்தையிடம் சேர்ப்பித்துவிட்டான். அவர்களையும் ஏர்மன் தன் போஷிப்பில் வைத்துக்கொண்டான். ஏர்மனின் தாய் தன் மூத்த மருமகளையும் பேரப்பிள்ளைகளை

எவ்வளவு புண்பட்டவனாயிருந்தாலும், மீண்டும் அவ்விதமே புண்பட்டு வருந்துவது தனது அறியாமையாலும், தனக்குள்ளிருக்கிற பொறாமை, ஆத்திரம், வஞ்சகம், கோபதாபம் முதலியவற்றாலுந்தான். விதிவசத்தாலுங்கூட.

யும் கண்டு மகிழ்ந்தாள். எந்தக் குமாரனைக் கூடாதென்று வெறுத் தாளோ, அவனிடமே கடைசியில் தங்கி யிருக்கும்படியாகி, அந்தக் குமாரனே நன்றாக வாழ, மற்றவர்களெல்லாம் சீக்கிரம் உயர்ந்து சீக்கிரம் தாழ்ந்து மடிந்து மறைந்தவர்களாய்ப் போனதும் உலகத் தின் ஒரு பெரிய அனுபவமே.

ஃ

எர்மன் குமாரனுன லாரென்ஸுக்கு ஸ்விட்ஜர்லாந்தில் பெரிய நியாயாதிகாரி உத்தியோகம் கிடைத்தது. மேனுட்டினரின் ஸம்பிர தாயப்படி லாரென்ஸுக்கும் எர்மனுடைய தமயன் குமாரிக்கும் சம் பிரமமாக விவாகம் நடந்தேறியது அந்த சமயம் ஒருநாள் எல்லோ ரும் ஒன்றுகூடி யிருக்கையில் எர்மன் தான் கழுத்தில் கட்டிக்கொண் டிருந்த பையை அவிழ்த்து, அதனுள் இருந்த கடிதத்தையும் நாண யத்தையும் அனைவர்க்கும் காட்டி அதன் வரலாற்றை விவரமாகச் சொல்லி, பிறகு கடிதத்தைக் கிழித்தெறிந்து, அந்த ரூபாயைத் தெருவிலே போகிற ஒரு பிச்சைக்காரனுக்குக் கொடுத்துவிட்டு, "நான் என் தமையனுர் விஷயத்தில் கொண்டிருந்த பகை இதனேடு நீங்கிப்போயிற்று" என்று சொல்லிச் சந்தோஷித்தான். பாதரக்ஷைத் தொழிலென்றுலென்ன? முயற்சியும் ஒழுக்கமுமுள்ளவன் எந்தக் கேவலமான தொழிலைக்கொண்டும் மேன்பாடுற்றுத் தானும் மகோன் னத நிலையை எய்தி, அந்தத் தொழிலுக்கும் ஒரு புது மகிமையை உண்டாக்கிவிடுவான் என்பதற்கு எர்மனுடைய சரித்திரம் தகுந்த உதாரணமாகும். ஏழையான எர்மன் தன் அடக்கத்தினுலும், ஓயாத உழைப்பினது நன் முயர்சியினுலும், நல்லொழுக்கத்தாலும் முன் னுக்கு வந்தவிதம் நம் சிறுவர்கட்கு ஒரு நற்பாடமாகும்.

கடையில் வாங்கி உபசரித்தல்.

எவ்வளவோ சிரமப்பட்டு நாலு காய்கறிகளுடன் விருந்தினருக்குப் படைத்தால், பிரயாசையின் அருமையை யுணராமல், அப்படியப்படியே இலையில் வைத்துவிட்டு எழுந்துவிடுகிறுர்கள். இப்படி இலையில் வைத்துப்போகவா அவ்வளவு கஷ்டப்பட்டுச் சமைத்ததென்று மனம் முறிந்து போகிறது. பிரயாசையை உணராதவர்கட்குப், பக்ஷணக் கடையில் வாங்கி இலையில் வைத்துவிடுவது மேலாகும். அப்படியே காபி பலகாரமும் வாங்கிவந்து தந்துவிடுவது சுலபமா யிருக்கும். அவர்களுக்கும் அது ஒரு புத்தி கற்பித்த மாதிரி.

புரட்டாசி மாதம்.

புரட்டாசி மாதம் மிக்க புண்ய மாதம். அந்த மாதமுற்றிலும் விரதமிருந்து பகவானை வழிபடுவர். புரட்டாசி மாதத்தின் ஐந்து சனிக்கிழமைகளும் அதி விசேஷத்தைப் பெற்றவை. அந்த ஐந்து கிழமைகளிலும் பகவானுக்குத் தளிகையிட்டு ஏழைகளுக்கு அன்னதானம் வெகு வைபவமாகச் செய்வர். சிலர் கோயில்களுக்கு சமீபத்திலுள்ள தோப்புகளில் சமைத்துண்டு, ஏழைகளுக்கும் இட்டு மகிழ்வர். புரட்டாசி மாதத்தில் திருப்பதியில் ரதோத்ஸவ மாதலின், அங்குபக்தர்களின் கோலாகலம் சொல்லொணுது.

ஃ

புரட்டாசி மாதத்தில் பேயோட்டுதல் பிரபலமாய் நடைபெறுகின்றது. ஆங்காங்கு குறித்த தேவாலயங்களில் இராப்பொழுதுகளில் பெண்களிற் பலர் தலைவிரித்தாடுவதும்,பேயோட்டுவதும், தீபப்பந்தத்துடன் வந்து அவர்களைப் பிடித்துள்ள பேயைத் துரத்துவதும் எவரும் இரங்கத்தக்க காட்சிகளா யிருக்கும். சாதாரண பிச்சைக்காரர்களெல்லாம் புரட்டாசி மாதத்தில் புதுஉருவினராய் மாறிப் பிரதி சனிக்கிழமைகளிலும் கோவிந்தா கோவிந்தா என்று கூறியவாறு பிச்சை கேட்பர். புரட்டாசி மாதத்திய மஹாளய அமாவாசை மிகவும் விசேஷித்தது. அன்று சிரார்த்தம் முதலியவைகளைச் சிரத்தையுடன் புரிவர்.

ஃ

புரட்டாசியில் வரும் நவராத்திரி விரதம் எங்கும் கொண்டாடப்படும். கோயில்களில் விசேஷ உத்ஸவங்கள் நடைபெறும். நவராத்திரி யென்பது புரட்டாசி மாதம் பூர்வபக்ஷம் பிரதிமை திதி முதற்கொண்டு நவமி வரையிலுள்ள ஒன்பது தினங்களுக்குப் பெயராகும். முக்கியமாய் இந்த நவராத்திரிகளில் ஸ்ரீ வித்யா உபாசகர்கள் உபாசனை செய்தால் மந்திர சித்தியடைவார்கள். மேலும், இக்காலங்களில்தானே சகலவிதமான மந்திர உபநிஷத்துகள், புராணங்கள், தோத்திரங்கள், ஜெபங்கள், பாராயணங்கள் செய்து வந்தால் விரைவில் இஷ்டசித்தியாம். துர்க்கா, லக்ஷ்மி, ஸரஸ்வதி இம்மூவர்களையும் மும்மூன்று தின ாக ஒன்பது தினமும் இராக்காலங்களில் பூசிப்பது மகா விசேஷமானதினுல் இதற்கு நவராத்திரி எனப்பெயர் வழங்குவதுமுண்டு. இந்த ஒன்பது தினமும் பூஜை செய்ய சாவகாசமில்லை யென்ருலும், கடைசி தினமாகிய நவமியன்றைக்கு வித்யாபீடமாகிய புஸ்தகங்களை வைத்து, துர்க்கா, லக்ஷ்மி, ஸரஸ்வதி இம்மூவர்களையும் வேதவிதிப்படி பூசித்தல் உத்தமமாகும். அவ்வாறு பூசிப்பதால் அத்தினத்திற்கு "மஹாநவமி" என்றும், ஸரஸ்வதியைப் பூசித்தால் 'ஸரஸ்வதி பூஜை" என்றும், ஆயுதங்களை வைதது்ப் பூசிக்கிறதினுல் "ஆயுத பூஜை" யென்றும் பெயர். மறுநாள் தசமிதிதிக்கு விஜயதசமி யென்று பெயர். அன்றைக்குத்தான் நூதன வித்யாரம்பம், அஸ்திர சஸ்திர வித்தையறிந்தவர்கள் ஆயுதமெடுத்து விளையாடல், வாசித்தோர் கிரந்தங்களைப் படித்தல் முதலியவற்றை முக்கியமாகச் செய்வார்கள். இதனுல் காரியசித்தி என்று பெரியோரும் கூறுகின்றனர். இவ்வாருகப் புரட்டாசி மாதம் புண்ணிய மாதமாய் விளங்குகின்றது.



1. பிறர் தன்னை நம்பும்படி பசப்பு வார்த்தைகள் சொல்லி மயக்கிவிட்டு, அப்பால் தன் காரியம் ஆனதும் மெதுவாய் நழுவிக்கொண்டு, பிறரை அலற வைப்பவரைச் சீக்கிரம் கடவுள் அவர்கள் வாழ்வை அலறவைத்து விடுவது நிச்சயம்.

2. அவர்களைப்போல் தானும் அந்த மாதிரியாகக் காரியங்களை நிறைவேற்ற முடியாத பலஹீனமான மனிதர்களிடம்தான் பொறாமை அதிகம் தலைவிரித்தாடுகிறது.

3. நம்முடைய சொந்த ரகஸ்யங்களோ விஷயங்களோ மற்றவர்களுக்கு எவ்வளவுக்கெவ்வளவு தெரியாதிருக்கிறதோ அவ்வளவுக்கும் நமக்கு மதிப்பும், கௌரவமும், சந்தோஷமுமாம். நமது ரகஸ்யம் தெரிந்துவிடின் சஞ்சலமே. தாழ்வே.

4. கேட்கும் வார்த்தைகளுக்குப் பதில் சொல்வதற்கே பின்வாங்குபவர்களில் சிலர், எங்கு தங்கள் கௌரவம் குறைந்துவிடுமோ என்ற அகந்தையினால், அவர்கள் அவ்விதம் இருக்கும்படி அவர்களின் மனம் செய்கிறது.

5. மாதத்திற்கு ஒருமுறை சந்திப்பவரை, ஒரு வருஷத்திற்கு ஒரு தடவை சந்திப்பின் அருமையாகவும் ஆனந்தமாகவும் இருக்கும்.

6. ஒவ்வொரு சொல்லுக்கும் குற்றமே கண்டுபிடித்துக்கொண்டிருப்பவர்களுக்கு நல்லது சொல்லினும் அதுவும் குற்றமாகவே தோன்றுகிறது.

7. தபால் மூலமாக எவ்வளவோ கடிதங்கள் நேசத்தோடு கலந்து கூத்தாடுகின்றன. அவர்களை நேரில் போய் காணிலோ—சில நிமிஷத்திற்குள் பேச்சுகள் பேசி முடிவடைந்துவிடும். பிறகு தூஷணை வார்த்தைகளும் வம்பும் சச்சரவுமே அதிகம்.

8. சிலர் மனைவியின் கொடுமைக்கெல்லாம் பட்டுக்கொண்டு நிற்கிறார்கள். குழந்தைகளின் காரணமாகவும் சிலர் விலக முடியாமல் தவிக்கிறார்கள்.

9. எவரெவர் எவ்வாறெல்லாம் சொல்லுகிறார்களோ அவர்களுக்கெல்லாம் சரி சரி என்று தலையசைத்தால் நல்லவராகலாம். — இல்லாவிடிலோ அவர்கள் ஒரு மாதிரியானவர்கள்— என்ற பட்டம் சூட்டப்படுகிறது.

10. தாயின் அன்பு ஒரு கணப்பொழுதேனும் நம்மீது உண்டாகுமாயின் அதன்பிறகு நமக்கென்ன குறைவு என்று அந்த அன்புக்கு ஏங்கிக்கிடக்கும் மக்களும் எத்தனையோ பேர் உலகில் இருக்கின்றனர்.

11. நம்மிடத்தில் பிரியமாயிருப்பவர்களிடத்தில்தான் பிரியமான பேச்சுகள் பேச மனம் தூண்டுகிறது. மற்றவர்களிடமோ மனம் தூண்டுவதில்லை, சொற்களும் அவ்வளவு

விபசாரத்துக்கு மறுத்து யோக்கியனாக நடந்தவன் ஏழையாவதும், மறுக்காது துணிந்தவன் செல்வவந்தனாவதும், எத்தனை அந்தரங்கமான விபசாரமும் வெளியில் வந்து விடுவதும் விநோதமே.

தாராளமாகப் புறப்படுவதுமில்லை. இதுவும் ஒரு விசித்திரமே.

12. தாய்வீடு செல்லப் பிடிவாதம் செய்யும் உன் மனைவியை நீ நன்மொழி பகர்ந்து நிறுத்திவைத்துக் கொள்வதினால் உனக்கு ஒரு பயனுமில்லை. அவள் உன்னிடத்திலிருந்து உன்னைக் கவனிக்காமல் சண்டைகளும் சச்சரவுகளும் பண்ணிக்கொண்டேதானிருப்பாளே தவிர நீ ஒரு பயனும் அடையப்போவதில்லை. அவளைவிட்டுப் பிரிய நீ கஷ்டப்படுகிறாயே தவிர. உன்னைவிட்டுப் பிரிய அவள் கஷ்டப்படவில்லை.

13. எவ்வளவு நெருக்கடியான காலத்திலும் தங்கள் தங்கள் க்ஷேம லாபங்களையே பெரிதென நினைத்து, அவரவர்களுக்குத் தேவையானவைகளை அந்தந்தக் காலத்திலேயே தாங்களே போயிருக்கிற வீட்டில் பெற்று, சுயநலப்புலிகளாகத் திரிபவர் எத்தனையோ பேர் இருக்கிறார்கள்.

14. வீட்டில் வீணாகக் காலங் கழிக்கும் எத்தனையோ பேர் பிறர் வீட்டில் வந்தால். அங்கு பொழுதே போவதற்கு வசதி இல்லையென்றும், வீணாகக் காலங்கழிக்கவேண்டியிருக்கிறதென்றும் கூறுபவர் சிலர் உளர்.

15. தன் வீட்டில் சோம்பித் தூங்கிக்கொண்டிருந்தாலும் பிறர் வீட்டில் சில நிமிஷ நேரங்கள் காத்திருக்கப் பொறுமை உண்டாவதில்லை.

16. மற்றவர்களுடைய உடை, படுக்கை முதலியவைகளைக் கண்ணுக்குத் தென்பட்டவைகளையெல்லாம் எடுத்து வந்து தங்கள் இஷ்டப்படி உபயோகித்துவிட்டு, பிறகு அதை எங்கேனும் ஒரு மூலையில் எறிந்துவிட்டு அல்லது சுற்றிக்கொண்டு செல்வோரும் பலர்.

17. தான் வைத்த துவேஷமும் அலக்ஷியமுமே தனக்கு சாபமாகவும், சோதனையாகவும் முடிந்துவிடுவதுமுண்டு. சைக்கில் வாங்கிய மறுநாளே தனது அலக்ஷியத்தால் காலொடிந்து நொண்டியாவதுமுண்டு. தான் துவேஷித்தோர் அதிக செல்வாக்கினராய்விட, அதனால் தான் சேவலப் படும்படி நேர்வதுமுண்டு.

S. விஜயலக்ஷ்மி அம்மாள்,

அவனாசி.

ஒருவரைப்பற்றி நீ தூஷித்தும் விரோதித்தும் பேசக்கூடுமென்று நினைத்து உன்னிடம் வார்த்தையாட வருவோரிடம் நீ அந்த ஒருவரை மேன்மையாகவே சிறப்பித்துப் பேசி. அவரது குணங்களை உயர்த்திக் கொண்டாடினால், உன்னிடமிருந்து ஏதாவது வார்த்தைகளைப் பிடுங்கி அதைக்கொண்டு கோள்மூட்ட நினைத்து வந்தவர்கள் எந்த சரக்கும் உன்னிடம் கிடைக்காமல் ஏமாறிவிடுவார்கள். அவ்விதம் ஏமாறச் செய்வதே சாமர்த்திய வேலை.

வீட்டு ஆடவர்கள் வெளியூரில் இருக்கையில் வீட்டுப் பெண்கள் வெகு செட்டும் சிக்கனமுமாகச் செலவிடுகிறார்கள். அதில் மிச்சமும் பிடிக்கிறார்கள். வீட்டு ஆடவர்கள் வந்துவிட்டபோதோ முன்னையிலும் இரட்டித்த செலவைச் செய்யும்படி தூண்டுவதுடன், ஆடவர்களின் மனம் ஒடிந்துவிழுமாறும் செய்கின்றனர்.

பிரபஞ்ச தரிசனம்



போங்கோ தேசவாஸிகள்:—

ஆப்பிரிக்காவிலே நீல நதிக்குத் தெற்கே போங்கோ என்னும் தேசமுண்டு. அங்குள்ளோர் சிவந்த பழுப்பு நிறமுள்ளவர்கள். கருத்த ரோமத்தினர். ஆனால், மயிர் அரை அங்குல நீளங்கூட இல்லை. மீசையும் தாடியும் கிடையா. வஸ்திரமோ, தோலோ உடுப்பர். ஸ்திரீகள் ஆடையின்றி, நகைகளை மட்டும் தரித்துத் தலையை மொட்டை யடித்துக்கொண்டிருப்பர். பக்ஷிகளின் சிறகு, நாய்ப் பற்கள், நரித்தோல் முதலியனவே ஆபரணம். இவர்கள் மேலுதட்டைத் துவாரம்செய்து அதில் ஒரு கம்பியை நுழைத்துக்கொண்டு மகிழ்வர். கையின் விரலிலும் மணிக்கட்டிலும் பலவித இரும்புவளையல்களைத் தரிப்பர். கல்யாணமான பிறகு கீழுதட்டைக் குடைந்து அதில் மரக்கட்டையைச் செலுத்தி நீளமாக்குவர். மூக்கிலும் அநேக துவாரங்களைச் செய்து அவற்றில் இருப்பு வளையங்களையணிந்துகொள்வர். காதுகளிலும் அப்படியேதான். இடுப்புக்குமேல் பற்பல இடங்களில் பச்சை குத்திக்கொள்வர். ஐயோ! இந்தப் போங்கோ ஸ்திரீகளைக் கண்டால் கோரமா யிருக்கும்.

ஃ

கல்யாணம் செய்துகொள்ள விரும்புவோன் பெண்ணுக்கு விலை கொடுக்கவேண்டும். அதாவது, ஒரு சேர் எடையுள்ள மூன்று இருப்புத் தகடுகள் தரவேண்டும். தாய்மார்கள் குழந்தைகளை வெள்ளாட்டுத் தோலால் கட்டி முதுகில் ஏற்றிக் கொள்வர். பெரிய குழந்தைகள் மட்டும் குடிசையில் தூங்கவேண்டும். போங்கோ குடிசைகளுக்குக் கதவுகள் மிகச் சிறியவை. நகர்ந்துதான் உள்ளே செல்லவேண்டும். தரைகள் மண்ணால் ஆக்கியது. ஜனங்கள் அந்தத் தரையில் வெள்ளாட்டுத் தோல்களை விரித்துத் தூங்குவர். தலையணைக்குப் பதிலாய் ஒரு மரத் துண்டை வைத்துக்கொள்வர். ஸ்திரீகளுக்கு முக்காலிகள் ஆஸனம். புருஷர்கள் எப்போதும் தரையிலேதான் உட்காருவர்.

ஃ

ஐவ்வரிசி, சோளம் முதலியன பயிர் செய்யப்படுகின்றன. வேட்டையாடுதல், மீன் பிடித்தல் ஆகிய தொழில்களை ஆசரிக்கிறார்கள். அவர்களுடைய தேசத்தில் உப்பு கிடை

மனதைக் கவர்ந்து சீர்திருத்துவதற்கு ஆடவரின் மேடைப் பிரசங்கத்தைவிட, பெண்களின் மேடைப் பிரசங்கம் அதிக பலன் தரும். ஆடவரின் பிரசங்கம் வீட்டிற்குள் நுழையாமல் வெளியில்மட்டும் நிற்கும். பெண்களின் பிரசங்கமோ சமையற்கட்டுக்குள்ளும் சயன அறைக்குள்ளும் சென்று உலாவித் தீவிரத்திற் பயன் நல்கும்.

யாது. அதற்காக அவர்கள் ஒருவித குத்துச் செடிகளை நெருப்பிலிட்டுக் கொளுத்திச் சாம்பலாக்கிக்கொள்வர். புகையிலை விளைவு அதிகம். அவர்களைப்போல் புகையிலையை உபயோகிப்போர் இல்லை. நாய் மாமிசம் ஒன்று நீங்கலாக, எலி, பாம்பு, தேள், புழு, பல்லி முதலிய எல்லாவற்றையும் தின்பர். அழுகிப்போன இம் மாமிஸங்கள் அவர்களுக்கு அதிக ருசிகரமாம். இந்த ஜாதியார் ஒருவித வாத்தியங்களை வைத்துக்கொண்டு பாடுகிறார்கள். ஒரு ஸமயம் இவர்கள் பாடுவது நாய் கத்துவதுபோலும், ஒரு ஸமயம் பூனை கத்துவதுபோலும், ஒரு ஸமயம் பசுவின் குரலைப்போலும் இருக்கும். முதலில் கொஞ்சமாய் ஆரம்பித்துப் பின்னர் தொண்டையெட்டமெட்டும் கூவிப் பாடுவது கர்ண கடூரமாயிருக்கும். பிசாசுகளையன்றி வேறு தெய்வத்தை இவர்கள் வணங்குகிறதில்லை. அவர்களின் புத்திக்குத் தகுந்த தெய்வம் கிடைத்திருப்பதும் ஆச்சரியமே.

ஃ

13—மைலுள்ள குகை:—

பிரான்ஸ், இட்டாலி, ஸ்விட்ஸர்லெண்டு இம்மூன்று ராஜ்யங்களுக்கும் மத்தியில் பர்வதபங்தி யிருக்கிறது. இதில் இரயில் போவதற்காக மூன்று வழிகள் ஏற்கெனவே ஏற்பட்டுள்ளன. மறுபடியும் அதே மலையில் நாலாவது வழியைப் புதிதாய்க் கடைந்து தயார் செய்து அதற்கு ஸிம்பலான்குகா மார்க்கம் என்று பெயரிட்டிருக்கின்றனர். இது 13-மைல் நீளமுள்ளது. இதைவிட பெரிய குகை மார்க்கம் பூலோகத்தில் கிடையாது. இக்குகையைக் குடையும்போது உண்டான கஷ்டங்களும் தொந்திரவுகளும் சொல்லொணாது. கூலி ஜனங்கள் உஷ்ணத்தால் வருந்தினர். அவர்களின் தாபத்தை நீக்க குழாய் மூலமாய் காற்றும் தண்ணீரும் கொண்டு போகவேண்டியதாயிற்று. அவ்வழியில் ஒரு கல்லைப் பேர்க்கும்போதே திடீரென்று தண்ணீர் தோன்றி குகையை மூடிக்கொண்டது. எத்தகைய கஷ்டம் வந்தாலும் அவைகளைப் பொறுத்துக்கொண்டு, வேலையை முடிப்பதிலேயே மனம்வைத்து, திருப்தியாய்க் குகையை முடித்தார்கள். முதல் முதல் இட்டாலியா அரசர் ரெயிலேறிச் சென்று பார்த்தார். இரண்டு புறங்களிலிருந்து வேலையை ஆரம்பித்து மத்தியில் இருதிறத்தாரும் ஸந்தித்து அபாயமில்லாமல் வேலையை நடத்தும்படி பிளான் போட்ட இஞ்சினியர்களுடைய ஸாமர்த்தியத்தை யாரே கொண்டாடாதார்?

ஃ

காட்டுச் சாதியார்:—

காட்டுச் சாதியாரில் முக்கியமாய் உழைத்து ஸம்பாதிப்பவர்கள் ஸ்திரீகளே. புருஷர்கள் வேட்டையாடுவது, சண்டையிடுவது ஆகிய இரண்டு காரியங்களைத் தவிர, குடும்பத்துக்கு உபயோகமான பொருளீட்டலைச் செய்வதில்லை. பாதி நாகரீகம் பரவிய தேசங்களில் முக்காற்பங்கு வேலையை ஸ்திரீகளே செய்கின்றனர். பிரயாண காலத்தில் மூட்டைகளை ஸ்திரீயின் தலையில் தூக்கிவைத்துப் புருஷர்கள் உல்லாஸமாய்ப் போகின்றனர் பர்

சிலரது துர்க்குணங்களைக் காணுகையிலும், எழுதும் கடிதங்களிளெல்லாம் குற்றங்கண்டு பிடிப்பதைப் பார்க்கும்போதும் அத்தகையோருக்குக் கடிதம் எழுதாமலே மௌனமாயிருந்து விடுவதே மேலென்று தோன்றிக் கடிதம் எழுதாமலே இருந்து விடுகிறார்கள்.

மாவில் பர்மன் சுருட்டு பிடித்துக் கொண்டு சும்மா உட்கார்ந்திருப்பான். அவனுடைய மனைவியே எல்லா வேலைகளையும் செய்வாள். ஒவ்வொரு நாட்டிலும் ஸ்திரீகளின் நிலைமையை யறிந்தால் அந்நாட்டின் நாகரீகம் ஒருவாறு தெரியவரும்.

ஃ

அரசர்களின் போக்குகள்:—

மாஜி ஜெர்மன் கெயிஸர் எவரும் தம்மிடத்தில் அட்டகாசம்செய்து கேலிகாட்டி ஜோலி விளைக்க இடம் கொடுப்பதில்லையாம். அவர் கன்னத்திலடித்தாலும் உடனே கோபம் உண்டாகாதாம். வெகு நிதானமாக யோசிப்பாராம்.

ஃ

பெர்ஷியா அரசர் ஒருமுறை பைஸிக்கில் ஏறத்தெரியாத தனது உத்தியோகஸ்தர்கள் இருவரைக் கட்டாயப்படுத்தி ஏறச்செய்து, அவர்கள் கீழே விழுந்தபோது, கொஞ்சம் பழக்கம்தான் வேண்டியது, என்று சொல்லிச் சிரித்தாராம். விளையாட்டு நடத்தை இவருக்கு அதிகமாம்.

ஃ

முதலாவது பிரான்ஸிஸ் அரசர் கொரேமான விளையாட்டால் கொடூரம் விளைப்பாராம். 'ஸைன்ஸ்' நிபுணரான ஜோக்கோப் பால் என்பவரிடம் ஒரு குரங்கைச் சிங்காரித்தனுப்பி அதை அவரது மகன் என்றுகூறி அதைக் கட்டி அணைத்துக்கொள்ளுமாறு கட்டாயப்படுத்தினாராம். ஜோக்கோப்பால் இறந்ததும் அவருக்கு ராஜகோலம் அணிவித்து ஒரு சாராயப் பீப்பாயில் அவரை யடக்கம் செய்து நகைத்தாராம்!

ஃ

மூன்றாவது சார்லஸ் அரசர் மஹா சேஷ்டையுடையவராம். மாறுவேஷம் பூண்டு குடிகளை அடித்தும் திட்டியும், அவர்கள் அடிப்பதையும் திட்டுவதையும் வாங்கிக்கொண்டும் திரிந்து வருவாராம். கடைக்குள் புகுந்து கண்ணாடி முதலியவைகளைத் துராக்கிரமமாய் உடைத்து, அவர்களைப் பழித்து, அவர்கள் திட்டுவதைக் கேட்டுக் கக்கட கக்கடவெனச் சிரித்துக் காலங்கழித்துக்கொண் டிருப்பாராம்.

ஃ

வியாபாரத்தில் நுழைந்து அநேக அரசர்கள் வேண்டியபொருள் ஸம்பாதிக்கிறார்களாம். வியாபாரம் செய்வதில் தாழ்வில்லையென்று வர்த்தகம் செய்யத் தூண்டியது மாஜி கெய்ஸர் அரசராம். இவர் முன்பு தமது பேரிலேயே மண்பாத்திர வியாபாரம் செய்து ஏராளமான திரவியம் ஸம்பாதித்தாராம். ஹாலண்டுதேச ராஜகுமாரர் இறைச்சி, மெழுகுவர்த்தி, பாதரக்ஷை முதலியவற்றில் வர்த்தகம் செய்து அளவற்ற திரவியம் சேகரித்தாராம். வர்டெம்பர்க் அரசர் அடை, பணியாரம் முதலியவற்றில் வர்த்தகம் நடத்தினர். மாக்ஸ் ஈகன் என்பவர் சாராயம் விற்கும் வியாபாரமும், ஜோஹான் ஜார்ஜ் என்பவர் ஸோப் வியாபாரமும் ஏராளமாய்ச் செய்தவர். யூராக் தேசத்து சார்லஸ் என்பவர் பட்டு வியாபாரமும், பலேரியா தேசத்து ஆர்னுலப் என்பவர் திராட்சரஸ வியாபாரமும் செய்தவர்கள். லியோபால்ட் N. என்பவர் தம்முடைய மொஹர்பதித்து கோழிமுட்டைகளை விற்பதிலும், சுண்ணாம்புக் கால்வாயிலும் அதிக பணம் ஸம்பாதித்தவர். ப்ரேடிரிக் II என்பவர் மர வியாபாரம் செய்தவராவர்.



ஹாஸ்ய சஞ்சீவினி



வைதீகன்:—அம்மா, தங்களுடைய பர்த்தா இறந்துபோய் ஒரு வருஷத்துக்கு மேலாகிறது. இன்னும் கேசத்தை யெடுக்காமல் வைத்துக்கொண்டிருக்கிறது அழகாயில்லை.

விதந்து:—நான் மயிர் வைத்துக்கொண்டிருக்கிறது அழகாயில்லையோ? உம்முடைய தலையிலும் உம்முடைய மனைவியின் தலையிலும் அருகன் கட்டைபோல் மயிர் இருப்பது வெகு கோரமாய்க் காணப்படுகிறது. நீங்கள் இரண்டுபேரும் முதலில் மொட்டையடித்துக் கொள்ளுங்கள்.

வைதீகன்:—உங்களுடைய கேசம் அழகாயில்லையென்று நான் சொல்லவில்லை. புருஷனை இழந்தவர்கள் தலையில் மயிர் வைத்துக் கொள்ளலாகாது. அது அசாஸ்திரீயம் குடும்பத்துக்கு க்ஷேமகரமன்று.

விதந்து:—நான் மயிர் வைத்துக்கொண்டிருப்பது என் குடும்பத்துக்கு மகத்தான க்ஷேமத்தை விளைத்துக்கொண்டிருக்கிறது. நான் கொடுக்கும் தக்ஷிணையை வாங்கிக்கொள்ள உம்மைப்போல் எத்தனையோ வைதீகர்கள் வருகின்றனர். என்னுடைய க்ஷேமத்திற்கு என்ன குறைவு? இனி இப்படி உளறவேண்டாம். புருஷனையிழந்தவர்கள் தலைமயிர் எடுக்க வேண்டுமென்பது சாஸ்திரீயமோ? சாஸ்திரத்தை நீர் கட்டி யழும். தரித்திரம் உம்மைப் பீடிக்கட்டும். நான் ஒருபோதும் முண்டனம் செய்துகொள்ளேன். உடன்கட்டையேறும் கொடிய வழக்கம் நின்றுபோயிற்று. சிறு குழந்தைகளுக்கு விவாகம்செய்வதும், ருதுவாவதற்குமுன் கல்யாணம் செய்யாவிடில் ஜாதிப்பிரஷ்டம் நேருமென்பதும், சர்க்கார் தண்டிப்போமென்று சட்டம் ஏற்படுத்தியதால் எல்லோரும் அக்கொடிய வாடிக்கைகளைத் தொலைத்தனர். இன்றைக்கு அப்படியே கருணைதங்கிய பிரிட்டிஷ் கவர்ன்மெண்டார் விதந்துகளுக்கு முண்டனம் செய்யக் கூடாதென்று ஒரு விதி ஏற்படுத்தினால் அப்போது நீரும் உம்மைப் போன்ற இரக்கமற்ற பாபிகளும் என்ன செய்யக்கூடும்? இந்தியன் பின்ல்கோடிலுள்ள ஸெக்ஷன்கள் உங்கள் கழுத்தில் ஏறி உட்கார்ந்துகொண்டிருக்கின்றன. ஐயோ! என்ன மடமையிது? விதந்துவின்கண் பரபுருஷனைப் பார்க்குமென்று அதை யாரேனும் பிடுங்க வேண்டுமென்று சொன்னால் நீதியாமா? இதைப்போலவே, மயிரைச் சிறைத்துவிடவேண்டுமென்ற அம்பட்ட புத்தியை யுடைய வைதீகர்கள் செய்யும் காரியமும், ஆலோசனையுமாம். பிரளயம் வந்தாலும் நான் என் கேசத்தை எடுக்கமாட்டேன். நான் கேசம் எடுக்காததால் தன் தாயின் முகரூபத்தைத் தான் இழக்கவில்லையென்று என் குமாரன் திருப்திபட்டுக்கொண் டிருக்கிறான்.

வைதீகன்:—தாங்கள் இப்படியெல்லாம் பேசக்கூடாது. முன்னோர்களின் ஸம்பிரதாயத்துக்கு விரோதம் செய்வது நலமல்ல.

ஸம்ஸாரி ஸந்யாசியைப்போல் காவிவேஷ்டி தரிக்கலாம். கையில் தண்டத்தையும் கமண்டலத்தையும் கொள்ளலாம். பிள்ளை பெண்ஜாதிகளின் மேலுள்ள பிரீதி மாறாது. விஷத்தைப் பொற்பாத்திரத்தில் வைக்கலாம். விஷத்தின் தன்மை மாறாது.

விதந்து :—என் ஸம்பிரதாயத்துக்கு விரோதம் சொல்லாதீர். என்னுடைய தயவைப் பிச்சைக்காரன் போலிருந்து யாசிக்கிற நீர் எனக்குப் போதகாசிரியராக ஏற்பட்டுப் புத்தி சொல்ல வரவேண்டாம். உம்மைவிட நான் அதிகம் வாசித்தவளே. ரயில் வண்டி ஏறுவது ஸம்பிரதாயமோ? சங்கராச்சாரியார் மோட்டார்வண்டியில் ஏறுவது ஸம்பிரதாயமோ? கண்டவன் காய்ச்சிய ஜலத்துடன் சேர்ந்த இங்கிலீஷ் மருந்தை யுண்பது ஸம்பிரதாயமோ? கோழிமுட்டை சேர்ந்த ஓவல்டின்னும், மாட்மொமிஸ ஸாரம் கலந்த வின்கார்னீஸ் பல மருந்தும் உண்பது ஸம்பிரதாயமோ? சட்டை பூட்சு போட்டுக்கொள்வது, இதர வர்ணத்தாரோடு காபி ஹோட்டலில் உண்பது ஸம்பிரதாயமோ? என் ஆந்தைபோல் விழிக்கிறீர்? முதலில் அந்த ஸம்பிரதாயங்கள் ஏற்பட்டதற்கு ஏதேனும் பரிகாரம் செய்யும். பின்னர் என் தலைமயிரை வாங்கும்படி எனக்கு உபதேசிக்க வரலாம்.

வைதீகன்:—அம்மா, கேசமில்லாவிட்டால் நாலுபேர்கள் உங்களைக் கெட்ட எண்ணத்தோடு பார்க்கமாட்டார்கள். அதற்காகச் சொன்னேன்.

விதந்து:—பதினாயிரம் பேர்கள் என்னைக் கெட்ட எண்ணத்தோடு பார்த்தாலென்ன? என்னுடைய மனமன்றோ நிர்மலமாயிருக்கவேண்டும். என் கண்கள் யாரையும் துரெண்ணத்தோடு நோக்கா. என் மனதை யடக்கி யாளும் சக்தி எனக்குண்டு.

வைதீகன்:—அப்படிப் பிடிவாதம் செய்தால் நாங்கள் உங்களுடைய கிருகத்திற்கு வரமாட்டோம். உங்களைக் கிராமத்தார் ஜாதிப்பிரஷ்டம் செய்வர்.

விதந்து:—என்ன சொன்னீர்? நீங்கள் என் வீட்டுக்கு வரமாட்டீர்களா? வாராதிருக்க வேண்டுமென்பதே என் பிரார்த்தனை. உங்களுக்குத் தானம் கொடுப்பதில் ஒரு புண்ணியமுமில்லை. அது ஏமாற்றிப் பறிக்கிற ஒரு தந்திரம். பீடைகளாகிய உங்களாலேதான் அநேக சிறிய பெண்கள் சிரமுண்டிதம் செய்துகொண்டுஆயுள் முடிய கோர ரூபிகளாய் அவஸ்தைப்பட்டனர். அவர்கள் அழுத கண்ணீர் உங்களுக்குத் தரித்திரத்தை விளைத்து எச்சிலுக்குப் பறக்கும் காக்கைகளைப்போலாக்கியது. ஏ வைதிகனே! நீ ஸ்மார்த்தன். உன்னை வைஷ்ணவன் பஹிஷ்காரம் செய்திருக்கிறானே! அவன் வீட்டிற்குள் நீ போய் பந்தியிலுட்கார்ந்து போஜனம் செய்ய முடியுமா? உன்னைப் பிதிர்சிரார்த்தத்திற்குப் பிராமணனாக வைஷ்ணவன் வரிப்பானா? இல்லையன்றோ? அவன் உன்னைப் பிரஷ்டனாக மதிக்கிறான். நீ அவனைப் பிரஷ்டனாக எண்ணுகிறாய். அதுபோல் நான் உன்னை ஹரிஜனத்தைச் சேர்ந்த தாழ்ந்த ஜாதியானாக எண்ணுகிறேன். இன்றுமுதல் நீ என் வீட்டுக்கு வரவேண்டாம். மகாத்மாஜீயை நிந்திக்கும் நீசனாகிய நீ இப்போதே என் வீட்டைவிட்டுத் தொலைந்து போய்விடு. உமக்கு என்ன மதிப்பு இருக்கிறதென்று குதிக்கிறீர்? கோவில் தாசிகளுக்கு மாப்பிள்ளைகளைத் தேடிவைக்கிற உனக்கு 4-அணா கொடுப்பதைவிட யோக்கியனான வேறொரு பிராமணனுக்கு 1-ரூபா கொடுக்கிறேன். உனக்கெதிரில் ஆயி

அதிர்ப்தி யுண்டாகிவிடும்போது இயற்கையாயிருந்த சுறுசுறுப்பு அடங்கிவிடுகிறது. எதை ஆவலுடன் செய்ய நினைத்திருந்தானோ அதில் அலக்ஷிய சிந்தை யுண்டாகிவிடுகிறது. மனிதனே 'வேறு விதமாக மாறி விடுகிறான்.

ரம் பிராமணர்களை இதோ வரவழைக்கிறேன்.

வைதீகன்:—அம்மா, கோபிக்க வேண்டாம். நான் ஏதோ ஹிதம் என்று எண்ணிச் சொன்னேன். நான் சொல்வது உங்களுக்கு இஷ்டமில்லாவிட்டால் தாராளமாக மயிர் வைத்துக்கொண்டிருங்கள். பிறருக்குக் கொடுக்கும் ஒரு ரூபாய் தக்ஷிணையை எனக்குக் கொடுக்கலாகாதா? நான் தாஸானுதாஸனாகக் காத்திருப்பேன்.

II

பத்மா:—அவர் ஜபம் செய்ய ஆரம்பித்து விட்டால் சரியாக இரண்டு மணி நேரமாகிறதே?

ரங்கா:—அவர் தனது ஜபத்தைப் பலருக்கும் காட்டி, அதைத் தான் பிழைக்கிற ஒரு வழியாய் வைத்திருக்கிறார். பெரிய 'பிடுங்கல்' மனுஷன். ஊராரிடமிருப்பதைப் பிடுங்கிக்கொண்டு போகிற பாவம் தீரவோ, அல்லது வேறு வேலை வெட்டிகள் இல்லாததாலோ தான் இந்த நீண்ட நேர ஜபமாக்கும்!

ஃ

மீனு:—ஏண்டி சேஷி! உன் பெண்ணுக்கு 12-வயசாச்சே. சும்மா இருக்கிறாயே. கல்யாணம் எப்போ?

சேஷி:—16-வயது வந்த பின்பு தாண்டியம்மா. இப்போ செய்துவிட்டு, நாளைக்கு சாரதா சட்ட வழக்கு வந்தால் வக்கீலுக்கு யார் அழுகிறது? கோர்ட்டுக்கு நூறு நூறு ரூபாயாக யார் தொலைப்பது? அந்தத் தொல்லை வேண்டாமடியம்மா.

ஃ

கிரகஸ்தன்:—தாங்கள் இரவில் சாப்பிடுவதில்லையா? அப்படியா சங்கதி! பால் சாப்பிடுவீர்களா?

வைதீகர்:—பாலுக்குத் தோஷமில்லை, அது சாப்பிடலாம்.

கிரகஸ்தர்:—இப்போது என் வீட்டிலுள்ளது சாதம் காய்கறிகள்தான். பால், சர்க்கரை வேண்டுமானால் இரண்டு அணா அவிழ்த்துக் கொடுங்கள்; வாங்கிவரச் சொல்லுகிறேன்.

ஃ

சுப்பன்:—அந்தப் பெரிய மனிதரை எனக்குக் கொஞ்சம் அறிமுகம் செய்து வைக்கக்கூடாதா?

சுப்பன்:—கூடவே கூடாது. அடே! அப்பா! அது வேண்டாம். பிறகு என்னைப்பற்றி நீயே அந்த இடத்தில் கோள் சொல்ல ஆரம்பித்துவிடுவாய். அது எதிர்பாராத பெரிய ஸஞ்சலமாகிவிடும்.

ஃ

குச்சி:—அவன் உன் கடிதமே வருவருகிறதில்லை யென்கிறானே? ஏன் நீ எழுதுவதில்லை?

கோம்பு:—எதுவரை எழுதி நிறுத்திக் கொள்ளவேண்டுமோ அவ்வளவில் இல்லாமல், அதற்கு மேலும் எழுதி என்னவோ ரொம்ப சொந்தம்

பெரிய கல்யாணத்தில் ஏழையினுடைய பொருள்தான் களவு போகின்றது. மறந்து வைத்துவிட்டு மறு நிமிஷமே திரும்பி அந்த இடம் வந்து பார்க்கையில் வைத்த பொருள் மாயமாய் விடுகிறது. அருகில் இருப்போரைக் கேட்பின் எனக்குத் தெரியாதென்கின்றனர். ஏழையின் கண்ணீர் தெய்வமே அறியும். போனது போனதே. தன்னுடையதென்று நினைத்த ஒன்று மறு நிமிஷத்தில் மற்றவர் கண்டெடுத்த அதிர்ஷ்ட சொத்தாய் விடுகிறது.

போல மயக்கிக் காட்டி நீட்டுகிருன். அவ்வளவுக்கு அதிகம் எழுத அவன் தகுதியுள்ளவனுமல்ல; அன்பானவனுமல்ல. கடிதத்தில் காட்டுகிற பாசாங்கு பிரியத்தை நான் நம்புவதில்லை.

ஃ

உபாத்தியாயர் :— பழங்காலத்து வீரத் தாய்மார்களைப்பற்றி வாசித்தாயே, இக்காலத்திய வீரத் தாய்மார் எப்படி யிருக்கிருர்கள்?

மாணவன்:—தங்கள் புருஷனேடும், வீட்டிலுள்ளவர்களோடும் நன்ருய் வீரத்தோடும் சண்டை போடுகிருர்கள்.

ஃ

தந்தை:—என்னடா, ஆஞ எழுதிஞயா?

பையன்:—அம்மா! அக்கா! ஓடிவா, அப்பா அடிக்குது பாரு.

ஃ

—"யாருக்கு உதவி செய்யலாம்?"

—"தானும் நன்ருக உழைத்துப் பணமும் தேடி, அது போதாமல் குடும்பத்தின் அவசரச் செலவுக்குக் கஷ்டப்படுகிறவனுக்கு."

ஃ

அவர்:—எவ்வளவோ நேரமாகப் பேசுகிறீர்களே; இன்னும் பொடிடப்பியை எடுக்கக் காணேமே?

இவர்:—பாழும் பொடியால் மூக்கடைப்பு உண்டாகிறது. வாய் வழியாக மூச்சுவிடுகிறேன். அவன் காலணவுக்கு 4-கரண்டி பொடிதான் கொடுக்கிருன். அது போதவில்லை. அதனுல் பொடி செலவாகி விடுமென்று வீட்டில் வைத்துவிட்டு வந்தேன்.

ஃ

ராய்பகதூர்:—என் ஜீவிய சரித்திரத்தை நானே எழுதப்போகிறேன்.

திவான்பகதூர்:—நீங்கள் எத்தனை பேருக்குப் பட்டைநாமம் போட்டீர்களென்றும், எத்தனை பெண்களைக் கெடுத்தீர்களென்றும் சேர்த்து எழுதுங்கள். எவ்வளவு கடன் இருக்கிறதென்பதையும் எழுதுங்கள்.

ராய்பகதூர்:—சே! சே! அதெல்லாம் விட்டுவிடவேண்டிய ரகசிய சங்கதிகளல்லவா? வெளியில் வந்தால் கௌரவம் கெட்டுப்போகுமே.

ஃ

உப்பு:—நான் மாப்பிள்ளை வர்க்கத்தைச் சேர்ந்தவன்; நான் இல்லாமல் எந்தக் கல்யாணமும் இல்லை.

பருப்பு:—நான் மணப்பெண் வர்க்கத்தைச் சேர்ந்தவள்; நான் இல்லாமல் எந்தக் கல்யாணமுமில்லை. உப்பும் பருப்பும் ஒன்ருகச் சேர்ந்தால் தான் உலக வாழ்க்கை.

ஒரு மனிதனுக்கேனும், ஒரு ஜாதியாருக்கேனும் ஈசுவரன் ஞானத்தைக் கொடுத்திருப்பது இவர்களின் சொந்த அலங்காரத்தின் பொருட்டாக இல்லை. இவர்களுடைய ஞானத்தை மற்ற ஜனங்களுக்குப் பரப்பும்பொருட்டாகவேயாகும். செல்வத்தைப் பெற்றிருப்பவன் அதைப் புதைத்து வைக்காமல் மற்ற ஜனங்களுக்கும் உதவி செய்யக் கடமைப்பட்டிருப்பதுபோலவே. ஞானமுடையவனும் அதை எல்லோருக்கும் தாராளமாக வழங்கக் கடமைப்பட்டிருக்கிருன்.

வேளைக்குத் தக்க குணம்.

உலகம் பலவிதம். ஒரு மனிதனுக்கே வேளைக்குத் தக்கவாறு குணம் வேறுபடுகிறது. அவ்விதம் மாறுபட்ட ஸமயத்தில் செய்யப்படும் காரியம் நியாயமென்றும் அநியாயமென்றும் நிர்ணயிப்பதற்குப் புத்தியுண்டாவதில்லை. தான் அந்த ஸமயம் செய்ததே சரிஎன்று தோன்றுகிறது. போஜனம் செய்யுமுன் கோபமும், போஜனமுண்டபின் சாந்தமும் சிலருக்கு உண்டாகும். சிலர் உத்தியோக சாலைகளில் சிடு சிடு என்று விழுந்து விட்டு, வீட்டில் ஸாந்த குணிகளாயிருப்பர். சிலர் வெளியில் வெகு ஸாதுக்கள்; வீட்டிலோ எமஸ்வரூபமாய் விளங்குவர். ஒவ்வொருவனுக்கும் ஸத்வ ரஜஸ் தமோ குணங்கள் மாறி மாறி வருகின்றன. ஸத்வ குணம் மிகுந்திருக்கும்போது நல்லவனாகக் காணப்படுகிறான். ராஜஸ குணம் அதிகரிக்கும்போது கர்வம் படைத்தவனாய்த் தோன்றுகிறான். தாமஸ குணம் விசேஷித்தால் துஷ்டனென்றெண்ணப்படுகிறான். ஸத்வ குணம் மிகுந்திருக்கும்போது நல்ல காரியங்களைச் செய்கிறான். ராஜஸ குணம் அதிகரித்திருக்கும்போது அலக்ஷியமும், தாமஸகுணம் மேலாடிநிற்கும்போது கோபம், தாபம் முதலியனவும் பிரகாசிக்கின்றன. இந்தக் குணநிலைகள் அவ்வப்போதைய ஸம்பவங்கட்குத் தக்கபடியும் மாறுவதுண்டு. எவ்வளவு சாந்தஸ்தனாயினும் கையில் பணமில்லாத காலத்தில் மனைவியிடம் சீறி விழுகிறான். செல்வம் கூடிவிடும்பொழுது பழைய நண்பர்களை மறந்துவிடுவதும் சாதாரண ஸம்பவமே. ஒன்றை ஒருவர்க்குத் தர இந்த சமயம் மனம் வருகிறது. நாளைக்கோ ஏன் தர என்று மனம் மாறிவிடுகிறதும் உண்டன்றோ?

எல்லாம் அவன் செயல்.

நாமே சாதம் சமைக்கலாம், புசிக்கலாம். ஆனால், அது ஜீரணமாகி நலம் தருவது கடவுளின் செயல். உண்ட அன்னத்தை வாந்தியெடுத்து அத்துடன் பேதியுமாகிக் களைத்துப் பாயில் விழுவதும் உண்டன்றோ?

ஒரு கடை வைக்கலாம். ஆனால், வியாபாரம் நன்கு நடப்பதும் அந்தச் சிறு கடையே பின்னாளில் ஒரு பெரிய வியாபாரஸ்தலமாய் விடுவதும் கடவுளின் செயல். வைத்த கடையால் நஷ்டம் வந்து, அதன் பொருட்டுத் தாங்கள் இருந்த வீட்டையும் விற்றுத் தொலைத்தவரும் எண்ணிலரன்றோ?

கடன் வாங்கலாம். வாங்கிய கடனைக்கொண்டு ஒரு தொழில் நடத்தி லாபம் பெற்று, போட்ட பணத்தை எடுத்துக்கொண்டு, கடனையும் தீர்த்துச் சீமானாக வாழ்வதற்கு இறைவனின் அருள்வேண்டும். வாங்கிய கடனைத்திருப்பித்தர முடியாமல் நஷ்டப்பட்டுக் கடனுக்காகச் சிறை சென்றவர்களையும் வீடு நிலம் இழந்தவர்களையும் கண்டிருக்கலாம்.

விவாகம் செய்யலாம். அந்தப் புருஷனோடு மனைவியும், மனைவியோடு புருஷனும் நெடுங்காலம் வாழ்ந்து மக்களுடன் மங்களமாக இருக்க ஆண்டவனின் ஆசி தேவை.

வெளியூருக்குப் புறப்படலாம். ஆனால், போன இடத்தில் யாவும் வெற்றியாய் லாபம் கண்டு பண மூட்டையுடனே ஊர் திரும்பி வருவதற்குத் தெய்வத்துணை வேண்டும்.

ஒரு வேலையில் அமரலாம். அந்த வேலையிலேயே கடைசிநாள் வரையில் நிலைத்துக் கவலையில்லாமல் வாழக் கடவுளின் அருள் வேண்டும். இவ்விதமே எதற்கும் பகவானின் அருள் கூடி இருந்தால்தான் ஆகும்.



(லாங்பெலோவின் பொன் மொழிகள்.)

1. The heights by great men reached and kept. Were not attained by sudden flght. But they, while their companions slept. Were toiling upward in the night.

பெரியோர்கள் அடைந்து அநுப விக்கும் கீர்த்தி திடீரென்று பெற்ற தில்லை. தங்கள் தோழர்கள் உலகத் தில் அக்ஞானத்தில் மூழ்கிக் கிடந்த போது, அவர்கள் மெதுவாக உழை த்து மேன்மேலும் உயர்ந்து அவ்வுன் னத நிலை யடைந்தனர்.

ஃ

2. Not waste thc golden hours of youth in vain regrets for the past and indefinite, dim longings for the future. Youth comes but once in a lifetime.

கடந்து போன விஷயத்திற்காக வீணே துக்கிப்பதிலும், வரும்காலத் தின்மீது அளவு கடந்த ஆசையை வைப்பதிலும், இளமையின் சிறந்த நேரங்களை வீணாக்காதே. வாழ்க்கை யில் ஒரு முறைதான் இளமை வரும்.

ஃ

3. We never say fail. There is no such word in our dictionary.

தோல்வி என்பதை நாம் எப் பொழுதுமே சொல்வதில்லை. நம் முடைய அகராதியில் அத்தகைய வார்த்தை கிடையாது.

ஃ

4. Sorrow and silence are strong, and patient endurance is is Godlike.

துக்கமும், மௌனமும் வன்மை வாய்ந்தவைகள். பொறுமையோடு சகித்துக்கொள்வது தெய்வீகம் பொருந்தியது.

ஃ

5. When'er a noble deed is wrought, When'er is spoken a noble thought. Our hearts in glad surprise, To higher levels rise.

பெருமை வாய்ந்த காரியத்தைக் கஷ்டப்பட்டுச் செய்து முடிக்கும் போதெல்லாம், உயர்ந்த எண்ணங் களைப்பற்றிப் பேசும் போதெல்லாம், நம்முடைய இருதயங்கள் சந்தோஷ ஆச்சரியத்துடன் உயர்ந்த ஸ்தானங் களுக்கு எழும்பிச் செல்லுகின்றன.

ஃ

6. Time has a Doomsday-Book, upon whose pages he is

தாம் நேரிலேயே கண்ணுற் கண்டது போலவும் கேட்டது போலவும் சிலர் கதை கட்டி விடுவதில் சமர்த்தர்கள். கட்டப்படும் கதைகளிலும் சில சமயங்களில் ஆங்காங்கு உண்மை இருப்பதும் உண்டு.

continually recording illustrious names.

காலம் ஒரு தீர்ப்பு நாளைக் குறிக்கும் புத்தகத்தை வைத்திருக்கிறது. அப்புத்தகத்தின் பக்கங்களில் சிறப்பு வாய்ந்த பெயர்களை அடிக்கடி அது பதிவு செய்துகொண்டே இருக்கிறது.

ஃ

7. The vast cathedral of Nature is full of Holy Scriptures and shape of deep mysterious meaning.

இயற்கை என்னும் பெரிய கோவிலில், தர்ம சாஸ்திரங்களும், அற்புதமான ஆழ்ந்த கருத்துகளடங்கிய வடிவங்களும் நிறைந்திருக்கின்றன.

ஃ

8. Man-like is it to fall into sin, Fiend-like is it to dwell there in, Christ-like is it for sin grive, God-like is it all sin to leave.

மனிதனைப்போ லிருப்பது பாபத்தில் சிக்குவதாகும். பபோவியைப் போலிருப்பது பாபத்திலேயே வசிப்பதாகும். பக்திமானைப் (கிருஸ்துவனை) போலிருப்பது பாபத்திற்கு வருந்துவதாகும். கடவுளைப்போலிருப்பது எல்லாப் பாபங்களையும் விட்டு விலகுவதாகும்.

ஃ

9. I will not say that humility is the only road to excellence, but I am sure that it is one road

அடக்கம் உயர்ந்த ஸ்தானத்துக்குக் கொண்டு செல்லும் ஒரே ஒரு மார்க்கமென்று நான் சொல்லமாட்டேன் பல வழிகளில் அதுவும் ஒன்று என்று நான் நிச்சயமாயிருக்கிறேன்.

10. Love against hatred, Peace-cry for war-cry! Patience is powerful; He that o'ercometh Hath power o'er the nations!

வெறுப்பிற்குப் பதில் அன்பும், யுத்தத்திற்குப் பதில் சமாதானமும் வேண்டும். பொறுமை மிக்க பலம் பொருந்தியது. எவனொருவன் இவைகளை வெல்லுகிறானோ அவனுக்குத் தேசத்தாரையே அடக்கும் சக்தியுண்டு.

ஃ

11. Be strong! be good! be pure! The right only shall endure.

பலமுள்ளவனாகவும், நல்லவனாகவும், பரிசுத்தவானாகவும் இரு! நேர்மையான வழியில் நடப்பவனே நிலைத்திருப்பான்.

ஃ

12. Always thoughtful, and kind, and untroubled.

எப்பொழுதும் புத்தியுடனும், அன்புடனும், பிறருக்குத் தொந்தரவு கொடுக்காமலும், இருக்கவேண்டும்.

ஃ

13. From the barred visor of Antiquity. Reflected shines the eternal light of Truth, as from a mirror!

பண்டை நாட்களில் மறைந்து போன விஷயங்களிலிருந்து, அழியா

நம் ஆயுளைப்பற்றி நாம் ஒன்றும் அறியோம். நம் வாழ்நாளோ கண்ணிமைப்பனவாம். கடவுளின் கருத்தைக் கணக்கிடுபவர் யார்?

உண்மையின் ஒளி, கண்ணாடியிலிருந்து பிரதிபலிப்பதுபோல் பிரகாசிக்கின்றது.

ஃ

14. The mere external forms of nature we make our own, and carry with us everywhere, by the power of memory.

இயற்கையின் வெறும் வெளித் தோற்றத்தை நம்மதாகச் செய்து கொண்டு, அதை நம் ஞாபகச் சக்தியால் எவ்விடத்திற்கும் கொண்டு செல்லுகிறோம்.

ஃ

15. Let us choose that narrow way, Which leads no traveller's foot astray; From realms of love.

அன்பின் உலகத்திலிருந்து பிரயாணிகள் வழி தவறிப் போகாதவாறு செல்லும் குறுகியதொரு வழியை நாம் தேர்ந்தெடுப்போம்.

ஃ


16. Enjoy the spring of Love and Youth, To some good angel leave the rest.

அன்பு—இளமை ஆகிய இரண்டின் வஸந்த காலத்தை நன்றாக அனுபவி. மற்றதை நல்ல தேவதையிடம் ஒப்படைத்துவிடு.

P. G. குலசேகரன்,
"எதிரொலி" ஆசிரியர்.

ஒரே தினுசில் இரண்டு புஸ்தகங்கள் இருந்தால் ஒன்றை இன்னொருவருக்குத் தரலாமென்று எண்ணி அதைக் கொடுத்துவிடுகிறார்கள். பிறகு இவர்களிடமிருந்த ஒரு புஸ்தகமும் காணமற் போய்விடும் போது, தாங்கள் ஏமாறி முன்பு கொடுத்துவிட்ட புஸ்தகம் தங்களிடமிருந்தால், இப்போது காணமற்போன புஸ்தகத்துக்குப் பதில் புஸ்தகமாக இருக்குமே, என் அறிவு கெட்டுத் தந்தோம் என்று தங்களையே நொந்துகொள்கிறார்கள். ஆகவே, இரண்டு புஸ்தகங்கள் இருப்பினுங்கூட எவருக்கும் தரவொண்ணாது. புஸ்தகங்களை இனமாகப் பிடுங்கிக்கொண்டு ஏமாற்றிச் செல்லும் சண்டாளர்களையே அருகில் சேர்க்கக் கூடாது. அவர்களின் சகவாசமே கூடாது. புஸ்தகசொத்து மஹா பெரிய சொத்து.

வீட்டுத் திண்ணையில் அன்னியர்களாகப் படுப்போர், இன்றைக்குப் படுத்து, நாளைக்குத் தங்களின் சொந்த ஊருக்குப் போய்விடுபவர்களாக இருந்தால் தான் படுக்க இடம் தரலாம். வீட்டுத் திண்ணையில் படுப்பதையே ஒரு வழக்கமாகக் கொள்கிற அன்னியர்களின் விஷயத்தில் அதிக ஜாக்கிரதையாக இருப்பதுடன், அவர்களை அவ்விதம் படுக்க இடம் தராமல் துரத்தி விடுவதே நன்மை. வெகு உத்தமர்கள் போல் வீட்டுத் திண்ணையில் படுத்து, பிறகு வீட்டுப் பெண்களைக் கெடுத்து விட்டவர்களும், வீட்டிலுள்ளவற்றைக் களவாடியவர்களும், வீட்டுச் சங்கதிகளை யெல்லாம் தெரிந்து கெடுதி செய்தவர்களும் உண்டு. முதலில் வீட்டுத் திண்ணையில் அநாதியாய்க் குந்தியவர்கள் பிறகு அந்த வீட்டையே வாயிற் போட்டுக்கொண்டு வீட்டுக்காரனுக்கு விரோதியான சங்கதிகளும் எவ்வளவோ நேர்ந்துள்ளன.



டில்லி பாதுஷாவின் குமாரி.

கர்ணபரம்பரையாய் நான் கேட்டிருக்கும் கதையொன்றைத் தங்கள் பத்திரிகையில் பிரசுரிக்க வேண்டுகிறேன். டில்லி பாதுஷாவின் குமாரி தெய்வப் பிரியை. என்றுமே கடவுள் பக்தி பூண்டவள். டில்லி பாதுஷா ஸ்ரீரங்கத்தைத் தாக்கி, அரங்கனின் விக்கிரகத்தைத் தூக்கிச் சென்றார். டில்லியில் பாதுஷாவின் குமாரி விக்கிரகத்தின்மீது ஆசை கொண்டாள். தந்தை மசூதிக்குப் படிக்கட்டாக உபயோகிக்க எண்ணங்கொண்டபோது, அவரது குமாரி அதைத் தடுத்து அரங்கனின் விக்கிரகத்தைத் தன் அந்தப்புரத்தில் வைத்துக்கொண்டு தன் தந்தைக்குத் தெரியாமல் வழிபட்டு வந்தாள்.

ஃ

இதற்கிடையில் ஸ்ரீரங்கத்தில் தினமும் அரங்கனைச் சேவித்த பின்னரே சாப்பிடும் வழக்கமுடைய பெண் ஒருவள் தன் வழிபடு கடவுளின் பிம்பம் போயதென்று கண்டு, அங்கிருந்து, டில்லிக்குச் சென்றாள். அங்கே பாதுஷாவின் அரண்மனையில் வழிவிட மறுத்து விட்டதால், மாறுவேடம் புனைந்து உள்ளே புகுந்தாள். அங்கே தன் நாதனை (கடவுள் விக்கிரகம்) முகம்மதியப் பெண் ஒருவள் கட்டியணைத்து முத்தமிடுவதைக் கண்டு வெகுண்டாள். அன்று இரவு எவருக்கும் தெரியாது விக்கிரகத்தைத் தூக்கிக்கொண்டு ஸ்ரீரங்கம் சென்று விட்டாள்.

ஃ

மறுநாட் காலை தன் மனத்தைக் கொள்ளைகொண்ட விக்கிரகம் காணாததைக் கண்டு கலங்கினாள். உடனே வீரர்களுடன் புறப்பட்டு ஸ்ரீரங்கத்திற்குப் பிரயாணமானாள். ஸ்ரீரங்கம் வந்ததும் அங்கே விக்கிரகம் இருந்ததுகண்டு தூக்கிச் செல்ல முயன்றாள். அதற்குள் அந்த விக்கிரகத்தைக் கொணர்ந்த பெண்ணும் அங்கு வந்து, தானும் அதன்மீது காதல் கொண்டிருப்பதாகச் சொல்ல, இருவரும் தத்தம் கருமத்தைக் கண்டு மனம் ஒன்றாகி அகமகிழ்ந்தனர். பாதுஷாவின் குமாரி ஸ்ரீரங்கத்திலேயே தங்கி விட்டாள். துணை வந்தவர் புறப்பட்டுச் சென்றனர். அந்த பாதுஷாவின் குமாரியே இப்போது "துலுக்க நாச்சியாராய்" இருப்பதாகச் சொல்லுகிறார்கள். நித்தியமும் ஆராதனையும் நடந்து கொண்டிருக்கிறது. இது சரித்திரம். பாதுஷாவின் பேரும், அவரது மகள் பேரும் தெளிவாய்த் தெரியவில்லை.

ஃ

நாற்பது வயதுக்கு மேலும் விவாகமின்றிக் காதலைப் பற்றி ஓயாது பேசத் தெரிந்தோர், அந்தக் காதலின் சுவையை எவ்வாறு உணர்ந்தார்களென்று விசாரிக்கின், அவர்களின் ஒழுக்கக் குறைவும் அத்துடன் வெளிப்படலாம்.

பாதுஷா தன் குமாரியைத் தேடி வந்து எவ்வளவோ வருந்தி அழைத்தும் வரமுடியாதென்று மறுத்து விட்டார். பாதுஷா திரும்பிச் சென்றார் தெய்வப்பிரியை விவாகமின்றியே ஸ்ரீரங்கத்திலேயே தம் காலத்தைக் கடத்தினாராம். இதை மறுப்பவர்கள் தோன்றினால் அதைப் பற்றி எனக்கொன்றுமில்லை. நான் கேள்வியிலுணர்ந்தவற்றை இங்கு வரைந்ததோடு இது பூர்த்தி.

P. G. K.

மூலப்பொருள்களை வெளி நாடுகளுக்கு அனுப்பிவிட்டு, செய்பண்டங்களை அங்கிருந்து வாங்கிக்கொள்வதற்கு ஏராளமாகப் பல உடன்படிக்கைகளைச் செய்துகொண்டு வருகையில், தொழில் கல்வியைப் பெற்றும்தான் என்ன பலன்? தொழில் கல்வி கற்றோரும் பிழைப்புக்கு இடமின்றித்திண்டாடியே நிற்கிறார்கள்.

சகிக்க முடியாத நிலையில் அன்பரை வேண்டல்.

ஒரு மானஸ்தருக்குத் தமது குடும்ப நிலையில் சகிக்கத் தாளாத செலவுகள் ஏற்பட்டுக்கொண்டு, கடன்படவும் முடியாமல், தமது தவிப்பை வெளியில் சொல்லவுங்கூடாத சந்தர்ப்பம் நேரிடுகையில், மனைவி தன் கணவனிடம் தன் மானத்தை ஒப்புவிப்பதுபோன்று தமது நிர்ப்பந்த ஸ்திதியைத் தன்னைக் குணவானென்று மதித்த அன்பர்களிடம் அந்தரங்கமாய்ச் சொல்லிக்கொண்டு உதவிபெற நாடுகின்றார். இவ்விதம் ரசசியத்தில் உதவி பெற்றுக்கொண்டு வெளிக்கு மற்றவர்களிடம் தலைநிமிர்ந்து கௌரவம் காண்பித்துக்கொள்ளும்படியாகிறது. சயன அறையின் ரகசியம் போல, மானஸ்தருடைய இந்தச் செயலையும் அவரது அன்பர்கள் மூடிவைத்துக் காப்பாற்யவேண்டியவராகிறார்கள். கெட்டாலும் மேன்மக்கள் மேன்மக்களே என்பதையும், கற்றாண் ஓடிவதன்றி வளையாதென்பதையும் நாம் கருத்திற்கொண்டு அந்த வேளைக்கு உபகரிப்பது காலசகாயமாகும்.

மனைவியின் வால் பிடித்துக்கொண்டு அவள் கூப்பிடும் இடத்திற்கெல்லாம் புருஷன் போகவேண்டியும் நேரிடுகிறது. தட்டானிடம் வா என்று அம்மாள் அழைத்தால் ஐயா உடனே எழுந்து அம்மா முன்னேபோக, ஐயா பின்னே தொடர்ந்து போகிறார். போன இடத்தில் தட்டாச்சாரி இருக்கக் கூடாதா? காணோம்! இருவரும் வீடு திரும்புகிறார்கள். மறுபடியும் பிறகு இன்னொரு தடவை புறப்படுவார்கள் போலும்! இது அம்மாள் புது நகை செய்கிற ஒய்யார சிங்காரம்.

ரயிலில் வித்யாஸாகரர்.

கல்விமான்களின் பெயரைப் பிரஸித்தமாய் அறிவரேயன்றி, அவர்களைப் பலரும் கண்டிரார். அவர்களே எதிரில் வரினுங்கூட நம்பமாட்டார். அவர்கள்தான் என்று நிச்சயமாய்த் தெரிந்துவிடினே "இவரா அவர்?" என்று அலக்ஷியமாய் எண்ணத் தொடங்குவர். வித்யாஸாகரர் என்னும் மகாவித்வான் எந்தப் புஸ்தகத்தையாவது படிக்கத் தொடங்கினுல், தமது கவனமுழுவதையும் அதிற் செலுத்துவது வழக்கம். அக்காலத்தில் வேறு எந்த வஸ்துவிலும் அவர் மனம் செல்லாது. ஒரு ஸமயம் வித்யாஸாகரர் ரயில் வண்டியிற் சென்றபோது ஒரு புஸ்தகத்தைப் படித்துக் கொண்டிருந்ததால் இறங்கவேண்டிய ஸ்டேஷனைத் தாண்டி அடுத்த ஸ்டேஷனுக்குச் சென்றுவிட்டார். அவரை டிக்கெட்டு கலெக்டர் இன்னுரென்று அறியாமல், "நீ என்ன வித்யாஸாகரனே, ஸ்டேஷன் இன்னதென்றுதெரியாமல் மறந்துபோனுய்? உனக்குப் படிப்பில் அத்தனை கவனம் இருந்ததுபோலும்" என்று பரிகாஸம் செய்தான். வித்யாஸாகரரும் தம்மை இன்னுரென்று காண்பித்துக் கொள்ளவில்லை. இக்கனவான் எப்போதும் ஸாமான்ய உடையைத் தரித்து ஏழைகளோடு ஏழையாய்த் திரிவர். இம்மேதாவியின் சிறந்த குணம் மனதைப் படிப்பிலேயே பதியவைப்பதுதான். இதுதான் அவருடைய கீர்த்தியை உலகமெங்கும் பிரகாஸிக்கச் செய்தது. இவர் முதலில் பிரம்ம ஸமாஜியாயிருந்து, பிறகு அதனின்றும் விலகி, பகவத்கீதையொன்றைமட்டுமே நம்பி அனுஷ்டித்து வந்தார்.

அதிகப் பிரஸங்கி.

தனக்குத் தெரிந்ததைவிட அதிகமாய்க் கற்றவனைப்போல் அபிநயிப்பவனும், பேசவேண்டிய மரியாதையின் எல்லைகடந்து மீறிப் பேசுபவனும் அதிகப் பிரஸங்கி எனப்படுவான். எந்த வித்தையைக் கற்றாலும் அதிலுள்ள ஸூக்ஷ்மத்தைக் கிரகிப்பதுநலம். யாரோடு ஸம்பாஷித்தாலும் நாக்கை மூன்றுதடவை உள்ளே இழுத்து யோசித்துப் பிறகே பேசவேண்டும். ஒருவன் வேலையில் கவனமாயிருக்கையில் பேசவந்து வீண் சங்கதிகளைப் பிதற்றுவது வேண்டுமென்று செய்கிற அதிக பிரஸங்கித்தனமே. நடந்த ஒரு காரியம் நன்றாயிருந்தாலும் அதிகப் பிரஸங்கி அதிலும் ஒரு குறை பேசுவான். புத்திமான்கள் கொள்ளும் அபிப்பிராயங்கள் எப்போதும் ஒரே மாதிரியாயிருக்கும். அதிகப் பிரஸங்கிகள் கூறும் மொழிகள் ஒன்றுக்கொன்று இணையாமல் அஸம்பந்தமாய்க் காணப்படும். நியாயஸ்தானத்தில் ஸாக்ஷிகளிருவர் தங்கள் மனோ வபிப்பிராயங்களைச் சொல்லுகையில் ஒன்றுக்கொன்று வித்யாஸப்படுமானுல் புத்திசாலியான நீதியதிபதிக்கு அவர்களைப்பற்றி அதிர்ப்தி உண்டாகக் கூடும். எப்போதும் நியாயா நியாயங்களை மனதுக்குள் விஸ்தாரமாய் ஆலோசனை செய்யவேண்டும். தன் ஈனத்தனமான செயல்களையும், பொறாமை கபடம் முதலிய குணங்களையும் மற்றவன் அறிந்துவிட்டானே யென்று ஆத்திரப்படுவதைவிட, தன்னிடமுள்ள துர்க்குணங்களை விலக்கப் பார்ப்பது ஸர்வோத்தமம். அனுவசியமாய்ப் பிறரை இகழ்ந்துரையாடும் அதிகப் பிரஸங்கியை எவருமே விரும்பார். கோட் சொல்லுதல் என்பது விபசாரத்தினும் கொடியதான குற்றமென்பர்.

விகடக் கொன்றை வேந்தன்.

1. அன்னையும் பிதாவும் பின்பவர் வேறே.
2. ஆலயம் புகுவது சாலவும் தின்னவே.
3. இல்லற மேன்பது சல்லிகள் இருந்தால்
4. ஈயார் தமக்கே நேயமார் பெயராம்.
5. உண்டியின் பணத்தால் ஒண்டோடி உவப்பாள்.
6. ஊருடன் பழகினுல் தேறுதல் உண்டோ ?
7. எண்ணும் எழுத்தும் பின்ஞற் பிழைக்கவே.
8. ஏவா மக்கள் கூவா தாக்குவர்.
9. ஐயப் பேயால் நைவே என்றும்.
10. ஒருவனை ஏய்ப்பது பொருள்பறித் துண்ணவே.
11. ஓதலின் மறதி வேதனை யாக்கும்.
12. ஔவியம் பேசில் கௌவும் பழியே.
13. அக்கமுங் காசுங் துக்கமற் றிருக்கவே.
14. கற்பெனப் படுவது காளையர் தமக்கும்.
15. காவல் காப்பினும் போவாள் சோரம்.
16. கிட்டா வொன்றில் எட்டா ஆசை.
17. கீழோ ராயின் தாழ்வே எங்கும்.
18. குற்றம் பார்ப்பது மற்றவ ரிடத்தே.
19. கூரம் பினுஉம் கூரிய சொல்லே.
20. கெடுவது செய்யின் படுவது பின்பே.
21. கேளாக் கடனும் வாளா வருமோ.
22. கைப்பொருள் இருந்தால் ஐயமில் பெரியனும்.
23. கொற்றவர் பலரும் அற்றனர் கிரீடம்.
24. கோட் சேவி எதையும் நாட்டமாய் நம்பும்.
25. கௌவிய எலியை பூனைதான் சாப்பிடும்.
26. சந்ததிக் கழிவு வந்திடுஞ் சண்டையில்.
27. சான்றோ ரென்கை மான்றேல் உடையில்.
28. சினத்தைக் காட்டுவது சின்னவரிடத்தே.
29. சீர்செய் வதுஉம் பேர்வழி பார்த்தே.
30. சுற்றம் பிரிவது வற்றிய போதே.
31. சூதும் வாதும் ஏதும் பொருட்கே.
32. செய்தவம் இப்போ தேய்வங் களிடமே.

சிலர் மிக்க மேதாவிகள். வெகு பெருமையாகச் சொல்லப் படுபவர்கள். அந்தப் பெருமைகளுக்கும் தகுதியுள்ளவர்களே. ஆனல், நன்னடத்தையோ, நாணயமோ, நம்பிக்கையோ, வாக்கு சுத்தமோ முற்றிலும் பூஜ்ஜியமாகவே இருக்கும்.

33. க்ஷேமங் கேட்பதா மளவும் பறிக்க.
34. சையெனத் திட்டினும் மெய்யுணர் வடையார்.
35. சொற்கம் போவது நற்காலத்தே.
36. சோம்பல் என்பவன் வீம்புடன் தூங்குவான்.
37. தாய் தான் மாமியாய் பேய்போ லாவாள்.
38. தந்தை தேடுவ மைந்தர்க் காகும்.
39. திரைகட லோடியும் அரைவயி ருகலே.
40. தீராச் சினத்தால் வேரும் குடும்பம்.
41. துடியாப் பெண்டிர் அடிநாள் விதிவசம்.
42. தூற்றும் பெண்டிர் சோற்றுக் கலேவர்.
43. தெய்வச் சிந்தனை பைகா லியானல்.
44. தேடா துண்டால் கேடாம் எவர்க்கும்.
45. தையில் விவாகம் மாசியில் தெப்பம்.
46. தொழுது வணங்கி விழுவது துரையிடம்.
47. தோழனே டொரு தோழியும் வேண்டும்.
48. நல்லிணக் கமல்லது தொல்லையாய் முடியும்.
49. நாடெங்கும் விசாரம் வீடெங்கும் சண்டை.
50. நின்று விழுந்தால் நன்றும் பற்கள்.

(தொடரும்.) மு. துரைப்பிள்ளை.

எழுத்து வேலையின் எல்லை.

எதற்கும் ஒரு எல்லையுண்டு, அளவுண்டு. அந்த எல்லைக்கு நெருங்கியதும் நிறுத்தி ஓய்வு பெறுவதே சரி. எழுதும் எழுத்துக்கள் தடுமாறுவதையும், ஒன்றிருக்க ஒன்று எழுதுவதையும் காண்கையில் உடனே எழுதுவதை நிறுத்திவிடு. எழுதிக்கொண்டிருக்கையிலேயே ஒரு தூக்கம் போட்டுத் தலை யசைப்பதும், சிரசிலும் கனம் அதிகரித்து ஒருவித மயக்கம் தருவதும், எழுதுங்கால் தடுமாறுவதும் ஆக நேருகையில் அவை—போதும் நிறுத்து—என்று ஏவும் இயற்கை அன்னையின் குறிகளாம். தக்ஷணமே நீ தூங்கவோ, ஓய்வு பெறவோ எழுந்துவிடு. இவ்விதம் எழுதிச் சோர்வுறும் ஆசிரியரது சிரமங்களை யறிந்தவர் சிலரேயாவர்.

மறுபிறப்புக் கொள்கை நல்லொழுக்கத்திற்கு மூலம் இனி மறு பிறப்பே இல்லை யென்போர் எத்தனைப் பாவமேனும் செய்யலாம். முற்பிறப்பில் செய்த வினையே இப்பிறப்பில் அநுபவிப்பதென்ற கொள்கை தீயவழி நாடா திருக்க வைக்கும்.

ரணஜித்சிங்கு.

(365-ம் பக்கத் தொடர்ச்சி.)

இவ்வாறாக ஏக சக்ராதிபதியாய் அரசு செலுத்தி வெற்றி வேந்தனா யிருந்த ரணஜித் சிங்கு தன் நாட்டை மேன்மேலும் பரவச்செய்ய வேண்டுமென்று எப்போதும் போரும் கையுமாய் இருந்ததை விட்டு, தன் துரைத்தனத்தைச் சீர்படுத்தவும், ஜனங்களுடைய சவுக்கியத்துக்கு வேண்டிய சட்டதிட்டங்கள் செய்யவும் முயன்றிருந்தால், அந்த ராஜ்யம் வெகு சீர்திருத்தம் பெற்றிருக்கும். அப்படிப்பட்ட யோசனை ரணஜித் சிங்கின் புத்தியிலாயினும் மற்றச் சீக்கியர்களுடைய புத்தியிலாயினும் ஒரு போதும் உதிக்கவில்லை. இது ஸஹஜமானது தான். நூதனமாய்த் தலை யெடுத்த எவனும் மேன்மேலும் விருத்தியடைய வேண்டுமென்ற நோக்கங் கோண்டிருப்பானே யொழிய, அதற்கு ஒரு தடை நேரிடுமளவும், உள்ளதைக் காத்துக்கோண்டு அவ்வளவோடு திருப்தியடைந்து சுகமாயிருப்போ மென்ற கருத்துள்ளவனாயிரான்.

ஃ

ரணஜித்சிங்கு இப்படியாக வெகு காலம் யாவர்க்கும் மேலாய்ப் பேரும் புகழுமாகச் சிங்கத்தைக்கண்ட யானை போல அனைவரும் அஞ்சும்படி அரசு செலுத்திக் கொண்டிருந்தார். வாலிபத்தில் இவர் மிக்க சுறுசுறுப்பும் அவயவலாகவமும் உடையவராயிருந்தார். அவர் வடிவத்தில் குட்டையானவரே யொழிய, ஆஜானுபாகுவாய் உயர்ந்திருப்பவரன்று. வயது முதிர்ந்தபோது பலவீனராய்ப் பெருத்துப் போய்விட்டார். கடைசியில் தேக சவுக்கியம் தப்பி 59—வது வயதான 1839-ம் வருஷத்தில் இறந்து போனார்.

ஃ

ரணஜித்சிங்கினுடைய பெருமைகளை இங்கே ஒருவாறு சுருங்கிச் சொல்லுவோம். அவர் ஆட்சிக்கு வந்த காலத்தில் பாஞ்சால தேசத்துக் குடிகளும் குறுநில மன்னர்களும் சிறிதும் கட்டுப்பாடில்லாமல் நெல்லிக்காய் மூட்டைபோலச் சிதறித் தலைக்குத்தலை பெரியதனம் செய்து வந்ததுமல்லாமல், தெற்கே மஹாராஷ்டிரர்களும் மேற்கே கபிலதேசத் துருக்கரும் போர்க்கிழுக்கத் தொடங்க, அப்போது எங்கும் வெற்றி பெற்று வந்த அங்கிலேயர்க்கு அந்த ராஜ்யம் சீக்கிரத்தில் இணங்கிப் போம்படியாயிருந்தது. இப்படிச் சின்னபின்னமாய்க் கிடந்த அற்பமான சிற்றரசுநாடுகளை யெல்லாம் ஒன்று சேர்த்து ரணஜித்சிங்கு ஒரு பெரிய ராஜ்ஜியமாக்கினார். கபில தேசத்தைச் சேர்ந்த நீர்வளம் நிலவளமுள்ள மாகாணங்களை யெல்லாம் தன் வசப்படுத்திக்

விபசாரத்திற்கு இணங்கியாவது தனது கருத்தை நிறைவேற்றிக் கொண்டு வெளியில் மதிப்பு பெறுவது சிலரது இயல்பு. விபசரித்த இவ்விருவரும் விரைவில் மனத் தாங்கலுடன் பிரிவது முண்டு; அல்லது கடைசிவரையில் ஒன்று சேர்ந்திருப்பதுமுண்டு.

கொண்டார். தன்னுடைய நாட்டில் அங்கிலேயர் வந்து புகாதபடி அதற்குவேண்டிய முன் ஜாக்கிரதை செய்து கொண்டார். குதிரை வீரர் களாயினும் யுத்த சாஸ்திரப் பயிற்சி யில்லாத அத்தேசத்து வீரர்களை நன் ருய்ப் பழக்கிப் போர் புரியவல்ல பெரும் படையாகச் செய்துகொண் டார். சத்துருக்களை யெல்லாம் வென்று, தங்கள் நாட்டைப் பரவச் செய்யவேண்டுமென்கிற அத்தேசத் துக் குடிகளுடைய கோரிக்கைக்கு இணங்கியே நடந்து துரைத்தனம் செய்து வந்ததனுல், அவர் தான் நினைத்தபடி யெல்லாம் காரிய சித்தி பெறும்படியாயிற்று.

ஃ

ஆயினும், அவருடைய நாட் டுக்கு இவ்வளவு தானென்று ஒரு வரையறை ஏற்பட்டு, இந்த எல்லை யைத் தாண்டி அவர்கள் வரக் கூடா தென்று உடன் படிக்கை உண்டான காலத்தில், அத்தேசத்து ஜனங்களு டைய மனப்போக்குக்கு ஏற்ற காரி யம் செய்வதற்கு வேண்டிய உபாயம் தேடிக் கொடுக்கத்தக்க வேருெரு ரணஜித்சிங்கு இல்லாமற் போகவே, உள் நாட்டுக் கலகங்கள் அதிகரித்து, வரவர அந்த ராஜ்யம் க்ஷீணிக்கும் படியாயிற்று.

ஃ

ரணஜித்சிங்கு ஆட்சி செய்து வந்த காலத்தில் அவரது ராஜ்யத்து வரும்படி இரண்டரை கோடி ரூபாய் என்றும், ஏறக்குறைய 82000-படை களும், 400-பீரங்கிகளும் அவர் சுவா தீனத்தில் இருந்தனவென்றும் சொல்லுகிருர்கள். இந்த ரணஜித் சிங்கு பல தடவைகளில் இத்தேசத்து கவர்னர் ஜனரல் அவர்களை வர வழைத்து வெகு மேன்மையாய் தர் பார் செய்வித்தார். கடைசியாய்ப் பல தேசத்து ராஜாக்களையும் பிரபுக்களை யும் வரவழைத்துத் தன் பேரப் பிள் ளைக்கு வெகு வைபவமாகக் கலியா ணம் செய்வித்தார். இப்படி மிகுந்த யுக்தி புத்தி சாமர்த்தியமும் பராக் கிரமமுமுள்ள பூர்வகாலத் தரசரான ரணஜித்சிங்கு இறந்தபோது அவரை அடக்கம் செய்த இடத்தில் விசித்திர மான கோரியொன்று கட்டி வைத் திருக்கிருர்கள். நாளைக்கும் அது நல்ல நிலைமையில் இருந்து வரு கிறது. வீரமும் தீரமும் உண்டாவ தற்குத் தக்க வழி வீரர்களின் சரித் திரங்களைப் படிப்பதாகும்.

தங்களின் வீட்டுக்குச் சிலர் தங்குவதற்காக வந்திருக்கை யில், அவர்களிடம் தங்களின் கோபம், அலக்ஷியம், எதிர்ப்பு முதலியவற்றைக் காட்டிக் கொள்வோர், அவர்கள் புறப் பட்டுப் போனபின்பு எவரிடம் காண்பித்துக்கொள்வது? குட் டிச்சுவரிடம் இந்த மூடங்கள் முட்டிக்கொள்வரா?

ஒரு வண்டி விபத்தில் அகப்பட்டு இறந்தவரைப்பற்றி மரண விசாரணை நடைபெறுவதால் இறந்தவர்க்கு என்ன பிரயோஜனம்? அகஸ்மாத்தாக— தற்செயலாக என்ருவது, வேறு விதமாயாவது ஒரு முடிவுகூறி விட்டபின் அத்துடன் விசாரணை செய்தவர்களின் வேலையும் பூர்த்தியாகி முடிவுபெற்று விடுகிறதாம்! அதற்குப் பிறகு மற்ருெரு மரணத்தைப்பற்றி விசாரிக்க ஆரம்பித்து விடுவார்களாம்!!



அன்பு வாழ்க.

அன்பு வாழ்கவென்(று) அனுதினம் வாழ்த்துவோம்;
ஆசை நேசர்களோடு குலாவுவோம்!
துன்பம் யாவையும் விரைவினில் ஓடுமே,
தூய நேயர் தம் மெய்யன்பு தன்னிலே! (1)

சோதனைகள் நிறைந்த இவ் வாழ்விலே,
சோர்வைத் தீர்ப்பது நேசர் மெய்யன்போன்றே!
வேதனைகளால் நெஞ்சு குமுறுங்கால்,
மெய்யன்பர் மொழி ஆறுதல் செய்யுமே! (2)

சிந்தையைக் கொள்ளை கொள்ளும் நற்புன்னகை
சிறக்கும் நேசர் தம் மலர்முகத் தோற்றமே,
எந்த சோதனை தனிலுங் கலங்கிடா(து)
இருக்கும் திண்மையை நண்பர்க்(கு) அளிக்குமே! (3)

கலகலென்று சிரித்(து) உரையாடும் அக்
கள்ளமற்ற முகத்தினை நோக்குவோர்,
பலவகைத் துயர் தம்மை மறந்(து) உடல்
பரவசப்பட்டுப் போவது மெய்ம்மையே! (4)

நெஞ்சும் நெஞ்சும் கலந்துவிட்டால், பின்பு
நேசம் என்றேனும் நீங்கிடக்கூடுமோ?
வஞ்சமற்ற மனத்தினராயிடில்,
வண்மை நட்புக்குப் பங்கமும் நேருமோ? (5)

அளவளாவிக் கலந்(து) உரையாடலில்
ஆனந்திக்கும் மெய்யன்பர், இரவிலும்
வளரும் பேச்சினில் சோர்வும் உறக்கமும்
மறந்து நல் இன்ப உலகத்(து) இருப்பரே! (6)

நூறு மைல்கள் தூரத்திருப்பினும்—
நுவல் நிருபம் கிடைக்காதிருப்பினும்—

நமக்குப் பிறர் செய்யும் கெடுதிகளை யெல்லாம் நாம் ஒரு படிப்பினையாக நினைத்து விடும்போது, நமக்குக் கெடுதி நினைத்தவர்கள் மீது நாம் வெற்றி யடைந்தவராய் விடுகிறோம்.

கூறும் அன்பரைப் பிணைத்(து), என்றும் மெய்யன்பு
கொள்ளச் செய்வது மெய்யன்பர் நேசமே! (7)

அன்பு வாழ்கென்று பறைகள் முழக்குவோம்;
அன்பு வாழ்கென்று கைகள் கோர்த்தாடுவோம்;
'அன்பர் காட்டும் மெய்யன்பே உலகினில்
அருந்துணை' எனல் அறிந்து இசை பாடுவோம்! (8)

ஆரியூர்—வ. பத்மநாப பிள்ளை.

நகை செய்யக் கொடுத்ததற்கு ரசீது.

நகை செய்யும் ஆச்சாரியிடம் பொன், வெள்ளி, ரத்தினக்கற்கள் முதலியவற்றைத் தருகையில், அதன் எடையும், எத்தனை பவுன், எத்தனை தோலா என்பதுபோன்ற விவரங்களுங்கண்டு, நகை முடித்துத்தரும் தவணை நாளும் குறிப்பிட்டு கையெழுத்துடன் ஒரு ரசீது பெறுவது அவசியமானது. அதில் இரு சாக்ஷிக் கையெழுத்தும் வேண்டும். ஆச்சாரியிடம் தந்ததற்கு எவ்வித ஆதாரவுமில்லாமல் பல மாதகாலம் அலைந்து தவிப்போர் அநேகர். மோசம் போனவர்களும் பலர். நான் எதுவும் வாங்கவில்லையென்ருல் போலீஸாரால் என்ன செய்ய முடியும் என்கிருர் ஆச்சாரி. ஆனதால் ஆச்சாரியிடம் ஒரு ரசீது ஆதாரவு பெறுவது அவசியமாகும்.

கருவேலமரத்தின் எல்லா பாகங்களும் சிரேஷ்டமானவை. இதன் பிசின் நெசவுத் தொழிலாளிகளுக்கும் வைத்தியர்களுக்கும் உதவும். இளமையான இதன் இலைகளைப் பேதியை நிறுத்துவதற்கு அரைத்துக்கொடுக்கலாம். இதன் பட்டையைக் கஷாயம் போடலாம். தோலைப் பதமிடுவோர் இதன் பட்டையை உபயோகிக்கின்றனர். சிரங்கு சொரி யுடையோருக்கு இதை அரைத்துப் பூசினல் குணமாகும். சாராயம் தயார் செய்யுங் காலத்தில் அதன் குணத்தை மாற்றுவதற்கு இதை உபயோகப்படுத்துவது வழக்கம். இந்த மரத்திலுள்ள காய்களையும் நாரையும் வேகவைத்துக் கஷாயம் செய்யலாம். பம்பாயில் இதன் நாரினல் கயிறுகளைச் செய்கின்றனர். இதன் குச்சிகள் பற்பொடிக்கு உபயோகமாகும். பசுமையான காய்களால் வர்ணங்கள் செய்யலாம். வேப்பெண்ணெய் குழந்தைகட்கும், பெரியவர்கட்கும் உத்தமமான ஔஷதம். இன்னும் ஆயிரம் விதங்களில் பயன்தரவல்லதாகும்.

பிறரைக் கெடுக்க நினைத்துத் தானே கெட்டுப் போவது வழக்கம். உள்ளதில் திருப்தி யடையாமல் பிறர் பொருள் அபகரிக்கப் புகுந்து கையும் மெய்யுமாய் அகப்பட்டு விழிப்பது முண்டு.

முறுக்கு சுடலாமா?



"என்னவோ வாய்க்கு எதைத் தின்னலாமோவென்று அலைகிறது. ஏதாவது ஒரு பலகாரம் பக்ஷணம் வீட்டில் செய்தால் ஆசை தீரத் தின்னலாம். முறுக்கு சுடுவோமா?" என்றாள் தன் கணவனைப் பார்த்து ஜானகி.

கணவன்:—முன்பு முறுக்கு சுட்டதில் பெரிய சண்டை வந்திருக்கிறது. நீ குழந்தை குமரப்பன் ஒரு முறுக்கு கேட்டதற்குத் தரமாட்டேனென்று ஒரே பிடிவாதம் செய்தாய். 'குழந்தை கேட்டால் கொடுக்கிறது தானே' என்று நான் வந்து சொன்னதற்குக் கையை ஒரு முழ நீளம் நீட்டிச் சிடுசிடுத்துத் தரமாட்டேன் என்றாய். அதற்குப் பின் நான் குழந்தையைக் கடைவீதிக்கு அழைத்துச் சென்று ஒரு அணுவுக்கு முறுக்கும் பக்ஷணங்களும் வாங்கித் தரும்படியாயிற்று. ஏனடா அப்பா, முறுக்குச் சுடச் சொன்னோம்; முறுக்கு சுடாதிருந்தால் இந்தச் சண்டை வந்திராதே என்று மிகவும் மனம் நொந்து போனேன். அந்தக் கஷ்டம் இனி வரவும் வேண்டாம். நீ முறுக்குச் சுட்டு அதிலிருந்து ஒரு சண்டையை வளர்க்கவும் வேண்டாம். வீடு கலகமில்லாதிருந்தால் போதும்.

ஜானகி:—அதெல்லாம் ஒன்றுமில்லை. அம்மாவும் ஊரிலிருந்து வந்திருக்கு. முறுக்கு வெகு நன்றாகச் சுடும். வீட்டில் ஏதாவது பலகாரம் இருந்தால்தான் குழந்தைகளுக்குத் தாராளமாய்க் கொடுக்கலாம்.

கணவன்:—நீ குழந்தைகளுக்குக் கொடுப்பதைவிட வெளியில் உள்ளவர்களுக்குக் கொடுத்து என் வீட்டில் சுட்ட முறுக்கு என்று விளம்பரம் செய்து கௌரவம் பெறுவதில் அதிக சிரத்தையுள்ளவள். நான் தெய்வமே என்று என் பாட்டில் பேசாமல் கிடக்கிறேன். முறுக்கு சுட்டு என்னைக் கலகத்திற்கு இழுக்கவேண்டாம் நமது வீட்டில் ஏதாவது விசேஷம் நடக்கும் பொழுதோ, ஒரு பணியாரம் பக்ஷணம் செய்யும் போதோதான் கலகம் வருவதும், அந்தக் சலகத்தில் அப்போது பணச் செலவிட்டுச் செய்ததை ஆசையாய் மனோ சமாதானத்துடன் புசிக்க முடியாமற் போய்த் துக்கப்படுவதும் வழக்கமாயிருக்கிறது. ஆதலின், எதுவும் செய்யவேண்டாம்.

ஜானகி:—வெறும் சோற்றை மட்டுமே விழுங்கிவிட்டுக் கிடக்க என்னால் முடியவில்லையே. ஏதாவது வாய்க்கு மொற மொறவென்று கொடுத்தால்தான் மென்றுகொண்டு பொழுதைப் போக்கலாம். குழந்தைகளுக்கும் கை நிறையத் தரலாம்.

கணவன்:—எப்படியும் முறுக்கு சுட ஒரு ரூபாய்க்குக் குறையாது. அதற்கு நான் கடையிலிருந்து வாங்கி வந்து கொடுக்கிறேன். நீ ஒருத்தியே தின்று ஆசை தீர்த்துக்கொள்ளு.

ஒருவர் ஒரு தவளையின் வயிற்றினின்றும் அதன் ரத்தாசயத்தைமட்டும் எடுத்துவைத்திருந்ததில், ஒரு வாரம் வரையிலும் அது துடித்துக்கொண்டிருக்கக் கண்டார்.

அதுதான் சுலபம். கலகமில்லாதிருக்கவும் அது நல்ல வழி. வருகிற போகிறவர்களுக்கு வாரிக் கொடுக்காமல் கையில் கிடைத்ததைச் செட்டாகத் தின்னவும் வைக்கும். எவ்வளவு முறுக்கு வேண்மோனாலும் வாங்கி வந்து கொடுக்கிறேன். ஆனால், வீட்டிலே மட்டும் சுடவேண்டாம். முன்பு பட்ட பாடு போதும்.

ஜானகி:—கடையிலிருந்து எவ்வளவு வாங்கி வந்தாலும் போதாது. வீட்டில் செய்தால் தான் செலவும் குறையும்; தாராளமாகவும் வரும்.

கணவன்:—நீ செலவைக் குறைப்பதில் வெகு கண்ணுள்ளவள்தான். இன்று காலையில் குழந்தைக்கு இன்னும் கொஞ்சம் தோசைக்கு நெய்விடு என்று பல தடவை சொன்னதற்கு முணுமுணுத்துக்கொண்டு அப்படியே நெய்ப் பாத்திரத்தைத் தூக்கி வந்து வைத்துப் போனாய். நான் குழந்தைக்கு நெய் ஊற்றி விட்டுப் பாத்திரத்தை வாசற்படியில் வைத்து எவர் காலேனும் இடறிவிழும், அதை எடுத்து மேலே வை என்றதற்குப் பேசாமல் போய்விட்டாய். நெய் கீழே கொட்டிப்போனால் போகட்டும், மறுபடியும் பணம் கொடுத்து வாங்கட்டுமென்று இருந்து விட்டாய். நெய் கொட்டுண்டால் மறுபடியும் வாங்க நாம் தான் பணப்பையை அவிழ்க்க வேண்டுமென்று நினைத்து, பாதி புசித்த கையாய் எழுந்து அதை உள்ளே கொண்டுபோய் வைத்து வந்தேன். நேற்றும் என்னோடு ஓர் போர் இட்டுவிட்டுப் போன சமயம் கைக்குழந்தை எண்ணெய் புட்டியைத் தூக்கிவர, அதைப் பார்த்தும் பாராதவள் போலவே போய் விட்டாய். புட்டி உடையட்டும், எண்ணெய் கொட்டட்டும், பணம் செலவாகட்டும் என்று ஆணுவமாய் நினைத்து அப்பால் போனாய். பிறகு நானே எழுந்து புட்டியைக் குழந்தையிடமிருந்து வாங்கி மேலே வைத்தேன். சமுசாரச்செலவில் இவ்வளவு செட்டு காண்பிக்கிற நீதானா முறுக்கை வீட்டில் சுட்டு சிக்கனமும் லாபமும் காட்டப்போகிறாய்? போதும் போதும்! முப்பது வடைகள் சுட்டால் என் மூஞ்சிக்கு இரண்டு மூன்று வடைகள் வரலாமோ என்னவோ! நீ வீட்டில் முறுக்கு சுட்டுச் செட்டுத்தனம் காட்டவரவேண்டாம். முறுக்கும் வேண்டாம். நீ முறுக்கிக் கொள்ளாதிருந்தால் அதுவே நல்ல வெண்ணெய் முறுக்கு ஆகும்.

ஜானகி முகத்தைக் கோணிக் கொண்டு சென்றாள்.

இரவில் பாலும் பழமுமே புசிப்பதாகச் சிலர் வெளியூர்களில் தங்களைப்பற்றிச் சொல்லிக்கொண்டு ஆகாசத்தில் உயர்த்திக்கொள்கிறார்கள். பால் பழத்துடன் அரைப்படி உப்புமா கிண்டிக் கொடுத்தால் அதையும் இழுக்கிறார்கள். எவ்வளவு வந்தாலும் திருவயிற்றுக்குள் தள்ளுகிறார்கள். ஆனால் சாதம் மட்டும் புசிப்பதில்லை. இவ்வேஷக்கார ஞானிகள் தங்கள் வீட்டில் இரவிலே உண்பதோ சாதமும் குழம்பும் தான். எல்லாம் வெளி டம்பம்.

ஒரு நகை செய்யும் ஆரம்பத்திலேயே வீட்டுக்குள் கலக முண்டாகுமானால், அந்த நகை செய்யும் ஆசாரி ஐந்து நாளைக்குப் பதிலாக ஒரு மாதத்திற்குப் பிறகே அந்த நகையைத் தரும்படியாகி ஓயாமல் அலையவைத்துவிடும். காரணம் மூதற் கோணலே.

17—ஸம்ஸ்கிருத மகா கவிகள்.

—அவர்களின் ஜீவிய வரலாறு—

1. காளிதாஸன்
2. அமரஸிம்ஹன்
3. வராகமிகிரன்
4. க்ஷபணகன்
5. சங்கு
6. வேதாளபட்டன்
7. வரருசி
8. தன்வந்திரி
9. கடகர்ப்பரன்
10. பவபூதி
11. தனஞ்சேயர்
12. பாணன்
13. மயூரன்
14. தண்டி
15. சோமதேவர்
16. பட்டநாராயணன்
17. ஸ்ரீ ஹர்ஷன்

நமது பாரதபூமியில் மற்றத் தேசங்களை விட, ஸம்ஸ்கிருதம் தமிழ் முதலான பாஷைகளில் வரகவிகள் என்று பேர் பெற்ற வித்வான்கள் பலர் இருந்திருக்கின்றார்கள். ஆயினும், அவர்களது கீர்த்தியின் சரீரங்களாகிற புஸ்தகங்களை மாத்திரம் நாம் பார்த்தும் படித்தும் வருகிறோம். அவர்களுடைய சரித்திரங்களைப்பற்றி நிச்சயமாய்ச் சொல்ல நமக்கு ஒன்றும் ஆதாரங்கள் இல்லை. ஆனால், ஜனங்களுக்குள் அவர்களைப்பற்றி வழங்கி வருகின்ற கதைகளினாலும், சிலாசாஸனம் முதலிய ஆதாரங்களினாலும் சில விஷயங்கள் ஒருவாறு தெரிய வருகின்றன. ஸம்ஸ்கிருத பண்டிதர் யாரையாவது காளிதாஸன் முதலிய கவிகள் எப்பொழுது வாழ்ந்திருந்தார்கள் என்று கேட்டால், அவர்கள் ஒரு சுலோகம் சொல்வதுண்டு. அதன் தாத்பரியம் என்னவென்றால், காளிதாஸன், தன்வந்தரி, க்ஷபணகன், அமரஸிம்ஹன், சங்கு, வேதாளபட்டன், கடகர்ப்பரன், வராகமிகிரன், வரருசி இவர்கள் ஒன்பது பேர்களும் ஒன்பது ரத்நங்கள்போல விக்கிரமாதித்ய மகாராஜாவின் சபையில் விளங்கி வந்தார்களென்று சொல்லுவார்கள். இதைவிடக் கொஞ்சம் அதிகமாய் இவர்களைப்பற்றி எழுத நாம் முயலுவோம்.

ஃ

1. காளிதாஸன்:—

விக்கிரமார்க்க சகமென்று வட நாடுகளில் வழங்கிவரும் ஆண்டுக்குத் தலைவனான விக்கிரமாதித்ய அரசன் கி. மு. 56-வது வருஷத்தில் வாழ்ந்திருந்தவன். அந்தக் காலமானது சற்றேறக்குறைய 1990-வருஷங்களுக்கு முன். அப்பொழுது அந்த மகாராஜன் வடக்கே ஆட்சி செலுத்திவந்தான். இவர் காலத்தில் தான் இந்த ஒன்பது ரத்நங்கள் விளங்கினார்களோ, அல்லது, அதற்கு முந்தியோ பிந்தியோவென்று சந்தேகிக்க வேண்டியதாயிருக்கிறது. ஏனெனில், விக்கிரம ராஜனென்றும், போஜனென்றும் பேர்பெற்ற மற்றொரு அரசன் மாளவதேசத்தில் கி. பி. 1040—1090—வருஷங்களுக்கு இடையில்

சில குடும்பங்களில் வீட்டுக்காரன் எவ்வளவு வாங்கி வந்து கொட்டினாலும் வீட்டிலிருக்கும் எவர்க்கும் விசுவாசமிருப்பதாகக் காணோம். வீட்டுக்காரனின் தேக சுகத்தையோ, அவனை உபசரிப்பதையோ கவனிப்பவர்களாகவுமில்லை.

ஆண்டுவந்ததாக அநேக சிலா சாஸநங்களினல் தெரிய வருகிறது. மேலும், இவர் வசித்த முக்கிய பட்டணங்கள் உஜ்ஜயினி, தாரா முதலிய நகரங்களாகத் தெரிய வருகிறது. ஒன்பது ரத்நங்கள் உஜ்ஜயினி நகரத்தில் விக்கிரமராஜன் சபையில் பிரகாசித்ததாக வழங்கி வருகிறபடியாலும், இந்த விக்கிரமனுக்கு போஜனென்னும் மற்ஞெரு பேர் இருக்கிறபடியினலேயும், காளிதாஸன் சற்றேறக்குறைய 850-வருஷங்களுக்கு முந்தி மாளவதேசத்தில் வசித்து வந்ததாகச் சிலர் சில ஆதாரங்களைக் கொண்டு கூறக்கூடும்.

ஃ

ஆனல், இதுவும் சரியன்று; ஏனெனில், போஜனுகிய விக்கிரமனைப்பற்றிக் காலம் ஏற்பட்டபோதிலும், காளிதாஸன் இவர் காலத்தில் இருந்தான் என்பதற்கு என்ன ஆதாரம்? சாலுக்ய அரசன் புளகேசி என்பவர் நாளில் கொடுக்கப்பட்ட ஒரு சாஸநத்தில் பாரவி, காளிதாஸன், இருவர்களுடைய பேர் கண்டிருக்கிறது. இந்த சாஸநத்தின் காலம் சாலிவாஹன சகவருஷம் 507. அதாவது கி. பி. 585. இந்த காலத்திற்கு முந்தியே காளிதாஸன் பெயர் ஜனங்களுக்குள் பிரசித்தமானதாகத் தெரியவருகிறது. குறைந்த பக்ஷம் சாலிவாஹன சகம் 500-வருஷத்தில், அதாவது 1350-வருஷத்திற்குமுன் காளிதாஸன் ஜீவித்திருந்ததாக, நாம் கர்ண பரம்பரையாய்க் கேட்டிருப்பவைகளைக் கொண்டு சொல்லலாம்.

ஃ

காளிதாஸன் முதலில் ஸம்ஸ்கிருதம் என்பதே தெரியாதவனுயிருந்து, பின்பு காளிகாதேவியின் வரப்பிரஸாதத்தால் ஸம்ஸ்கிருத வித்தையை அறிந்தான் என்பதற்கு ஜனங்கள் ஒரு கதை சொல்வார்கள். அந்தக் கதை எங்கும் பிரஸித்தம். அதை விரிவாக "விநோதரஸ மஞ்சரி" என்ற நூலில் காணலாம். மாளவதேசத்து அரசனின் குமாரத்தி தன்னை மணக்க வருகிறவர்களை யெல்லாம் பண்டித பரீக்ஷை செய்து ஜெயித்து அவமானப்படுத்த, அதன்மீது அந்த வித்வான்கள் ஒரு மரத்தின் நுனிக்கிளையில் உட்கார்ந்துகொண்டு அடிக்கிளையை வெட்டிக் கொண்டிருந்த பெரும் மூடனுன ஓர் பிராமணனை மஹா வித்வானெனக் கூறி அரசன் ஸமுகத்தில் சேர்ப்பிக்க, அவனும் ஆராயாது தன் குமார்த்திக்கு அவனை மணம்செய்து வைத்திட, இரவில் பள்ளியறையில் இராஜகுமாரி தன் கணவனின் மூடத்தனத்தை யறிந்து, ஸம்ஸ்கிருதபாஷை கற்றுக்கொண்டு வந்தாலொழிய இங்கு வரலாகாதென்று துரத்திவிட, அந்தப் பிராமணன் ஒரு காளிகோயிலில் போய்ச் சேர,

---

தன் மனைவிக்கு அதிக மயக்கமென்றும் உடனே வரவேண்டுமென்றும் தன் மாற்ருந்தாய்க்கு ஒருவன் கடிதம் எழுதியும் இரண்டு வாரத்துக்குப் பிறகுங்கூட அந்த மாது வரவேயில்லை. அவளைச் சேர்ந்தவர்களுக்கு மயக்கம் என்று கடிதம் வந்திருந்தால் உடனே புறப்படாதிருப்பாளா? இப்படி மனம் வேறு பட்டுக் கிடக்கிற வித்தியாசத்தன்மையாளர் தாங்கள் ஏதோ நெருங்கி நெருங்கி வந்தும் மூத்தாள் குமாரன்தான் தங்களைச் சேர்ப்பதில்லையென்று பசப்பு வார்த்தைகள் பகர்ந்தால்—அந்த வார்த்தைகளை யார் மதிக்கப்போகிறுர்கள்? அவரவர்களின் செயலே அவரவர்களின் குணத்தைக் காட்டும் கண்ணுடியாம்.

காளி அவனது நிலைக்குப் பரிதபித்து அவன் நாக்கை நீட்டச்சொல்லி, ஸரஸ்வதியின் பீஜாக்ஷரத்தை அதில் எழுதி அனுக்கிரகித்துக் காளிதாஸ னென்று நாமமிட்டதாகச் சொல்லு வார்கள்.

ஃ

தேவி பிரஸாதத்தால் அப்பொழுதே அவன் எல்லா வித்தைகளையும் கற்றவனாய், தனக்குக் கல்விச் செல்வத்தை யளித்த தேவியை உத்தேசித்தே தனது முதல் கிரந்தமாகிய "சியாமளா தண்டக"த்தைப் பாடிக் கொண்டே அன்று இரவே தனது மனையாட்டியின் வீடுவந்து சேர்ந்தான். அவள் இவன் பாடிக்கொண்டு வருவதைக் கேட்டுத் திகைத்து இவன் கதவை இடித்தபொழுது "இப்போது சிறிது கல்வித்திறம் உண்டாயிருக்கிறது" என்று கூறிக் கொண்டே கதவைத் திறந்தாள். அதை மனதில் வைத்துக்கொண்டு அவள் கூறிய மூன்று பதங்களைக் கொண்டே முதல் பதத்திற்குக் "குமார ஸம்பவம்" என்னும் கிரந்தத்தையும், இரண்டாவது பதத்தைக்கொண்டு "மேகதூதம்" என்னும் காவ்யத்தையும், மூன்றாவது பதத்தைக்கொண்டு "ரகுவம்ச" மகா காவ்யத்தையும் காளிதாஸன் இயற்றினான். இவன் கவிகளுக்கெல்லாம் சிரேஷ்டன். சாகுந்தலம், மாளவிகாக்கினி மித்ரம், விக்கிரமோர்வசி என்னும் நாடகங்களையும், இன்னும் அநேக புஸ்தகங்களையும் எழுதினான். ஸம்ஸ்கிருதத்தில் இவனுடைய நடை மிகவும் தெளிவான நடை. அன்றியும், உள்ளதை உள்ளபடி வர்ணிப்பதில் இவனைவிடத் தேர்ந்த கவி ஸம்ஸ்கிருதபாஷையில் இல்லவேயில்லை. "மிருச்சகடி" என்னும் நாடகத்தைச் செய்த "சூத்திரக் கவி"யை இவனுக்கு இந்த விஷயத்தில் ஒருகால் சமானமாகச் சொல்லலாம். இவன் மிகவும் தெளிவான நடையில் எழுதினபடியால், கடினமான பதங்கள் இவனுக்கு உபயோகிக்கவே தெரியாதென்று வேறு சில கவிகள் எண்ணிவிட்டார்கள். இதை அறிந்ததும் காளிதாஸ மகா கவியானவன் "நளோதயம்" என்னும் கிரந்தத்தைப் பண்ணினான். அதற்குப் பதம் பிரிக்க ஒரு கவியாலும் ஆகாமல், கடைசியாய் அந்தப் புஸ்தகத்திற்கு அவனே பதவுரை எழுதும்படி நேரிட்டது.

ஃ

காளிதாஸனிடத்தில் மாளவ தேசத்து மன்னன் அதிக பிரீதி வைத்திருந்தபடியால், மற்றக் கவிகள் இவனை வெறுத்து வந்தார்கள். அன்றியும் இவனைப்பற்றிப் பல காலங்களில் அரசனிடத்தில் கோட்சொல்லி வந்தார்கள். அரசன் ஒவ்வொரு விதத்திலும் காளிதாஸனைப் பரிசோதித்துப் பார்த்து, இவன் மகாத்மா என்றறிந்தபடியால், அவன் பாதங்களைத் தலையால் வகித்துச் சாகுமளவும் அவனைக் காப்பாற்றிவந்தான். காளிதாஸன் சாக்தன். அதன் நிமித்தம் இரண்டொரு தடவை பூஜைக்காக இவன் மதுமாம்ஸாதிகள் வாங்கிக்கொண்டு போவதை இவனுக்குச் சத்துருவாகிய ஒரு கவி கண்டு, காளிதாஸன் கக்ஷத்தில் மீன் கொண்டுபோகிறானென்று அரசனிடம் சொல்ல, அரசன் அவனைக் கைப்பிடியாக வரவழைத்து அவன்

உன்னிடமுள்ள எல்லா செல்வங்களையும் பிறருக்குக் கொடுத்துவிடலாம். ஆனால், உன் புஸ்தகங்களை எவருக்கும் கொடாதே. அந்தப் பொல்லாங்கான மதிமோசமான செய்கையை நீ ஒருபோதும் செய்யாதே.

கஷ்கத்திலிருந்ததைக் கீழேவைக்கும் படியாகச் சொல்லிப் பார்த்து, இராமாயணமாய் இருக்கக்கண்டு, இவர் மகானென்று அவர் திருவடிகளை வணங்கினானும். இன்னொரு சமயத்தில் ஒருவன் காளிதாஸனைப் போஜனத்துக்கு அழைத்து, அவன் வெகு நேரம் வரையில் வாராமலிருந்து பிறகு தந்தசுத்தி செய்யாமல் கூட வந்து உட்கார்ந்தபொழுது, இப்படி வரலாமோவென்று ஜனங்கள் கேட்க, உடனே கங்கையில் ஸ்நாநம் பண்ணி என் பாபத்தைப் போக்கிக் கொள்கிறேனென்று அவன் முற்றத்தில் உட்கார்ந்து, கங்கையைப் பிரார்த்திக்க, அந்த நதி ஆகாசமார்க்கமாய் வந்து அவன் தலையில் அபிஷேகம் செய்துபோனுளாம்.

ஃ

காளிதாஸன் சாக்தனுகவும் சிவ பக்தனுகவும் இருந்தது அவன் புஸ்தகங்களில் எங்கும் தெரிவதுடன், அவன் விஷ்ணுத் துவேஷி அல்லவென்றும், அத்வயித மதத்தைக் கொண்டவனென்றும் தெரிய வருகிறது. அநேக இடங்களில் விஷ்ணு ஸ்தோத்திரங்களும் செய்திருக்கிறான். காளிதாஸனது நூல்களில் பாஷை நடையில் வித்தியாசம் சில புஸ்தகங்களில் தெரிகிறது. அதனுல் காளிதாஸன் ஒருவனல்ல என்று சொல்வது கூடாது. அப்படி வித்தியாச நடை காணப்படும் புஸ்தகம் நளோதயம் ஒன்றே. இதற்குக் காரணம் மேலே தெரிவித்திருக்கிறது. நளோதயம் என்பது பொருமைப்பட்ட கவிகளுடைய வாயை அடக்கச் செய்யப்பட்ட கிரந்தம். மற்றக் கிரந்தங்களெல்லாம் ஒரே மாதிரியே. அவைகளில் தென்படும் அதிநுட்பமான வித்தியாசங்கள் காளிதாஸனின் சிறு வயது. கிழ வயது முதலிய பருவங்களுக்கேற்ற வித்தியாசங்களே யல்லது வேறுவித வித்தியாஸமல்ல.

ஃ

2. அமரஸிம்ஹன்:—

இந்த மகா வித்வான் ஒன்பது ரத்நங்களுக்குள் ஒன்ருய் விக்கிரமாதித்ய மகாராஜன் சபையில் உஜ்ஜயினீபட்டணத்தில் காளிதாஸன் முதலிய கவிகளோடு இருந்ததாகச் சொல்வர் இந்த அமரஸிம்ஹன் என்பவர் ஸம்ஸ்கிருத பாஷையில் நிகண்டு பண்ணியிருப்பவர்களுக்குள் முக்கியமானவர். காளிதாஸ மகா கவியினுடைய புஸ்தகங்களில் காளிதாஸன் அமரஸிம்மனுக்கு முன்னே இருந்ததாகச் சில அடையாளங்கள் தெரிய வருகின்றன. அமரஸிம்மனுடைய நிகண்டுவில் கூறிய பொருள், திணை, பால் இவைகளுக்கு வித்தியாஸமாய்க் காளிதாஸன் சில பதங்களை வெகு இடங்களில் பிரயோகித்திருக்கிருர். இதனுல் அமரஸிம்மன் என்பவர் காளிதாஸனுக்குப் பின் இருந்ததாகத் தெரிய வருகிறது. இதை அனுசரித்து வடக்கு தேசத்தில் "புத்தகயா" என்னும் ஊரில் ஒரு சிலா சாஸனத்தில் விக்கிரமார்க்க

ஒரு குடும்பத்திலிருப்பவர்களோ, அல்லது புருஷன் மனைவியோ தங்களுக்குள் கோபம் கொதித்தெழும்போது வேறு ஊருக்காவது எந்த இடத்திற்காவது போய் விடுவதாகச் சொல்லி உறுமி ஆத்திரங் காட்டிப் பேசி அப்போதே புறப்படப் போவதாகத் தடபுடல் செய்வார்கள். பிரயாணத்துக்கு நாளும் குறித்து விடுவார்கள்! கடைசியில் போகிறதேயில்லை. போயினும் நாறி மாறிப் பல கடன்களுடனே சீக்கிரத்தில் மறுபடியும் வீடு திரும்புவோராகிருர்கள்.

சகம் 1005-வது வருஷம் அமரதேவர் அந்தக் கோவிலைக் கட்டிவைத்ததாகக் கண்டிருக்கிறது. விக்கிரமார்க்க சகம் 1005-வது வருஷம், கி. பி. 949-க்குச் சரியான வருஷம். இதனால் வெளிப்படுவதென்னவென்றால், கி. பி 940-ம் வருஷம் அமரஸிம்மன் பிரபல தசையில் இருந்துகொண்டு பவுத்தர் கோயிலைக் கட்டினரென்றும், அவர் சற்றேறக்குறைய அதே காலத்தில் தமது நிகண்டுவைச் செய்திருக்கவேண்டு மென்றும் தோன்றுகிறது. புத்தகயாவில் நமக்கு இப்பொழுது அகப்பட்டிருக்கும் சாஸனரீதியாய் அமரஸிம்மன் காளிதாஸனுக்கு 450-வருஷத்திற்குப் பின் இருந்ததாகவும். அவர் பௌத்த மதஸ்தர் என்றும் தெரிய வருகிறது. நவரத்னங்களில் ஒன்ருய் இவரைச் சொல்வதில், இவர் வேறு மதஸ்தனுக இருந்தபோதிலும் நமக்கு ஆக்ஷேபமொன்றுமில்லை. ஆனல், இவர் உஜ்ஜயனியில் ஆண்டுவந்த விக்ரமார்க்கன் நாளில் வசித்து வந்தவரல்ல; அதற்கு 100-வருஷத்துக்குப் பிந்தி இருந்தவர். இவர் நிகண்டு தவிர, வேறு பல கிரந்தங்களும் எழுதியிருந்தார். ஆனல் அவைகள் பவுத்தர்களுக்கும் பிராமணர்களுக்கும் நடந்த சண்டையில் அழிந்துபோயின.

(இனி, ‘மூன்றில்’ முடிவு.)

சிலர் தங்களின் நண்பர்களுக்கு எவ்வளவு உதவி செய்ய வேண்டுமோயினும் சலிப்பதேயில்லை. தாங்கள் செய்யாவிட்டால் அந்த நண்பர் தவித்துப் போவார் என்று எண்ணித் தங்களால் இயன்றதை யெல்லாம் மனஸ்பூர்வமாகச் செய்ய முற்படுகின்றனர். இந்த உதவிகட்கு அந்த நண்பர்களும் தக்க பாத்திரமாய் உத்தம குணசீலர்களாயிருப்பதும் சரியான பொருத்தமே.

விஸ்தாரப் பேச்சைவிட செய்கை மேல்.

ஓரிடத்தில் வேலைக்கு அமர நற்சாக்ஷி தருமாறு கேட்டதற்கு ஒரு கனவான் இரண்டு பக்கம் வரை அவரைச் சிலாகித்து எழுதித்தந்தார். அதில் பணம் விஷயமாய் நாணயமாக நடப்பாரா என்ற முக்கிய சங்கதியை மட்டும் ஜாடையாக எழுதாது விட்டு விட்டார். மற்றொரு கனவானே இரண்டே வரியில் இவரது நாணயத்துக்கு நானே உத்திரவாதி என்று எழுதித் தர, அதுவே ஏற்றுக்கொள்ளப் பட்டது. தம் கஷ்டத்தைத் தெரிவித்த ஒருவருக்குப் பதில் கடிதம் எழுதாமல் இருபது ரூபாய் மணியாடர் செய்துவிட்டு மவுனமானுர் ஒரு சீமான். மற்றொருவரோ வெகு பிரியமாய் அநுதாபக் கடிதம் நாலு பக்கம் எழுதியனுப்பியதைத் தவிர பணம் ஏதும் தரவில்லை. இதில் எவர் உதவி பெரியது?

6-ஆங்கில காதற் கடிதங்கள்.

(358-ம் பக்கத் தொடர்ச்சி.)

5-ம் கடிதம்.

அந்தப் பெண்ணின் தமயனது கடிதம்.

ஐயா,

* என்னுடன் சகவாசஞ் செய்து, நானும் அதிக எண்ணம் வைத்திருக்குங் கனவான் இதுவரையில் உம்மையல்லாது மற்றொருவரையு மறியேன். நாமிருவரும் கூடிப் போக்கிய இன்பமான காலம், மறுபடியுங் கூடினாலொழிய ஈடாகாது. நீங்கள் என் தங்கைக்கு எழுதிய முதற் கடிதத்தை நான் வாசித்துப் பார்த்தபோது, நீங்கள் சொல்லும் விவாகப்பேச்சு எங்கள் குடும்பத்துக்கு மஹா பெருமையானதென்று நான் எண்ணியது மல்லாமல், நீங்கள் அதற்காகப் பேசிய பெண்ணுஞ் சமயோக்கியதையுடையவளேயென்று பட்சபாதமின்றி உறுதியாக நம்புவதானேன்.

ஃ

அவள் பள்ளிக்கூடத்தைவிட்டுப் பத்து வருஷங்களாயின. இதுவரையில் அவள் என் வீட்டுக் காரியங்களுக்குத் தலைவியாய் அவைகளைத் தன் வயதுக்கரிதான விவேகத்துடன் நடத்தி வருகிறாள். எங்களுக்குச் சமீபத்திலிருக்கும் நரி வேட்டையாடுங் கனவான்கள் அநேகர் அவளை விவாகம் செய்துகொள்ளக் கேட்டதற்கு, அவர்களின் நடக்கை யவள் கருத்துக்கு முழுதும் விரோதமாயிருந்தபடியால், அவர்கள் சொல்லிய பேச்சுகள் பிரயோஜனமுள்ளவைகளாய்த் தோற்றப்பட்டாலும் அவைகளை வெறுப்புடன் தள்ளிவிட்டாள்.

ஃ

ஐயா, என் தங்கை தனக்கு வருத்தமில்லாத ஜீவனத்துக்கு மிஞ்சிய ஐசுவரியத்தை சட்டைபண்ணுத மிகத் தெளிந்த புத்தியுடையவளாய், மனோவேதனையற்றிருக்க மிக விரும்பியவளாதலால், உலகத்திற் சிறந்த மேன்பாட்டை யனுபவிக்கத் தன் மனச் சமாதானத்தை யிழந்துபோகாதவளாயு மிருக்கிறாள். ஐசுவரியமுண்டாயிருந்தால், தம்மாற் படைக்கப்பட்ட மனிதருக்குத் தம்முடைய அளவற்ற தயவினுற் கொடுக்கப்பட்ட அந்த ஐசுவரியத்தை யவர்கள் எவ்விதத்தில் செலவு செய்தார்களென்று அவர்களிடத்திலே கண்டிப்பான கணக்குக் கேட்போமென்ற பரம கடவுளுடைய பிரமாணிக்கமுள்ள பொக்கிஷக்காரியைப்போலத் தன்னோடொத்த மனிதருக்குத் தான் உபகாரம் செய்யும் கடன் தனக்கு இருக்கிறதாக அவளே சொல்வாள். தனக்கு இருக்கும்

---

* "Sir, I Know not of any gentleman who ever yet honoured me with his company, and for whom I have a greater regard than yourself; and the agreeable hours we have spent together cannot be equalled, unless they are repeated."

ஒழிவு வேளைகளிற் புத்தகங்களை வாசிப்பாள். தோட்டத்திலாவது வெளியிலாவது நான் அவளைக் காணும்போது எந்நேரமும் தன் கையில் மில்ட்டன்—தாம்சன்—யங்கு—என்பவர்கள் செய்த நூல்களுடன் பெரும்பாலும் தன் வேத நூலும் வைத்திருப்பாள். அன்பால் அந்தத் தங்கையைப் புகழ்ந்து நான் சொல்லியது சகோதரபட்சத்தாலென்று ஒருவேளை உங்கள் சிந்தைக்குத் தோற்றலாம். ஆனால், ஐயா, நீங்கள் முழுதும் அன்னியராயும், விவாகம் பண்ணியவராயும் இராவிட்டால், அவளிடத்தில் விளங்குகிற அநேக குணாதிசயங்களைச் சொல்ல முற்பட்டிரேன்.

ஃ

குணமும் விவேகமும் இல்லாதிருப்பவனே என் தங்கையின் யோக்கியதைகளை அறியாதிருப்பான். ஆனால் உங்களைப்போலொத்த யோக்கியதையுடையவன் அவைகளின் உண்மையான மதிப்பைச் சரியாக அறிவான். இருளும் பிரகாசமும் ஒன்றாகப் பொருந்தாததுபோல, விரோதகுணம் படைத்தோா ஒருநாளுஞ் சுகப்படமாட்டார். உள்ளும் புறமும் பொருந்திய இடத்தில் நியாயமான சுகங்களுக்கொன்றும் விரோதமிராது. ஆனால், அந்தக் காரியங்களை நன்றாய் அறிந்தவராகிய உங்களுக்கு எழுத வேண்டியதில்லையென்பதை மறந்தே விட்டேன். ஒரு பக்கத்தில் உங்களின் நேசத்தையும் நலத்தையும், மற்றொரு பக்கத்தில் என் தங்கையினுடைய சௌக்கியத்தையும் நான் பாராட்டாவிட்டால் இவ்வளவு தூரம் எழுதவுமாட்டேன்.

ஃ

ஆகிலும், இனி உங்களுக்குத் தாமதம் வேண்டியதில்லை. உங்களின் சுப கலியாணத்துக்கு என் சம்மதம் காத்திருப்பதுமல்லாமல் நான் முன் சொல்லியபடி அது மிகப் பாக்கியமான காரியமென்று எண்ணியிருக்கிறேன். மேலும், நீங்கள் இஷ்டம் வைத்த ஸ்திரீயைக் குறித்து ஒருநாளும் விசனப்படமாட்டீர்களென்பதற்கு நான் எவ்வளவுஞ் சந்தேகப்படவில்லை. உங்களுக்கிருக்கும் லௌகீக காரியங்களுக்காக நீங்கள் லண்டனுக்குப் போகவேண்டியதாகக் கேள்விப்பட்டேன். அந்தக் காரியங்கள் தீர்ந்தபின்பு உங்களுடைய சமாசாரமும், நீங்களும் என் தங்கையும் செய்துகொள்ளும் சுப கல்யாண சமாசாரமும் கேள்விப்படச் சந்தோஷமாயிருப்பேன். அதுவரையில் அவள் என் வீட்டில்தானே யிருப்பாள். அங்கே நீங்கள் தாராளமாய்க் காகித பத்திரங்கள் எழுதியனுப்பலாம்.

இங்ஙனம்

உமக்கு க்ஷேமம் கோருகிறவனாகிய

ஜான் வில்லியம்.

அந்தக் கனவான் லண்டன் நகரம் வந்து சேர்ந்த பின்பு நாட்டிலிருந்த அந்தப் பெண்ணுக்கு எழுதிய

ஆறாவது கடிதம்

அடுத்த ஸஞ்சிகையில் வரும்.

ஒருவர் நம்மை அலக்ஷியப்படுத்தும்போதும், சேவலம செய்யும் போதும், ஒவ்வொன்றிலிருந்தும் ஒரு படிப்பினையைத் தெரிந்துகொண்டு, அதைத் தனியாக ஒரு புஸ்தகத்தில் எழுதிவைத்துப் பல முறை அதைப் பார்த்துக் கொள்ளப் பயிலவேண்டும்.

துரௌபதி கூந்தல் முடித்தல்.

—மஹாபாரதப் போரின் சுருக்கம்.—

ஐவர்முன்னே பாஞ்சாலி யாடையுரிந் தார்கயவர்;
மைவளர்ந்த கண்ணாளின் மாண்பகன்று போயினதோ ? (பாரதி.)

பாண்டவர்கள் அஞ்ஞாத வாஸம்செய்துத் திரும்பிவந்த பிறகு, தங்கள் இராஜ்ஜியத்தைக் கொடுக்கும்படி கேட்க, துரியோதனன் கொடுப்பதில்லையென்று மறுத்தான். தருமபுத்திரர் மிகவும் சாந்த குணமும், பந்துக்களிடத்தில் நேசமும், உயிர்களிடத்தில் அன்பும் உடையவராதலின், பங்காளிகளுடன் போர்தொடுத்தால் அநேகம் ஆயிரம் அரசர்களும் பந்துக்களும் உயிரிழக்க நேரிடுமென்று அஞ்சித் துரியோதனாதியர் செய்த அபகாரத்தைச் சிறிதும் எண்ணாமல் தருமத்தையே முதன்மையாகக் கருதி, எவ்விதமாவது சமாதானமாய்ப் போவது நலமென நிச்சயித்துச் சமாதானம் பேசும்படி துரியோதனனிடம் ஸ்ரீ கிருஷ்ணனைத் தூது அனுப்பினார்.

ஃ

இவ்வாறு தருமர் சமாதானம் பேசப்புகுவது பீமசேனனுக்குச் சிறிதேனும் சம்மதமேயில்லை. ஏனெனில், முன் சூதாடித் தோற்ற காலத்தில் துரௌபதியை ராஜசபையில் கொண்டுவந்து பரிபவப்படுத்தியபோது அதைப் பார்க்கப் பொறாமல், அவ்வாறு மானபங்கம் செய்த துச்சாதனனை மார்பைப் பிளந்து அவ்வுதிரத்தைப் பானம் பண்ணுவதுமன்றியில், அந்தத் திருதராஷ்டிரன் பிள்ளைகள் நூற்றுவரையும் தானே கொல்லுவதாகப் பிரதிக்ஞை செய்திருந்தானாதலின், அதைத் தான் அவ்வாறே நிறைவேற்ற வேண்டுமென்பது அவன் கருத்து. ஆதலின், அவன் கோபங்கொண்டு தமையனிடத்திலிருந்து எழுந்துபோய் விட்டான்.

ஃ

அப்படிச் செல்லும்போது துரௌபதியின் கிருகத்திற்கருகே வந்து சேர, அச்சமயம் வெளியிற் சென்று திரும்பித் தலைவிரிகோலமாய் தன் சேடியுடன் வந்த துரௌபதியை நோக்கி, "என் கண்மணியே, நீ ஏன் இவ்வளவு விசனமுற்றிருக்கிறாய், உன் முகத்தைப் பார்த்தாலே அது தெரிகிறதே" என்று கேட்க, அருகே நின்ற சேடி அதற்குப் பதில் சொல்லலானாள்.

ஃ

"மகா பிரபுவே, இன்று காலையில் நமது மகாராணியார் காந்தாரி முதலிய பெரியோர்களைத் தொழுது

பிறனொருவன் சொல்லுகிற யோசனையோடு இன்னொருவரின் யோசனையையும் கேட்டுப் பார். ஏனெனில், முன்னவன் வஞ்சனையோடு உன்னைக் கெடுக்க நினைத்துச் சொல்லியுமிருக்கலாம்.

வரும்படி அவர்களிடம் போயிருந் தார். திரும்பி வரும்போது வழியில் துரியோதனன் மனைவியாகிய பானு மதி துரௌபதியை நோக்கி, "பாஞ் சாலீ, உன் பதிகள் தங்கள் ஐவருக் கும் ஐந்து கிராமம் கொடுத்தாலே போதுமென்று கேட்டுச் சமாதானம் பேசுகிறார்களாமே, நீ ஏன் இன்னும் தலை முடியாமலிருக்கிறாய்?" என்று பரிகாசமாய்ப் பேசினார்கள்" என்று சொன்னாள்.

ஃ

பீமன் அது கேட்டுத் தன்னருகே யிருந்த ஸகாதேவனைப் பார்த்து, "ஸகாதேவா, கேட்டாயா என, ஸகா தேவன், "அண்ணா, எட்டிச் செடி யில் படர்ந்த திராக்ஷைக் கொடியும் அத்தன்மையாகுமல்லவா" என்றான். பீமன் மறுபடியும், "அதற்குத் துரௌபதி சொன்ன பதில் என்ன?" என்று கேட்க, சேடி, "பரிஜனம் பக்கத்தில் இல்லாமலிருந்தால் அல் லவோ மகாராணியார் வாய்திறந்து பேசவேண்டும்; உங்கள் கூந்தல்கள் விரிவதற்கு முன்பு எங்களரசி தலை முடிவதெப்படி? என்று நானே அதற் குப் பதில் சொல்லிவிட்டேன்" என் றாள். அதுகேட்டுப் பீமன் மிகவும் சந்தோஷமடைந்து, தான் அணிந்து கொண்டிருந்த ஆபரணங்களைக் கழற்றி அவளுக்குக் கொடுத்து விட்டான்.

ஃ

இப்படி இவர்கள் பேசிக்கொண் டிருக்கையிலே கஞ்சுகி ஒருவன் ஓடி வந்து, தூது சென்ற கிருஷ்ணன் போனபடியே திரும்பி வந்தாரென் றும், துரியோதனன் சமாதானத் திற்கு இணங்காமல், கிருஷ்ணனைப் பிடித்துக் கட்ட முயல, அவர் விசுவ ரூபங்கொண்டு அவர்களைப் பிரமிப் பித்துத் திரும்பி வந்து சேர்ந்தாரென் றும், தங்களைப் பார்க்க விரும்புகிறா ரென்றும் தெரிவித்தான். அது கேட்டுப் பீமசேனன், இந்தத் துரி யோதனனுக்குக் கேடுகாலம் கிட்டிக் கொண்டது, மகா யோகிகளுடைய மனதினாலும் எட்டவொண்ணாத ஸ்வாமியை இந்தத் துஷ்டன் கயிற் றினால் கட்ட முயன்றானல்லவா? என்று சொல்லித் துரௌபதியை நோக்கி, "துரியோதனாதியரை அதம் செய்வதாகிய மகா யாகம் ஒன்று இப்பொழுது நடக்கப் போகின்றது; அந்த யாகத்தை முற்ற நிறைவேற் றின பிறகுதான், இனி நான் உன் முகத்தை வந்து பார்ப்பேன்" என்று சொல்லிச் செலவு பெற்றுக்கொண்டு போய்விட்டான்.

ஃ

பிறகு கிருஷ்ணன் முதலான வர்கள் கூடி ஆலோசித்து, பந்து மித்திரங்கள் மாண்டு போகும்படி நேரிடுகின்றதே யென்றஞ்சி அதற்கா கப் போர்க்குப் பின் வாங்குவது ராஜதருமமல்ல; அபகீர்த்திக்கும் இடமாகும் எனத் தேர்ந்து, போர்க் குப் படையெடுக்க வேண்டியது அவசியமேயெனத் தீர்மானித் தார்கள்.

ஃ

பின்பு பாண்டவர்கள் பாஞ்சால ராஜன் மகனான திருஷ்டத்யும்னனை யும், கௌரவர்கள் பீஷ்மாசாரியாரை

எப்போதும் ஒரு காரியத்துக்காகக் காத்திருக்கும்போது காலம் கழிவது பெரும் பாரமாகவே இருக்கும். அதிலும் போன இடத்தில் குறித்த மனுஷ் யர் இல்லாமல் அவர் வரும்வரையில் காத்திருப்ப தென்பதிலும் கனத்த தலைநோய் வேறு காண்டலரிது.

யும் சேனாதிபதிகளாக நியமித்துக் கொண்டார்கள். போர் தொடக்க மான பத்துநாள் வரையில் பீஷ்மர் வெகு பராக்கிரமத்துடன் யுத்தஞ் செய்து, பாண்டவ சேனையை அநேகமாக அதஞ் செய்துவிட்டார்.

ஃ

அவர் யுத்த பூமியிலிருக்குமள வும் தமக்கு ஜயமில்லை யென்று கண்டு பாண்டவர்கள் அவரை வெல் வதற்கு யாது உபாயமென்று ஆலோ சித்து, கடைசியில் சிகண்டி யென் னும் பேடியைக் கொண்டுவந்து பீஷ்மர் முன்னே நிறுத்தினார்கள். அவர் பேடியுடன் யுத்தம் செய்ய வெட்கி ஆயுதத்தைக் கீழே எறிந்து விட, அர்ச்சுனன் அத்தருணத்தில் அவரை அடித்துவிட்டான். பிறகு துரியோதனன் வெகுநேரம் ஆலோ சித்துத் துரோணாசாரியரைச் சேனா பதியாக ஏற்படுத்திக்கொண்டான்.

ஃ

துரோணாசாரியார் தமது சேனை களைப் பத்ம வியூகமாக வகுத்து யுத் தம் செய்து கொண்டிருக்கையில், அர்ச்சுனன் குமாரனான அபிமன்யு வென்னும் சிறுவன் தன் பராக்கிர மத்தினால் தன்னந்தனியே அவ்வீரர் களை யெல்லாம் வதைத்துப் பத்ம வியூகத்திற்குள் புகுந்தான் புகுந்து பல வீரர்களைக் கொன்று மிகவும் இளைப்படைந்து நின்ற தருணங் கண்டு துரோணாசாரியர் அவன் வில்லை அறுத்துவிட்டார். அதே க்ஷணத்தில் சைந்தவனும் ஜயத்திரத னும் கர்ணனும் இன்னும் சில அரசர் களும் சேர்ந்து அபிமன்யுவை அநி யாயமாக அடித்துக் கொன்றுவிட் டார்கள்.

ஃ

இந்த செய்தி கேட்டுத் துரியோ தனன் வெகு சந்தோஷமடைந்த வனாய், இந்தச் சமாசாரத்தைத் தன் மனையாட்டியுடன் சொல்லிக் களிப் படைய வேண்டுமெனக் கருதி அவ ளிடத்திற்குச் சென்றான். அவன் மனைவி பானுமதி அத்தருணம் தன் தோழிகளிடம் தான் கண்ட கனவைச சொல்லிக் கொண்டிருந்தாள் "சகி காள்! ஒரு அழகான கீரிப்பிள்ளை வந்து என் முன்பாக நூறு பாம்பு களைக் கண்டதுண்டமாய்க் கடித்து விட்டது. நான் அந்தக் கீரிப்பிள்ளை யைக் கண்டதும் அதன் அழகுக்கு வியந்து அதன்மீது ஆசை கொண் டேன். பின்பு நான் எழுந்திருந்து இந்த லதாமண்டபத்துக்குள் புகுந் தேன். உடனே அந்தக் கீரிப்பிள்ளை யும் என்னைப் பின்தொடர்ந்து விரை வாக வந்து வெகு முறுக்காய் என் னுடைய மார்பு வஸ்திரத்தைத்தள்ளி விட்டது. உடனே மஹாராஜா எழுந் திருப்பதற்காக முழங்கின மங்கள வாத்தியத்தின் ஓசையால் விழித்துக் கொண்டேன். இந்தக் கனவு உங்கள் புத்திக்கு எப்படித் தோற்றுகிறது?" என்று வினவினாள். சகிகள், கண்ட கனவு கெட்ட குறிதான்; இதற்கு ஏதாவது சாந்தி செய்வோமென்று சொல்லிச் சமாதானப்படுத்தினார்கள்.

ஃ

அத்தருணத்தில் துரியோதனன் தன் மனைவியிடம் சென்று, "என் கண்ணே! நீ பயப்படாதே; கனவெல் லாம் பித்த விகாரமே யொழிய

ஆங்கில விபாஸங்களெல்லாம் இடையே திடீரென்று முடித்துவிடுவர். வாசகர்களுக்குக் கற்பனா சக்தி—யோசிக்கும் அறிவு உண்டாக்கவேண்டு மென்பது அவர்களின் கொள்கை. எல்லாவற்றையும் சொல்லிவிடார். கொஞ்சம் சொல்லி, மற்றதைப் பிறர் யோசித்தறியும்படி விட்டுவிடுவார்கள்.

வேறல்ல" வென்று சொல்லிச் சமாதானப்படுத்தினன். அப்பொழுது அடித்த சுழல் காற்றினல் அங்கு நிற்கமாட்டாமல் யாவரும் தோட்டத்திலிருந்த ஒரு உப்பரிக்கைக்குள் போய்ச் சேர்ந்தார்கள். அங்கு துரியோதனன் தன் மனைவியுடன் தன் பிரபாவங்களைச் சொல்லி மகிழ்ந்து கொண்டிருக்கையில், கஞ்சுகி ஒருவன் ஓடிவந்து தேரின் துவசம் சுழல் காற்றில் ஒடிந்து போயிற்றென்று கதறினன். அதைக் கேட்டும் துரியோதனன் அலக்ஷியமாயிருக்க, மனைவி பானுமதி, இது ஒரு பெரிய அபசகுனம்; இதற்கு ஏதேனும் பரிகாரம் செய்ய வேண்டுமென்று கூற, அப்படியாயின், வேத பாராயணம் முதலியவை செய்விக்கும்படி நம் புரோகிதரிடம் சொல்லென்று கஞ்சுகியை அனுப்பிவிட்டான்.

ஃ

இது இவ்வாறிருக்க, அபிமன்னியுவைக் கொன்றவர்களுள் முதன்மையானவன் சைந்தவனெனக் கேட்டு அர்ச்சுனன், "இன்று சூரியன் அஸ்தமிப்பதற்குமுன் நான் அவனைக் கொல்லாவிடின் அப்போதே அக்கினிப் பிரவேசம் செய்கிறே"னென்று கொடிய பிரதிக்ஞை ஒன்று செய்தான். அதைக் கேட்டதும் சைந்தவன் தாயாரும், அவன் மனைவியாகிய துச்சலையும் இச் செய்தியைச் சொல்லிக்கொண்டு துரியோதனனிடம் வந்து வீழ்ந்து அழுதார்கள். அது கேட்டுத்துரியோதனன், "பாண்டவர்கள் வீணாய் எத்தனையோ பிரதிக்ஞைகள் செய்திருப்பதுபோல இதுவும் ஒன்று; நீங்கள் பயப்பட வேண்டாம்; நான் சைந்தவனைக் காப்பாற்றி விடுகிறேன்; அர்ச்சுனன் தன் பிரதிக்ஞையை நிறைவேற்றாமல் மாண்டுபோகப் போகிறான்; அவன் போய்விட்டால் மற்ற நால்வரும் உடனே உயிரிழக்கப் போகிறார்களென்பதும் நிச்சயமே; ஆதலின், இச்செய்தியைக் கேட்டு நாம் சந்தோஷிக்க வேண்டுமே யல்லாது துக்கப்படவேண்டிய காரணம் சிறிதுமில்லை" யென்று அவர்களைச் சமாதானப்படுத்தி யனுப்பி; "நான் யுத்த பூமிக்குச் சென்று, அர்ச்சுனன் கையில் அகப்படவொட்டாமல் சைந்தவனைக் காப்பாற்றி, அர்ச்சுனன் அக்கினிப் பிரவேசம் பண்ணும்படி செய்துவிட்டுத் திரும்பி வருகிறேன்; நீ அந்தப்புரம் போய்ச் சேர்" என்று சொல்லிப் பானுமதியிடம் செலவு பெற்றுக்கொண்டு போர்க்களத்திற்குச் சென்றான்.

ஃ

பின்பு, துரோணாசாரியர் தன் வியூகத்திற்குள் ஸைந்தவனை ஒருவருக்கும் தெரியாதிருக்கும்படி மறைத்து வைத்துவிட்டுத் தான் சேனையின் முன்புறத்தில் நின்று யுத்தம் செய்ய ஆரம்பித்தார். அர்ச்சுனன் அவரை வென்று வியூகத்தினுள்ளே புகுந்து அங்கே முழுதும் தேடினன்; ஸைந்தவன் எங்கும் அகப்படவில்லை; பொழுதுபோகிற தருணமாகிவிட்டது. அதனல், அர்ச்சுனன் உடனே தீக்குளித்துவிடப் போகிறானே யென்று பாண்டவர்கள்

எவ்வளவுதான் மேதாவித்தன்மையை யடைந்திருப்பினும், மனம் ஒன்றை விரும்பி வேண்டும்போதும், சில சந்தேகங்கள் ஏற்பட்டுவிடும் போதும், அதை உடனே பூர்த்தி செய்து தராவிடில், மனம் தான் செய்ய வேண்டிய வேலையைச் செய்ய மறுத்துவிடுகிறது. மனத்தை வலிய இழுத்துப்பிடித்து எழுதினும் அல்லது காரியம் செய்யினுங்கூட அது இனிது முடிவதில்லை.

மிகவும் விசனப்பட்டுக்கொண்டிருந்தார்கள்.

ஃ

அதுகண்டு ஆச்ரிதவத்ஸலனுன கிருஷ்ணன் தமது திருவாழியைப் பிரயோகித்துச் சூரியனை மறைத்துவிட, அர்ச்சுனன் சூரியன் அஸ்தமித்துவிட்டதாகநினைத்து அக்கினிப் பிரவேசம் செய்வதற்கு வேண்டிய முயற்சிகள் செய்ய ஆரம்பித்தான். அதுகண்டு துரியோதனன் மிகவும் சந்தோஷித்துச் சைந்தவனை யானை மேலேற்றி அழைத்துவர, அந்தத் தருணத்தில் அவனை அடிக்கும்படி கிருஷ்ணன் அர்ச்சுனனுக்குச் சொல்ல, "சூரியன் அஸ்தமித்துவிட்டபடியால் அக்கினிப்பிரவேசம் செய்வேனேயல்லது, இனி அவனை அடிக்கமாட்டேன்" என்று உறுதியாய்க் கூறினன். "இதோ பார், இன்னும் சூரியன் மறைந்துபோகவில்லை; காண்டிவத்தைக் கையிலெடுத்துக் கணைகளைத் தொடுக்கலாம்" என்று கூறிக் கண்ணன் தமது திருவாழியை வாங்கிக்கொள்ளவே, அர்ச்சுனன் சூரியனைக் கண்டு சந்தோஷித்துச் சைந்தவனுடன் எதிர்த்துப் போர் செய்து அவனைக் கொன்றுவிட்டான். அர்ச்சுனனின் பிரதிஞ்ஞையும் கண்ணனின் அருளால் நிறைவேறிற்று. இவ்வாறு பாண்டவர்கள் தங்கள் பக்கம் ஜயமடைந்தனர். துரியோதனன் ஏமாறிப் பெருமூச்சுவிட்டான்.

(மற்றவை 'நான்கினுள்' முடிவு.)

ஒருவர் பிறருக்கு எவ்வளவோ உதவிகள் செய்ததாயும் உழைத்ததாயும் சொல்லிக்கொள்கிறார். அதை அந்தப் பிறர் மறந்துவிடாத விசுவாசத் தன்மையிலேயே உள்ளார். ஆனல், இப்போது கோணி மாறிவிட்ட குணம் செய்கைகளுக்கே அந்த ஒருவர்மீது பிறர் மனவாட்டத்துடன் நொந்து துக்கிக்கின்றனர். அவ்வளவேயன்றி, முன்பு அந்த ஒருவர் செய்த நன்றியை ஒருபோதும் மறந்துவிட்டவர்களல்ல.

புது அலைகளை எழுப்பப் புது நூலைப் படி.

ஒரு புதிய புஸ்தகம் படிக்கும்போதுதான் மனதிலே புது புது அலைகளும் எழுகின்றன. புஸ்தகத்திலில்லாத வேறொரு நூதனக் கருத்தோ கற்பனையோ உதயமாவதும் அந்த வேளையில்தான். ஒரு புதிய நூல் அதை வாசிப்பவரை ஒரு புதிய மனிதனுக்கி விடுகிறது. அந்தப் புது நூல் தன்னைப் படிப்பவரைப் புது வீரனுக உயர்த்தி விடுகிறது. அந்தப் புது அறிவிலிருந்தும் அதைப் படிப்பவரின் வாழ்க்கையே புது விதமாகவும் மாறிப்போவதுகூடவுண்டு. புத்தகத்தைப்போன்ற இனிய தோழன் உலகில் எங்குமேயில்லை. புத்தகச்செல்வமே இணையில்லாத ஞானமிர்தச் செல்வம்.

விவேகம்
விநோதம்
விசித்திரம்
விகடம்

விகடப்ரசுரன்

REGISTERED TRADE MARK

அநுபவம்
அற்புதம்
ஆச்சரியம்
ஆநந்தம்

தேர்தல் சந்தைத் திருவிழா!



தீபாவளி நவம்பர் ஆறிலே! பிறகு, தேர்தல் சந்தை அதே நவம்பரில் குட்டிக்கரணம் போடப்போகிறது! என்ன தேர்தலப்பா இது? பரீக்ஷையில் தேர்தலா? பாசாங்குத்தனத்தில் தேர்தலா? உலக அநுபவங்களில் தேர்தலா? வாழ்க்கை ஞானத்தில் தேர்தலா? வேதாந்த வித்தையில் தேர்தலா? பித்தளையைப் பொன்னாக்கும் ரஸவாதத்தில் தேர்தலா? தன் வீடும் தானுமாய் இருந்துகொண்டு பிறரைப்பற்றிக் கவனியாதிருக்கும் சுயநலத்தில் தேர்தலா? வாங்கிய கடனைத் திருப்பிக்கொடுக்காத சாமர்த்தியத்தில் தேர்தலா? எல்லோரிடத்திலும் அன்பாயிருப்பதாக நடிப்பதில் தேர்தலா? அவ்விதம் நடித்துக்கொண்டு ஒரு கண்ணில் வெண்ணெயும், ஒரு கண்ணில் சுண்ணாம்புமாயிருப்பதில் தேர்தலா? எவ்வளவு ஜாக்கிரதையிலும் தையற்காரன் சிறிது துணியைக் கத்தரித்துக்கொள்கிறானே அதில் தேர்தலா? அவ்விதமே கம்மாளனும் சேதாரம், அது இது என்று சிறிது பொன்னை எடுத்துக் கொள்கிறானே, அதில் தேர்தலா? வி. பி.-க்கு ஆர்டர் கொடுத்துவிட்டுப் பிறகு திருப்பியனுப்புவதில் தேர்தலா? எந்தெந்த வழிகளிலெல்லாம் தங்கள் பெயரை விளம்பரப்படுத்தலாமென்று சில தலைவர்கள் முயலுகிறார்களே—அதில் தேர்தலா? மாமி மருகி வஞ்சனையில் தேர்தலா? மாற்றாந் தாயின் கொடுமைகளில் தேர்தலா? மந்திரவாதிகளின் சண்டாளத்தனமான படுமோசங்களில் தேர்தலா? பிழைக்கமாட்டானென்று தெரிந்தும் 20, 30 என்று முதலிலேயே மொத்தமாகப் பெற்றுக்கொண்டு அமிர்த சஞ்சீவி தந்து எழுப்புதாகப் பசப்பிக் கடைசியில் நழுவிவிடும் வைத்தியர்கள் சிலருடைய தந்திரத்திலே தேர்தலா? கடை வியாபாரிகளின் பொய்களிலே தேர்தலா? நண்பர்களுக்குள் நடக்கும் நட்புத்தன்மையிலே தேர்தலா? கடவுள் எவ்வளவோ நற்காலத்தின் சகாயமாய்க் கொடுத்திருந்தும் திருப்திபடாமல், மற்றவர்களையும் கெடுத்து அவர்களின் லாபத்தையும் கொள்ளை கொள்ளப்பார்க்கிற பேராசை யிருக்கிறதே

மனிதனுக்கு யூகமும் ஒழுக்கமும் விசேஷம். மற்ற சிருஷ்டிகளுக்கு இவை கிடையா.

அதில் தேர்தலா? பழம் புண்ணுளி பாதி பரிகாரி என்பதுபோல் நோய் வகைகளில் அடிபட்டுத் தேர்தலா? புருஷ பக்தியில் தேர்தலா? கணவனை எதிர்ப்பதில் தேர்தலா? ஞான பக்தி வைராக்கியங்களில் தேர்தலா? கோர்ட்டுக்கச்சேரி வழக்குகளில் தேர்தலா?

ஃ

இவைகள் ஒன்றிலுமே தேர்வதல்ல. அந்தந்தத் தேர்தல்கள் சொன்னாலும் சொல்லாவிட்டாலும் நெடுங்காலமாய் இருந்துவரும் தேர்தல்களேதான். இனி எந்தத் தேர்தலைப் பற்றி விகடன் பேசவந்ததென்றால், ஆங்கில அரசாக்ஷியிலே ஜனங்களுக்கு சுதந்தரம் கொடுப்பதாக வழி காண்பித்து வாக்கு (ஓட்) உரிமை கொடுத்திருக்கிறார்களே, அதைப் பற்றியே விகடனும் தொனப்ப வந்தேன்! உலகத்தில் எத்தனையோ வித்தைகள், பயிற்சிகள், செய்கைகள், சங்கதிகள் இருக்கின்றன. அவற்றில் தேர்தல் பெற அவரவர்களின் புத்திப் போக்குக்குத் தகுந்தபடியும், ஈசன் அவரவர்களுக்கென்று அமைத்து அளந்துவிட்டிருக்கிற ஞானத்துக்கு ஏற்றபடியும் முயல்கிறார்கள். "சாஸ்திரமும் சகல புராணமும் சோற்றுப் பானைக்குள்ளே சுருங்கியதே அம்மானை" என்று ஒருவர் பாடியது போலவும், "யோசிக்கும் வேளையில் பசிதீர உண்பதும் உறங்குவதுமாக முடியும்" என்பதுபோலவும், உலகத்திலுள்ள வித்தைகள்—பயிற்சிகள்—மற்றுமுள்ள அதன் பல பிரிவுகளில் தேர்தல் பெறவேண்டி உழைப்பதெல்லாம் இந்த ஒரு சாண்வயிற்றுக் கடவுளுக்கேதான். ஆனால்; இந்த சட்டசபைத் தேர்தலோ அப்படிப்பட்டதல்ல. உண்பதற்கும், உடுத்துவதற்கும், இருப்பதற்கும், ஏறி உலாத்துவதற்கும் எல்லாவற்றுக்குமே கடவுள் கருணைமிகுந்து கொடுத்திருந்தும், அவற்றிலெல்லாம் மனத் திருப்தி பிறக்காமல் லோக கௌரவத்திலே ஆசை தடித்துக்கொண்டு, புகழ்ப்பட்டங்களிலே மோகம் மிகுந்துபோய், பெரிய பெரிய கீர்த்திவந்தர்களாக வேண்டுமென்று, அந்தப் பசிநோய் பிடித்து, அதற்காகத் தங்களின் பெயரைத் தமுக்குத்தாளம் கொட்டுகிற பணக்காரர்களின் தேர்தல் திருவிளையாட்டாக இது இருக்கிறது! "என்னையே சேருவோர்கள், எனக்கும் ஓர் இன்பம் நல்கி, பொன்னையும் கொடுத்துப் பாதத்தில் விழுவதேனோ?" என்று ஒரு தாசி தன் தாயைக் கேட்டதாகவும், அதற்கு அவள் "தக்க விஷயத்தில் தர்மம் செய்யாதவர்களின் தனம் சிதறவேண்டி நம்மையும் கள்ளையும் நான்முகன் படைத்தவாறே" என்று விடை கூறியதாகவும் ஒரு கதை யுண்டல்லவா? அதுபோலவே, உத்தம மார்க்கத்தில் செலவிடாத பணப்புஷ்டியுள்ள பலபேர்களின் பணம் கரைவதற்காகவே இந்தத் தேர்தல் சந்தை தோன்றியிருக்கிறதென்னலாம். எவ்வளவு செட்டும் கட்டுமாயிருந்தாலும் செலவுக்கு வழி எப்படியோ தோன்றிக்கொள்ளுகிற சங்கதிகள் எத்தனையோ உண்டல்லவா? எவ்வளவு ஜாக்கிரதையாய்

ஒரே ஊரிலிருந்துகொண்டு ஒரு மாதம் வரையில் தங்கள் நண்பனை எட்டிப் பாராதிருந்து எப்போதோ ஒருநாள் வந்து போய்விட்டுப் பிறகு ஊர் சென்றபின், தாங்கள் நண்பனுக்கு எழுதிய கடிதத்திற்கு உடனே பதில் வேண்டுமென்கிறார்கள். ஒரு மாதத்துக்கு ஒருநாள்மட்டும் வந்து பார்த்துச் சென்றதிலேயே இவர்களின் அன்பு தெரிந்திருக்கையில் உடனே கடிதம் எழுதவேண்டுமோ?

உடுத்துக் கட்டினாலும், கட்டிய துணி மணிகள் எவ்விதமோ கிழிந்துபோகிறதல்லவா? அதுபோலத்தான் வெகு ஜாக்கிரதையாய் உண்ணாமல் தின்னாமல் பிறர்க்கும் உதவாமல் பிழைத்த பிசினாரிகளான சில பணக்காரர்களுக்கும் இந்தத் தேர்தலிலே எப்படியோ மோகம் விழுந்துபோய், பணத்தைப் புளியங்கொட்டைக் காசாக எண்ணி ஆயிரம் பதினாயிரமாகக் கண்டபடி வாறி இறைக்கத் தொடங்கி விடுகிறார்களய்யனே!

ஃ

இப்படிக்கௌர்வம் தேடப் புறப்பட்டுவிட்டசிலஅபேக்ஷகர்கள் அதற்கான பாட்டுகளையெல்லாம் தொடங்கிச் சொல்கிறார்கள். தாங்கள் பல நண்பர்களின் வேண்டுகோளுக்கு இணங்கி ஒரு அபேக்ஷகராகப் புறப்பட்டதாய் முதல் பாட்டுப் பாட ஆரம்பிக்கிறார்கள்! இவர்களை எந்த நண்பர்கள் தூண்டினார்களோ — அது ஆண்டவனுக்கே தெரியும்! அப்பால், தாங்கள் பொதுஜனங்களுக்கு உழைக்கவேண்டுமென்ற ஆவல் மிக மிஞ்சிப்போய் அது மலையேறிக்கொண்டு அந்தவெப்பத்தினாலே இப்படி அபேக்ஷகராக வந்ததாய் அதற்கு அடுத்த பாட்டைப் பாடுகிறார்கள்! இனி, மூன்றாவது பாட்டாக, தாங்கள் அந்த சட்டசபையிலே போய் உட்கார்ந்துவிட்டால் எல்லாமுமே ஜெயமாய்விடுமென்றும், அந்த இந்த கண்ட வரிகளெல்வாம் வெகுவாய்க் குறைந்துபோய்விடுமென்றும், தாங்கள் ஒருவர் அங்கே நாற்காலியிலே குந்திக் கூக்குரல் போடாததினாலேதான் இவ்வளவு நாளாய் ஜனங்கள் இத்தனை பாடுகளையும் வரிச்சுமைகளையும் சுமக்கும்படியாயிற்றென்றும், தங்களை மட்டும் இந்த முறை தேர்ந்தெடுத்துவிட்டால் அந்தரத்திலே பறப்போமென்றும், அணுவை மலையாக்கி விடுவோமென்றும், அகிலமுற்றும் பங்தெனவே உருளவைப்போமென்றும், ஜனங்களுக்கு இருக்கிற குறைகளையெல்லாம் எடுத்தெடுத்து, இடித்து இடித்துக் கடித்துப் பிடித்துப் படித்துத் தடித்துப் பேசி ஒரு நொடிக்குள்ளே முடித்துத் தீர்த்துவிடுவோமென்றும் ஆரவாரம் செய்யத் தொடங்குகிறார்களப்பா!

ஃ

இப்படியாக, இவர்கள் புறப்பட்டுக்கொண்டு அதற்காகவே "தேர்தல் காரியஸ்தலம்" என்று ஒரு பெரிய வீட்டை அமர்த்திக்கொள்கிறார்கள். இவர்களுக்காகப் பல வாக்காளர்களைக் கொண்டுவந்து கொடுக்கப் பல ஏஜண்டுகள் ஏற்படுகிறார்கள். அதற்கான தடபுடல் கூட்டங்களும் தோன்றிக்கொள்கின்றன. தேர்தலுக்கு இரண்டு மாதங்கள் இருக்கும்போதே இந்த சந்தை ஆரம்பமாய் விடுகிறது. வருவோர் போவோர் யாவருக்கும் கனத்த சாப்பாடுகள், பக்ஷணங்கள், பணப்பைகள். சில்லரைத் துட்டுகள் யாவும் கனக்க கனக்கக் கிடைக்கின்றன. இவர்களைப்போலவே இவர்களுக்குப் போட்டியாக அபேக்ஷகராய் எத்தனையோ பேர் புறப்பட்டு அவர்களும் ஆரவாரமாய்ப் பணத்தைப் பைபையாக அவிழ்க்கிறார்கள். அச்சுக்கூடத்தாருக்கு இந்த சமயததில் நல்ல அறுப்புக்காலமாகும். அவர்களிடம் எத்தனை விதமைகள் இருக்கின்றனவோ அத்தனை விதங்களிலும் அச்சிடப்பட்டு விளம்பரப் பத்திரி

சிலரது ஈனப் போக்குகள் தெரிந்தபிறகு, அவர்கள் எவ்வளவுதான் சாதுர்யமாக மயக்கினாலும் பேசினாலும் எழுதினாலும், அவை மனதை வசரிக்கும்படியான விசை பொருந்தியதாக இருப்பதில்லை.

கைகள் புறப்படுகின்றன. ஊரிலுள்ள சுவர்களிலெல்லாம் விளம்பரங்கள் ஒட்டப்படுகின்றன. தங்களுக்குப் போட்டியாக நிற்போரைப்பற்றி இவர்கள் மறுப்புகள் எழுதி வசை மாறி வழங்க, அவர்கள் இவர்களைப் பதிலுக்குப் பதில் வசை வரிசை சீர் கொண்டு உபசரிக்க, இந்தத் திருவிழாக்களெல்லாம் நடந்தேறுகின்றன.

ஃ

இவைகளுக்கு மத்தியிலே இந்திய சர்க்கார் துரைத்தனத்தாரோ அபேக்ஷகர்களாக நிற்போர் ஒரு பெரிய மொத்தத்தொகையைக் கட்டிவிட்டே முற்படவேண்டுமென்று ஏற்பாடு செய்திருப்பதால். அதையும் செலுத்தித் தீர்த்து ஆயிர விசாரங்கள்கொண்டு படாத பாடுகளெல்லாம் பட்டு, பவுனைப்பைாசவாகச் செலவிடுகிறார்கள். இவ்வளவு கஷ்டச் சுமைகள் தாங்குவதெல்லாம் போதுஜன நலத்திற்கு உழைப்பதற்காகவே யென்று வாய் ஓயாமற் சோல்லிக் கோள்ளுகிறார்கள்! அப்பா! ஆண்டவனே! இது உண்மைதானா? பொது ஜனங்களுக்கு உழைப்பதற்கு இவ்வளவு கஷ்டங்கள் ஏற்றத்தானா ஆகவேண்டும்? இதைவிட உலகத்துக்கு உழைக்க இவர்களுக்கு வேறு வழி—பாதை கிடைக்கவில்லையா? இவர்களுடைய தேர்தல் காரியஸ்தலத்திற்கு எதிரிலேயே எத்தனையோ ஏழைகள் வயிற்றுக்கில்லாமல் கிடக்கிறார்களே—அதை இவர்கள் கவனிக்கிறார்களா? அனாதையாக ஒருவன் இன்றைக்கோ நாளைக்கோ என்று இவர்களின் ஆபீஸுக்கு எதிரிலேயே பிராணன் இழுத்துக்கொண்டு கிடக்கிறானே—அதை இவர்கள் கவனிக்கிறார்களா? அவர்களை நம்பிய வகையினருக்குள்ளாகவே எத்தனையோ பேர் ஜீவனமார்க்கமின்றி அலைகிறார்களே—அவர்களைக் கவனித்தார்களா? எத்தனையோ தர்மங்களுக்கும், பொது வேலைகளுக்கும், பொதுப் புண்ணியங்களுக்கும் உதவும்படி எவ்வளவோ பேர் இவர்களைக் கேட்க, அதை இவர்கள் எந்த நாளிலேனும் காதில் போட்டுக்கொண்டதுண்டா? இப்படி யெல்லாம் இவர்கள் சுயநலத்திலேயே குடியிருந்துகொண்டு, வெளிக்குப் பொது நலத்துக்கு உழைப்பதாகச் சொல்லிக் கொண்டு, மோட்டார் எமன்களில் ஏறிப் பறந்து ஒவ்வொரு வீட்டுக்கும் வந்து, தங்களுக்கு வாக்கு (ஓட்) தரும்படிக்கெஞ்சுகிறார்களே! அதைப் பார்க்கப் பார்க்கத்தான் விகடனுக்கு வெகு வெகு சிரிப்பாய் இருக்கிறது! தங்கள் நலத்துக்காக, தாங்கள் பேர்—கீர்த்தி பெறுவதற்காக, அந்தக் கீர்த்தியிலிருந்து தங்கள் லாப இனங்களைப் பெருக்கிக்கொண்டு பணம் திரட்டவும், இன்னும் பல சுயநலங்களுக்குமாக இந்த வேலைகளில் கை நனைக்கிறார்களே யன்றி, பொதுநலத்திற்கு என்பது ஒரு காசுக்கும் உதவாத பேச்சல்லவோ! அபேக்ஷகராக நிற்போரிலே 100-க்கு 90 பேர்களின் சங்கதி இப்படிப்பட்ட கோணல்கள்தான்! பாக்கிப் பத்து பேர்கள் ஏதோ பொதுநல வாஞ்சையால், தங்களுக்கு இயற்கையாக அமைந்துள்ள நற் சிந்தையால், ஜனங்களுக்கு ஊழியராக உழைக்கவேண்டுமென்ற தாகம் மேலிட்டு அபேக்ஷகர்களாக முன்னிற்க வருகிறார்கள். அவர்களை இன்னாரென்று வாக்காளர்கள் ஆராய்ந்து தெரிந்தெடுத்து அனுப்பினால், அவர்களுக்கும் ஊருக்

அலக்ஷியம் செய்ய முடியாத ஒரு தீராத தீங்காகச் சிலாது செய்கைகளை மதித்துவிடும்படி நேரும்போது, அவர்களுடன் முன்போல் கலந்து நிற்க முடிகிறதில்லை.

கும் நலமாக முடியக் கூடுமென்பதை யும் விகடன் மறுப்பதற்கில்லை.

ஃ

இனி, இந்த அபேக்ஷகர்களுக்கு (ஓட்) வாக்கு கொடுக்கும் ஜனங்களின் சங்கதியோ அது ஒரு கண்ணராவிக் கூத்து! அவர்களிலே அநேகருக்குப் படிப்பே பூஜ்யம்! அரைப் படிப்பிலேயே பல்லோராவர்! அதிலும் பத்திரிகைகள் படித்து விஷய ஞானம் அறிந்தோர் அங்கொன்றும் இங்கொன்றுமாகவே அருமையாக இருப்பார்கள்! சட்டசபை எப்படி அமைக்கப்பட்டிருக்கிறதென்ற சங்கதியே முக்காலே மூவீசம்பேர்களுக்குத் தெரியாது. அதைப்பற்றிய நூல்களெல்லாம் ஆங்கிலத்தில் உண்டே தவிர, தேச பாஷைகளில் கிடையாது. அல்லது விவரித்துச் சொன்னாலும் கிரகிக்கக்கூடிய ஞானம் வெகு பேருக்குக் இல்லையப்பா! பத்திரிகைகள் படிப்பது ஒரு முக்கிய கடமை எனக் கொள்ளாத நாட்டிலே—அக்ஷர ஞானம் இல்லாதவர்களே பெருகியுள்ள ஊரிலே—இவற்றிலெல்லாம் ஞானம் உதிப்பது ஏது? இந்த நிலையில் விஷயம் தெரிந்த சிலர் போக, மற்றவர்களெல்லாம் தயவுக்கும் தாக்ஷண்யத்திற்குமாகவே தங்களின் வாக்கை (ஓட்டை)க் கொடுப்பவர்களாகிறார்கள். பணத்தைப் பெற்றுக்கொண்டு ஓட்டுக் கொடுப்பவர்கள் இதை ஒரு வியாபாரமாக நினைக்கிறார்களே யல்லாது தேசப் பொதுக் கடமையைச் செய்வோராகத் தங்களை எண்ணுவதேயில்லை! எண்ணக்கூடிய ஞானமும் அவர்களுக்கில்லை. பாத்திரமறிந்து தங்கள் வாக்கைக் கொடுப்போரின் தொகை சுருக்கத்திலேயே கிடக்கும். இந்த வாக்காளர்களிற் சிலர் தாங்கள் வாக்கு கொடுப்பதற்குக்கூட வாமலே, அதை ஒரு பெரிய காரியமாகச் சிந்திக்காமலே போகிறதும் எவ்வளவோ!

ஃ

அபேக்ஷகர்களின் விநோதங்களை யெல்லாம் விகடன் வரிசை வரிசையாய்த் தொனப்பினேன்! அவர்களுக்கு வாக்கு கொடுக்கும் வாக்காளர்களின் லக்ஷணங்களையும் வகை வகையாய் விவரித்தேன்! இவ்விரு வகையோரிடமும் பொதுநலக் கருத்து சுருக்கமாகத்தான் காணப்படும். உள்ளுக்கு இருக்கிற ஊழல் இப்படியானாலும், வெளி ஆரவாரங்களோ அபாரம்! இந்த அழகுடனே தேர்தல் முடிந்து அபேக்ஷகர்களும் தெரிந்தெடுக்கப்படுகிறார்கள்! தேர்ந்தெடுக்கப்பட்ட பின்பு அபேக்ஷகர்களின் சங்கதி எப்படி யிருக்குமோ! விவாகமானதும் பலர் புது மனிதர்களாக மாறிப் பழையவர்களை யெல்லாம் மறந்து விடுவதுபோல், இந்த அபேக்ஷகர்களின் சங்கதியும் அநேக இடங்களில் ஆகிவிடுகிறது! தெரிந்தெடுக்கப்பட்ட பின் சட்டசபையிலே தலையாட்டிகளாகி ஜனங்களுக்கு ஒரு நன்மையுமே செய்யாது போவோரும் உண்டு. ஏதேனும் ஒரு உத்தியோகத்தைத் தேடிக்கொண்டு


இந்தியாவில் தற்போது பெண்களாகப் பிறப்போர் அதிக பாவம் செய்தவரோ யாதோ! ஏதோ புண்ணியவசத்தால் புருடன் உயிருடன் இருந்தால் சுகம் உண்டு. பருவகாலத்திலேயே சுகம் முற்றும் அனுபவிக்காமலிருக்கும்போதே கணவன் தவறியோ அல்லது பராமுகப்படுத்தியோ இருப்பானானல் அவர்களின் பரிதாப நிலைமை விவரிக்க ஒண்ணாததாக இருக்கிறது. பருவ காலத்திற்குமுன் கணவனை இழந்தவர்களின் நிலைமை மகா துக்ககரம், பயங்கரம், சோதனை ஸமுத்திரம்.

விடுவோரும் உண்டு உண்மைக்கு உழைப்போரும், பொதுநலத்திற்கு உயிரைத் தருவோரும் ஒரு சிலரே! எந்த அபேக்ஷகரும் நான்—நீ—என்று முன்னிற்காமல், ஜனங்களே ஒன்று கூடிப் பாடுபட்டுச் சிலரைத் தெரிந்தெடுத்து எவ்வித ஆரவாரமுமின்றி அபேக்ஷகராக நியமிப்பதுதான் யாவரும் ஒப்பத் தகுந்த முறையாகும். மற்றதெல்லாம் குறையேதான். ஆகப்போகிற கல்யாணம் போய் பார்த்தால் தெரியுமென்பதாக, விகடனும் இந்த நவம்பர் மாதம் தேர்தல் சந்தையை எல்லோரையும்போல எதிர்பார்த்து நிற்கிறேன். எவருக்குக் கெலிப்போ! எவருக்கு ஏமாற்றமோ! ராம்! ராம்! சுபம்! சு!! சுவாஹா!!!

கட்டுவது சிரமம்; கட்டின வீட்டிலே குடியிருப்பது சிரமமல்ல. கலியாணம் செய்து குடித்தனம் நடத்துவது சிரமம்; விபசாரம் செய்தலைவது சிரமமல்ல. உழைப்பது சிரமம்; உண்பது சிரமமல்ல. மானத்தைக் காப்பது சிரமம்; மானத்தை இழப்பது சிரமமல்ல. முயற்சிதான் சிரமம்; வெட்டி வம்பு சிரமமல்ல. புதையல் எடுத்து வாழ்க்கை நடத்த முடியாது. பிறர் சொத்தால் கௌரவமும் பதவியும் ஏற்படாது. வ. ரா.

அந்த சௌகரியம் தனக்கா? பிறருக்கா?

தனது சௌகரியத்துக்கு வேண்டிய ஒன்றைப் பிறரது சௌகரியத்துக்காகவே செய்வது போல் காண்பித்துக் கொண்டு, தனது திருப்திக்கு வேண்டியவற்றைத் தேடிக் கொள்வது சிலரது சமர்த்து. தனக்குப் பிடிக்காத ஒரு காய் கறியைப் பிறருக்குப் பிடிக்காததுபோலப் பேசுதல் ஒரு சாமர்த்தியம். தான் ஒருவரைப் பகைத்திருப்பதை வெளியிட்டுக் கொள்ளாமல், அந்த ஒருவரை மற்றவர்கள் பகைக்கும்படி செய்து, தன் பகையைத் தீர்த்துக் கொள்வதுமுண்டு. நல்ல அரிசி வந்திருக்கிறது, வாங்கவில்லையா என்கிற வியாபாரி பிறரது நலத்தைக் கவனிப்பவன்போல் நடித்துத் தனது வியாபார விருத்தியை நாடுகிறவனே யாவான். இன்ன புஸ்தகம், இன்னர் வெளியிட்டதென்று பிரபலமாய் விளம்பரம் செய்யும் புஸ்தக வியாபாரி தனது புஸ்தகங்களின் விற்பனைக்காகவே அப் புஸ்தகங்களை எழுதியவர்களைக் கொண்டாடிப் பேசுகிறார். சிலரை அதிகமாய்க் கவனித்து விருந்திட்டு உபசரிப்பது அவரைக் கௌரவப்படுத்துவதற்கல்ல. அவரைக்கொண்டு அப்போது ஆகவேண்டிய வேலை தங்களுக்கிருப்பதால் தான் உபசரிக்கிறார்கள்.



குந்தித் தின்றோர் கோபித்து வெளியேறினால், சோறு மிச்சப்படுமாம்!

தான் பிறரிடமிருந்து வாங்கிக் கொள்வதென்றால் சந்தோஷமாம்! தான் மற்றவருக்குக் கொடுப்பதென்றால் பிராணனே போய்விடுவதுபோலிருக்குமாம்!

தன் மனிதர்கள் சொல்வது உருகி அழுவதுபோலிருக்குமாம்! அன்னியர் சொல்வது சிரிப்பதுபோலிருக்குமாம்!

சுசி சோறு போமோம்! தீட்டு துடைக்குமாம்! அள்ளாது குறையாதாம்! சொல்லாது பிறவாதாம்!

ஒரு தடவைக்கு முத்தமிட இடம் கிடைத்து வழக்கமானால், பின் எத்தனையோ தரம் இடலாமாம்! அதற்கு வழி வசதியும் கிடைக்குமாம்!

ஒருவன் ஏமாற்ற முயல, மற்றவனோ ஏமாறாமல் ஜாக்கிரதையாயிருந்துகொள்ள, இந்த இருவரும் ஒன்று சேர மாட்டார்களாம்!

அறிவும் கல்வியும் பொதுவாக ஆண்டவனின் ஈகையாக இருக்க, ஒரு தாழ்ந்தவன் சற்றுக் கல்விமானாய் விளங்கினால், "அவன் தப்பிப் பிறந்தானையா இந்த ஜாதியிலே" என்று ஜாதியை இழுத்துப் போட்டுக்கொண்டு அப்போதும் தாழ்த்த வேண்டுமாம்!

கடனைத் திருப்பிக் கொடுத்த பிறகு, கடன் தந்த ஐயாவுக்கு முன்போல் உபசார விருந்துகள் நடக்காதாம்!

ஊரிலுள்ள மாமிகள் தங்களின் மருகிகள் கர்ப்பவதிகளாக வேண்டுமென்று கடவுளை வேண்டிக் கொள்வதற்கு மேலாக, மருத்துவச்சிகள் தங்களின் தொழில் நடப்பதற்காக அதிகமாய் வேண்டிக்கொள்கிறார்களாம்!

எல்லாப் பைத்தியத்திலும் மூக்குப்பொடிப் பைத்தியமே மெத்தப் பெரிதாகி, மலம் வாரும் தோட்டியினிடத்திலுங்கூட ஒரு சிட்டிகை வாங்கிமூக்கில் இழுக்கவைக்கிறதாம்!

பெண்கள் கெட்டால் குல தருமம் கெட்டுப் போகுமென்று ஒரு பக்கம் உயர்த்திப் பேசிவிட்டு, மற்றொரு பக்கம் அவர்களை நாய் பேய் என்று திட்டி மரியாதை செய்கிறார்களாம்!

அவள் செத்தாலும் பாதகமில்லையென்று சண்டையின்போது புருஷன் நினைத்தாலும், பிறகு அவளுக்கு வியாதி வந்து விட்டால், "சாமி, காப்பாற்றவேணும்" என்று அவனே கடவுளை வேண்டிக்கொள்வானாம்!

திருடிவிட்டோ, மோசம் செய்துவிட்டோ, ஒருவனின் மனைவியை அனுபவித்துவிட்டோ குற்றவாளியாய் விட்டால், "என்ன செய்வேன், என் பூர்வ வினைப்பயன் இப்படியாகவெல்லாம் சம்பவித்தது" என்று கர்மத்தின்மேல் பழிபோட வேணுமாம்!

ஒருவன் கடன் வாங்கிச் சாப்பிட்டுவிட்டுக் கடுக்கா காண்பித்தால், அவன் முன்ஜென்மத்திலே எனக்குப் பிள்ளையாகப் பிறந்தானென்று சொல்லி ஆற்றிக்கொள்ள வேண்டுமாம்!

பிள்ளை யில்லையென்று ஒருவர் மூத்த மனைவி யிருக்கையில் மற்றொருத்தியை மணந்து, அவளிடம் ஒரு பெண் குழந்தையைப் பெற்றுச் சாக, வேறொருவன் இந்த இரு மனைவியரையும் தனக்கு உபநாயகிகளாகவும், அப்பெண்ணை மனைவியாகவும் வைத்துக்கொண்டானாம்!

செய்யக் கூடாத பாவ துரோகங்களைச் செய்து விட்டவர்கள்தான் தங்களை மிகவும் பரிசுத்தவான்களாக நீட்டிக் காட்டிக்கொள்வார்களாம்!

மூன்று சுந்தரங்கள்.

சுந்தர முதலியார் லக்ஷ்மீ சீமான். அவர் மனைவி ஒரு வருஷத்திற்கு முன்புதான் இறந்தாள். அதுவரையில் குழந்தைப்பேறு இன்மையால், தமது அறுபதாவது வயதிலும் ஒரு விவாகம் செய்துகொண்டு எவ்விதமேனும் புத்திர லாபம் அடைய வேண்டுமென்று நிச்சயித்தார். பணம் பத்தும் செய்யும். கும்பகோணத்தில் பூர்வ பந்துக்களில் ஒருவருடைய பெண்ணைப் பேசி முடித்தார். பெண்ணின் பெற்றோர்கள் தங்களின் எழ்மையால் இதற்கு இசைந்தனராயினும், ஊரார், சுற்றத்தார் தூற்றுவரென அஞ்சி, பெண்ணை உடன் அழைத்துச் சென்று விவாகத்திற்கு நாள் குறிப்பிட்டெழுதும்படிக் கூறினர். சுந்தர முதலியாரும் பெண்ணின் விலையாக ஐயாயிரம் ரூபாய் கொடுத்துவிட்டுப் பெண்ணுடன் ரயில் எறித் தமது ஊரான குன்னூருக்குப் புறப்படலானார்.

ஃ

குன்னூரில் எழையொருவன் வண்டியோட்டி ஜீவனம் செய்து வந்தான். பெற்றோர்கள் இறந்து போய், விவாகத்திற்கென ஒரு தங்கை காத்துக்கொண்டிருந்தாள். கையிற் பணமோ இல்லை. மாடுகளில் ஒன்று கிழம். மற்றொன்று பலமுள்ளது. இரண்டையும் கட்டி ஓட்டுவதில் ஒன்று முன்னுக்கு இழுக்க, மற்றொன்று பின்னே தள்ளாட, மற்ற வண்டிக்காரர்களெல்லாம் சிரித்துப் பரிகசிக்க, இவ்வாறு வண்டியோட்டிப் பிழைத்துக் கொண்டிருந்தான். அவன் பெயரும் சுந்தரமே.

ஃ

சுந்தர முதலியார் குன்னூர் வந்ததும் இறங்கினார். வண்டிக்கார சுந்தரம் அவரையும், அவருடனிருந்த அழகிய மங்கையையும் தன் வண்டியிலேற்றிக்கொண்டான். இந்த அம்மா உங்களுக்கு என்ன வேண்டுமென்று வண்டிச் சுந்தரம் வினவ, அதற்கு சுந்தர முதலியார் இப்பெண்ணின் பெயர் சுந்தரம்மாள், இவளையே இனி விவாகம் செய்துகொள்ளப் போகிறேனென்றார். வண்டிச் சுந்தரம் அதிசயித்தவனாய் பதில் பேசாமல் வண்டியை ஓட்டலானான். முதலியார் பெண்ணைப்பார்த்து, நீ இப்படி அழுத கண்ணீராய் என்னுடன் பேசாமலிருந்தால் உன்னை மணந்து நான் சுகப்படுவதெப்படி? எங்கே ஒரு பேச்சு பேசு என்று அப்பெண்ணுடன் கொஞ்சுவதற்கு நெருங்கினார். இதற்குள் வண்டியிற் பூட்டிய கிழ

மனிதர் ஆட்டுமந்தைகளுக்குச் சமம். அத்தகையோரை மேய்ப்பதற்கு ஆட்டிடையனான தர்மவான் ஒருவர் இருக்கவேண்டும். அதற்காகவே அவ்வப்போது மகான்களாக அவதரிக்கும் புருஷ மூர்த்திகளைக் கடவுள் இந்தப் பூமிக்கு அனுப்புகிறார். அவர்கள் எந்த ஜாதியாயினும் சரியே. அவர்களைப் பூசித்து அவர்களின் போதனாவழியில் நடப்பதே கடவுளைத் திருப்திபடுத்துவதாகும்.

மாடு பின்னும், மற்றொரு மாடு முன்னுமாய் இழுத்தது. இதைக் கண்ட முதலியார் கோபித்து, கிழ மாட்டையும் வயசு மாட்டையும் வண்டியிற் பூட்டினல் வண்டி எப்படி சரியாக ஓடும்; உனக்குப் புத்தியில்லையா என்று சுந்தரத்தை வைதார். அதற்கு வண்டிச் சுந்தரம் நான் உயர்தரக் கல்வி கற்றும் உத்தியோகம் கிடைக்காததால் என் தந்தை வைத்துப்போன இந்த மாடுகளைக்கொண்டு கூலிப் பிழைப்பு பிழைக்கிறேன். வேறு மாடு வாங்க விதியில்லை. கிழவனும் குமரியும் இல்வாழ்க்கையென்னும் வண்டியை நடத்தினல் எப்படி விகாரமாயிருக்குமோ, அவ்விதமே என் வண்டியும் மாடுகளும் விகாரமாயிருக்கிறது என்ருன்.

ஃ

வண்டிச் சுந்தரம் கூறிய வார்த்தைகள் முதலியாரின் மனதில் சுரீர் என்று தைத்தன. கிழமாகிய தான் ஓர் யுவதியை மணப்பது இந்த வண்டி மாடுகளின் விகாரத் தோற்றம் போலவே இருக்கிறதென மனதில் நீள நீளச் சிந்தித்தார். இதற்குள் வண்டியிற் கட்டிய கிழமாடு ஒரு பள்ளத்தில் அகப்பட்டுக்கொண்டது. சற்று தவறினல் பெரிய பள்ளத்தில் விழுந்து சுக்குச் சுக்காகும்படி நேரும். வண்டிச் சுந்தரம் கீழிறங்கி வயசு மாட்டின் கயிற்றைப் பிடித்திழுக்கும்படி முதலியாரிடம் சொல்லித் தான் கிழ மாட்டை ரஸ்தாவுக்குக் கொண்டுவர முயன்ருன். முதலியாரால் மாட்டை இழுக்க முடியாமற்போக, வண்டியிலிருந்த சுந்தரநங்கை கீழே குதித்து மாட்டின் கயிற்றை இழுக்க, சுந்தரமும் கிழ மாட்டைப் பிடித்துச் சரியான இடத்திற்குக் கொண்டுவர, இவ்விதம் வண்டிச் சுந்தரமும் பெண் சுந்தரமும் சேர்ந்து வேலை செய்து பள்ளத்தில் விழுந்த வண்டியை ரோட்டில் நிறுத்தினர். இந்தக் காட்சியை முதலியார் கவனித்தார். அவர் மனத்தில் புதிய எண்ணங்கள் எழுந்தன. புதியயோசனையிலாழ்ந்தார்.

ஃ

பிறகு மூவரும் வண்டியிலேறினர். வண்டி போய்க்கொண்டிருந்தது. முதலியார் தம்மால் வாலிப மாட்டை இழுத்து நிறுத்தக்கூடாமற் போனதையும், அப்பெண்ணும் சுந்தரமும் இழுத்து நிறுத்தி இப்போது வண்டி சரியாக ஓடுவதையும் சிந்தித்துப் பார்த்தார். கிழ மாட்டிற்குச் சமமாகத் தன்னையும், வாலிப மாட்டிற்குச் சமமாகத் தான் அழைத்து வந்த இள நங்கையையும் வைத்து யோசித்து, இரண்டும் ஒன்றுபட்டு வாழ முடியாதென்றும், பெண்ணைத் திருப்திபடுத்தி வாழத் தனக்கு வலிமை இல்லையென்றும், இனி விவாகம் செய்துகொண்டால் துன்பத்துடனும், அதிர்ப்தியுடனும், பெண்ணின் மீது சந்தேகப்பட்டுக் கொண்டுமே காலந்தள்ள நேருமென்றும் பல பல கருதி, ஏன் இந்தப் புது மணத்தில் காலை யிட்டுக்கொண்டோமென விசாரப்பட்டார். பெண் தன்னோடு பேசாது அழுதபடியே கிடந்ததும், சுந்தரத்துக்கு உதவிசெய்ய ஓடி மாட்டை யிழுத்ததும் நினைத்துப் பார்த்து, இளமங்கையர் தம்மையொத்த வாலிபர்களையே விரும்புவர் என்பதையும் நேரில் கண்டோமல்லவா என்றும் சிந்திப்பதானர். கடைசியில் ஒரு முடிவுக்கு வந்து, முக மலர்ச்சியுடன் விளங்கினர். அவரது துக்கமும் எக்கமும் பறந்து

பார்வையிற் கம்பீரமும், பேச்சில் வல்லபமும், செய்கையிற் பிரதாபமும் பெறல் வேண்டும்.

போயிற்று. சந்தோஷத்துடன் காணப்பட்டார்.

ஃ

குன்னூரில் பெரிய பங்களாவுக்கு வண்டி போய் நின்றது. முதலியார் தம் வீட்டிற்கும் தெரியாமல் புறப்பட்டதால் ரயிலுக்கு அவரது மோட்டார் வந்து காத்திருக்கவில்லை. முதலியார் வண்டியிலிருந்து சுந்தர நங்கையுடன் இறங்கிப் பங்களாவுக்குள் சென்றார். வண்டிச் சுந்தரமும் தன் வாடகை கேட்க உடன் சென்றான். முதலியார் வண்டிச் சுந்தரத்தை ஒரு ஸோபாவில் உட்காரும்படி கூறினர். அவனே ஒரு வண்டியோட்டிக்கு அந்த மரியாதை பொருந்தாது என்றான். நீ எதுவரையில் வாசித்தாயென்று முதலியார் கேட்க, வண்டிச் சுந்தரம் தான் எப். ஏ. வரைக்கும் படித்ததாயும், தந்தை இறந்ததாலும் வறுமையாலும் அத்துடன் படிப்பு நின்றுவிட்டதென்றும் புகன்றான். 'அவ்வளவுக்கு வாசித்த புத்திசாலி ஸோபாவில் உட்காரத் தகுந்தவனே" என்று கூறி வண்டிச் சுந்தரத்தை ஸோபாவில் உட்காரச் செய்து, தான் அழைத்துவந்த இளநங்கையை ஸோபாவின் பக்கத்தில் நிற்கவைத்து, இருவரையும் உற்று நோக்கிக் கடவுளைத் துதித்து, நீங்கள் இருவரும் விவாகம் செய்துகொண்டு என்னிடமே சுகமாக இருங்கள்; நான் வண்டிச் சுந்தரத்தை என் சுவிகார புத்திரனாய் ஏற்றுக்கொள்கிறேன் என்றார். இதைக்கேட்டதும் இரு சுந்தரங்களும் பிரமித்து நின்றனர். அவர்களுடைய ஆநந்தப் பெருக்கை விவரிக்கவும் கூடுமோ?

ஃ

இரு சுந்தரங்களுக்கும் விவாகத்தை முதலியார் நடத்தித் தம் ஆதரவிலேயே அவர்களை வைத்துக் கொண்டார். எப். ஏ. சுந்தரத்தின் தங்கைக்கும் விவாகம் ஆனது. எல்லோரும் ஆநந்தமாயிருக்கிறார்கள். நன்றாய் முடியின் எல்லாம் நன்றே. இது கிழ மாடும் வயசு மாடும் கற்பித்த புத்திமதி.

K. M. அப்துல் ரஜாக் சாகிபு.

மருமகன் அற்பனும் நீச குணமுடையவனுயிருப்பினும், அவனுக்குத் தீயது நினைக்க மனம் வருவதில்லை. அவனுக்கு ஒரு பொல்லாங்கு கருதிடின் அவன் மனைவியான தன்குமாரத்தியையும் அது பாதிக்குமாதலின், கடவுள் அவனை க்ஷேமமாக வைத்திருக்கட்டுமென்று பிரார்த்திக்க வேண்டியவனாகிறான். இவ்விதம்பொறுமைப்படுவது சில சமயங்களில் தன் சக்திக்கு மீறிய செய்கையாகவுமாகிவிடுகிறது.

மொழிபெயர்ப்பைத் தாம் எழுதும் பாஷைக்குத் தக்கபடி நயப்படுத்தி மாற்றி எழுதவேண்டும். மொழிபெயர்ப்பை அப்படியே எழுதினல் சிலருக்கு அர்த்தமாகாது. படிக்கும்பொழுதே எப்படி யெப்படி மொழிபெயர்க்கலாமென்பதையும் திருத்தலாமென்பதையும் யோசித்துச் செல்வது நலம். மொழிபெயர்ப்புமாதிரி இருக்கக்கூடாது. தனியே சொந்தமாக எழுதப்பட்டதுபோல் இருக்கவேண்டும்.

அன்னியரும் உறவினரும்

ஒரு பெண்ணுக்குப் பிரஸவ சமயத்தில் பெண்களின் உதவியே வேண்டியிருக்கிறது. ஆடவர் அந்தப் பெண்ணுக்கு எவ்வளவோ உதவிகள் செய்திருப்பினும், பிரஸவசமயத்தில் பக்கத்திலிருந்து அவளுக்கு சகாயம் செய்ய முடியாமல் வெளியிலேயே இருக்க வேண்டியவர்களாகிருர்கள். எதிர் வீட்டுப்பெண் முன்பு பகைத்துக் கலகமிட்டவளாயினும், அவளைத்தான் பிரஸவ உதவிக்குத் துணையாய் அருகிலிருக்குமாறு கெஞ்சிக் கேட்டுக்கொள்ளவேண்டியிருக்கிறது. அவளும் அந்த சமயம் வந்து சகாயமாக இருக்கிருள். இதைப்போலவே, உறவினர் என்பவர்கள் ஒரு பெண்ணுக்கு அவளது பிரஸவ சமயத்தில் மற்ருெரு பெண் வந்து உதவுவதற்குச் சமானமாய் அவசியப்பட்டவர்களாக இருககிருர்கள். அந்த உறவினர் முன்பு பகைத்தவர்களாஞலும் அவர்களையே விரும்பி வேண்டியழைக்கும்படியாகிறது.

அன்னியரோ ஒரு பெண்ணுக்கு ஆடவரின் துணைபோலிருக்கிருர்கள். ஆடவர்கள் ஒரு பெண்ணுக்கு எவ்வளவு உதவிகள் செய்திருந்தாலும், அப்பெண்ணின் பிரஸவ சமயத்தில் அருகில் இருந்து உதவமுடியாமல் வெளியிலேயே இருக்க வேண்டியவர்களாகிருர்கள். வெளி ஒத்தாசைமட்டுமே அவர்களால் செய்ய முடிகிறது. இதுவே உறவினருக்கும் அன்னியருக்கு முள்ளபேதம். உறவினர் ஒரு பெண்ணுக்குப பெண்துணைபோலும், அன்னியர் ஒரு பெணணுக்கு ஆண் துணைபோலும் உதவுகிறவர்களாகிருர்கள். இருவர் துணையும் வேண்டியிருக்கிறது.

உறவினரும் அன்னியரும்

உறவினர் எவ்வளவோ பகைத்திருக்கலாம். அன்னியர் எவ்வளவோ உதவியிருக்கலாம். உறவினர் ஒரு உதவியும் செய்யாமல் பல செலவுகள் வைப்போராக மட்டுமே முடிந்து பிறகு எட்டியும் பாராதிருக்கலாம. அன்னியர் ஆபத்துக்காலங்களுக்கெல்லாம் அருந்துணையாய் நின்று காத்துப், பண உதவியும் தந்து அன்புமயமா யிருக்கலாம். ஒருவனுடைய வாழ்நாட்களே அன்னியரின் துணையிலேயே நடைபெறுவதாய் ஆகலாம். இதிலே பேதம் என்னவெனில், அன்னியர் எத்துணை உதவிகள் புரிந்திடினும், அவர்கள் வீட்டுக்கு வெளியிலிருந்தே செய்யத்தக்கோராயுள்ளார். வீட்டிற்குள் வந்து கூட இருந்து, பந்தத்துவம் என்ற சங்கிலியாற் பிணைப்புண்டு, கட்டுப்பட்டுத் துணையாவதற்குப் பந்துக்களே வேண்டியவரா யுள்ளார். ஒரு ஆபத்து சமயத்திலே சமையல் முதலியவற்றைக் கவனித்துக்கொள்ளவும், எல்லோருக்கும் பரிமாறி வீட்டைக் காத்துக்கொள்ளவும், இவ்விதமே ஒரு விசேஷத்துக்குக் கூடியிருந்து நடப்பிக்கவும் பந்துக்கள் தேவையாகிருர்கள். அன்னியர்கள் இவ்விதம் வீட்டிற்குள் நுழைந்து காரியங்கள் செய்ய இயலா. பெண் கொடுக்கவும் வாங்கவும் பந்துக்களே தேவை. ஆகவே, வீட்டிற்குள் பந்துவின் உதவியும், வெளியில் அன்னியரின் உதவியும் வேண்டியிருக்கிறது. எவரையும் தள்ளக்கூடவில்லை. பந்துவிலும் அன்னியர் சிரேஷ்டராயும், அன்னியரிலும் பந்துக்கள் சிரேஷ்டராயும் அந்தந்த சமயங்களில் காணுகின்றனர்.



இன்று கூடிய நமது கடையில் "நமக்கென்ன போச்சு" என்று பிறர் சங்கதிகளில் எவ்வித உதவியும் செய்யாமல், இரக்கப்படாமல், தன் காரியமே கண்ணாய், தன் லாபமே நோக்காய் வெகு சிக்கனமும் செட்டுமாய் வாழ்பவர்களைப்பற்றி ஆமவடைப் பண்டாரம் பேசினார். இப்படி வாழ்பவர்களைப்பற்றிய கதைகள் வெகு நீளம். இவர்கள் தங்கள் வீட்டில் எந்த விருந்தினரையும் சேர்க்கமாட்டார்கள். தாங்கள் பிறர் வீட்டில் உண்பார்களே யன்றி, தங்களுக்கு இட்டவர்கள் தங்களைத் தேடி வந்தால் வெறும் வாய் உபசாரம் பேசியனுப்பிவிடுவார்கள். தாங்கள் ஒரு கடையில் உட்கார்ந்திருக்கும்போது தங்களை நேற்று வடை பாயசத்தோடும் உபசரித்தவன் அதே கடைக்கு வரக் கண்டால், எங்கே நம்மோடு பேசத்தொடங்கி அப்படியே நமது வீட்டிலும் வந்து உட்கார்ந்து செலவு வைப்பானோவென்று வேறு பக்கமாய்த் தங்களின் முகத்தை யவன் காணாதிருக்கத் திருப்பிக்கொள்வார்கள். அந்தப் பக்கமும் வந்து அவன் க்ஷேமம் விசாரித்தால் வேண்டா வெறுப்பாய் அவனோடு பேசித் தங்களின் சுருங்கின முகத்தைக் காட்டி, அந்த முகத்துப் பார்வையிலேயே அவன் வெறுப்புற்றுப் போய்விடும்படி செய்துவிடுவார்கள். பிறர்சொத்தை எவ்வளவுக்கு மோசம் செய்யவேண்டுமோ அவ்வளவுக்கும் செய்து ஊர் சொத்தைத் தின்று தாங்களே வாழப் பார்ப்பார்கள். கடைசியில் கவனித்தாலோ இவர்கள் வாழ்வதற்குப் பதிலாக மோசத்துக்கு மோசமே போய் நாசமடைந்து ஊரையேவிட்டு ஓடிப்போகும்படியும், எல்லாப் பெருமைகளும் கெட்டுக் சீரழியும்படியும் ஆகிறது என்றார்.

மோர்க்குழம்பு பண்டாரம்:— இன்னும் சிலர் பிறருக்குக் கெடுதியும் செய்வதில்லை, நல்லதும் செய்வதில்லை, எவரையும் தங்கள் வீட்டிலே சேர்ப்பதில்லை, தாங்களும் பிறருக்குத் தொந்தரை தருவதில்லை. தங்கள் வீட்டோடு செட்டுத்தனமாயிருந்து புசித்துக்கொண்டு 60-ரூபாய் சம்பளம் வந்தால் 10-ரூபாய் மட்டும் செலவிட்டு 50-ரூபாயைச் சேர்த்து வைப்பார்கள். பிறர் துக்கத்தில் சிறிதும் அனுதாபப்படமாட்டார்கள். தாங்கள் குடியிருக்கும் வீட்டிற்கு வேற்றூரான் ஒருவன் வந்து தங்கியிருக்கும் சமயம் அவன் மனைவிக்கு அபாயம் என்று தந்தி வந்து அவன் ஆத்திரமும் அழுகையுமாகப் புறப்படும்போது, அந்த நேரத்தில் தாங்கள் அனுதாபமாய் ஒரு வார்த்தையும் சொல்லாமல், அந்த வேளையில் தங்கள் பிள்ளைகளுக்குப் படிப்பு சொல்லிக்கொடுத்துக்கொண்

உலகத்தில் அன்புத்தளைகள் கிடையாதார்க்கு எந்தப் பொறுப்பும் பளுவும் இல்லை. நினைத்த நேரத்திலேயே தான் இருந்த இடத்தைவிட்டுப் போய்விடலாம். இத்தகையோரை நம்புவதிற் பயனில்லை.

டிருப்பார்கள். பிறர் கஷ்டத்தில் கொஞ்சமும் இரக்கப்படமாட்டார்கள். எந்த அரிசி வெகு நயமாக விற்கிறதென்று பார்த்து மட்டமான அரிசியையே வாங்கிச் சமைத்து அவ்வளவு பிசுணறித்தனமாக நடந்து கொள்வார்கள். இப்படிப்பட்டவர்களுக்குக் கடவுள் குழந்தைகளைக் கொடுத்தாலும், இவர்கள் நன்றாக வாழ்வதேபோல் தோன்றினாலும், கடைசியில் இவர்களின் வாழ்வு சுருங்கித்தான் போகிறது. தங்களின் பெண் குழந்தையைக் கொடுத்த இடத்தில் வருஷங்கள் இருபது ஆகியும் அவளுக்கு ஒரு காய்ப்பும் காய்க்கக்காணோம். ஒரு குழந்தை குட்டியும் காணோம்! எவ்வளவோ சீரும் வரிசையுமாகச் சிறப்பாய்க் கல்யாணம் நடத்தியும் எந்தப் பயனுமில்லை. செட்டுத்தனமாய்ச் சேர்த்த பொருளுக்கு விரயமானதைத் தவிர வேறு லாபம் காணோம்! பாக்கியிருந்த இரு குமாரர்களோ—ஒருவன் ரயில் உத்தியோகத்தில் ரயில் ஏறி மாண்டுவிடுகிறான். மற்றொருவனோ புண்ணியம் தேடப் போன இடத்தில் ஆற்றோடு போய் விடுகிறான்! செட்டுத்தனத்தின் குடும்பவிருத்தி இப்படியாய் முடிகிறது என்றார்.

ஃ

ஆழாக்கு அரிசியார்:—சிலர் இயற்கையிலேயே செட்டுத்தனமாகவோ, தாராளத்தனமாகவோ பிறந்துவிடுகிறார்கள்! தாராளக்காரன் என்றைக்கும் கை தாராளமாகவே இருக்க, அவனுக்கும் நாலு காசுகள் கடைசி வரைக்கும் வந்துகொண்டிருக்க எல்லோருக்கும் அவன் நல்லதே நினைத்துவிட்டுக் கடவுளிடம் போய்ச் சேருகிறான். செட்டுக்காரனோ எங்கும் தனது கை சுருக்கத்தையே காண்பிக்கிறான். எவ்வளவு செல்வம் கொட்டிக் கிடந்தாலும் அவன் கை சுருக்கத்தையே காண்பிக்கிறது. தாராளமாய்ப் பிறருக்கு எடுத்துவைக்கவோ உதவவோ கை வருகிறதே யில்லை. இன்னும் அதிகமான சொத்து சேர்க்கவே ஆசையாகிறது. இப்படிப்பட்டவர்களின் பெண்கள் மலடிகளாகப்போய், இவர்களின் பிள்ளைகளுக்கு எவ்வளவோ வயசு வந்தும் விவாகமேயில்லாமல், விவாகம் ஆன பிள்ளைக்குக் குழந்தை எதுவும் காய்க்காமல் போகிறது. ஒரு வாழைக்காய் வாங்கி வந்து கறியாக்கி ஒன்பதுபேர் தொட்டுக்கொண்டு புசித்த அவ்வளவு செட்டுத்தனம் கடைசியில் எதுவுமே விருத்தியில்லாத நிலைக்குக் கொண்டு வந்துவிடுகிறது என்றார்.

ஃ

தாண்டவத் தேவர்:—எவ்வளவோ தாராளக் கையாகச் செலவிட்டுவந்த இடத்தில் பிசுணறித்தனமான செட்டுக்கை மனிதர்கள் புகுந்து கொள்கிறார்கள். தாராளக்காரர்கள் கண்மூடிப்போக, இந்தச் செட்டுக்காரர்களின் அரசாட்சியே பெரிதாகி, நாலுபேர் வரப்போக இருந்த வீட்டில் எந்தக் கும்பலும் கூச்சலுமே காணாமற்போய், தப்பித்தவறிப் போனாலும் உபசரிப்பாரில்லாமற் போய், உபசரித்தாலும் அந்தச் சோறுங் கறியும் வந்தவர்களுக்குப் பிடிக்காமல் அப்பொழுதே பிரயாணப்படும்படியாக ஆகிப்போய் இவ்வளவு கருமித்தனமான வாழ்வு காண்பித்துக் கடைசியில் வாழ்வதற்குப் பதிலாகத் திடீரென்று தாழ்ந்து விருத்தியின்றி

சிலர் நாளைக்கு இங்கிலாந்துக்குக் கப்பலேறப் போவதாகப் பெருமை பேசுவர். வேறொருவர் தாம் இனி செய்யவிருக்கும் பெரிய காரியத்தை இப்போதே பஹிரங்கப் படுத்துவர். கடைசியில் எதுவுமே நடவாது.

விபரீதப்பட்டுப் போகிறார்கள்! செட்டுத்தனம் வேண்டியதுதான் என்றாலும், அதையே ஒரு துர்க்குணமாகவும் ஜென்மபுத்தியாகவும் கொண்டவர்கள் தரித்திரப்பட்டுப் போவதைக் காண்கிறோமேயன்றி, செழிப்பாக வாழ்ந்து மேன்மைப்படுவது அபூர்வமாகவே யிருக்கிறதென்றார். இத்துடன் நமது கடையும் பூர்த்தி பெற்றது.

பகநூர்-பொன்வண்டு செட்டியார்.

பெண்கள் தங்களுக்கு ஒரு காரியம் ஆகவேண்டி யிருக்கும் போது, வெகு வணக்கமும் பிரியமும் புன்னகை முகமும் காட்டிப் பேச வருகிறார்கள். அதில் வீட்டுக்காரன் சிக்கிக் கொள்ளாதிருந்தால் அவன் கைக்காசுக்குப் புதுச் செலவுகள் ஏற்படாதிருக்கலாம். எதிலாவது எப்படியும் சிக்க வைப்பதேபெண்களின் வேலை.

விநோத அகராதி.

பால்ய விதவை:—இரக்க மற்ற பாவிகள் பலர் இருக்கிறார்களென்பதைக் காட்டிக்கொள்ள ஏற்படுத்திய உணர்ச்சியுள்ள உருவச்சிலைகள்.

புரோகிதன்:—இழவு—கல்யாணம்—கருமாதி ஆகிய யாவற்றிலும் கலந்துகொண்டு பாவ மூட்டையைக் கட்டியனுப்புகிற தபால் அதிகாரி.

குருக்கள்:—பரலோகக் கைகாட்டி மரம். புண்ணியம் விற்கும் பூலோக செட்டியார்.

ஜோஸ்யன்:—அடுத்த நிமிஷம் தனக்கு வரப் போகிறதை அறியாதவன். புத்தியுள்ளவனையும் குருடனுக்க வந்த ஜகஜாலப் புரட்டன்.

மந்திரவாதி:—ஏமாந்த சோணகிரிகளிடம் பணம் பறிக்கும் எத்துக்காரன்.

பெருந்திருடன்:—கலியாணம் வேண்டாமென்று கூறிவிட்டுப் பெண்கள் மீதே நினைவாக அலைபவன்.

சத்தியவாக்குப் பிரமாணிக்கம்:—பொய் பேசுவதற்குக் கண்டு பிடிக்கப்பட்ட குறுக்கு வழி.

அந்தகாரப் போர்வையை எவரெவர் போர்த்துக்கொண்டனர்? எந்தெந்த சமயத்தில் போர்த்துக்கொண்டனர்?

சென்றமாதம்

யானைமுகக் குழந்தை:—

"அதிர்ஷ்டம் கெட்ட கழுக்காணி" என்பர். அதிர்ஷ்டக் கோணல் உள்ளவர்களுக்குப் பிறக்கிற பிள்ளையும் கோணித்தான் இருக்குமாம். கோடா என்னும் ஊரில், சென்ற ஆகஸ்டு மாதம் 20-தேதியில், உடல் மனிதனைப்போலும் முகம் யானையைப் போலுமுள்ள ஒரு குழந்தை பிறந்துளது. அதற்குக் காதும் தலையும் பெரிது. மூக்கையொட்டி இருபுறங்களிலும் இரண்டு சிறு பற்களுடன் கூடிய இரண்டங்குல நீளமுள்ள துதிக்கை யிருக்கிறது. குழந்தை பிறந்தபொழுதே ஆறு மாதக் குழந்தைபோன்ற அவ்வளவு புஷ்டியுடன் இருக்கிறது. தாய்ப்பால் அருந்தாமல் பசும்பாலையே உண்ணுகிறது. பிரத்தியக்ஷ மகா கணபதி போலுமிருக்கிறது. இந்தக் குழந்தையைப் பெற்ற தாயைப் பாக்கியவதி என்பதா? அல்லது அதிர்ஷ்டங்கெட்டவள் என்பதா? இக்குழந்தை உயிருடனிருப்பின், திரைக்குள் வைத்து ஜனங்களுக்குக் காண்பித்துப் பணம் தேடுகிற ஒரு அதிர்ஷ்டம் மட்டும் உண்டு என்று சொல்லலாம்.

ஃ

சாரதா சட்டத்தை மீறுதல்:—

"இன்றைக்குச் சின்னதுக்கு வந்தது நாளைக்குப் பெரியதுக்கும் வரும்." அரசாங்கத்தார் பால்ய விவாகம் கூடாதென்று சாரதா சட்டம் செய்திருக்கையில், பல இடங்களில் அதைப் பகிரங்கமாய் மீறப்படுகின்றன. ஐந்துவயது பெண்ணுக்கும் பத்துவயது பையனுக்குங்கூட விவாகம் நடக்கின்றன. இப்படி சட்டத்தை மீறி நடப்பதைக் குறித்து சென்னைக் கவர்ன்மெண்டு சட்ட மெம்பர் இந்தியா கவர்ன்மெண்டுக்கு எழுதிக் கேட்டிருப்பதாகத் தெரிகிறது. சட்டத்தை மீறினால் அபராதம் மட்டும் தானே விழும் என்கிற தைரியத்தோடு துணிகிறார்கள்போலும் காண்கிறது. இந்தத் துணிச்சலுக்கு ஒரு புதிய சூடு, திருத்தம் தரவேண்டியதும் அவசியமே.

ஃ

மறுபடியும் சிறை:—

"வந்ததுபோலப் போச்சு" என்பதாய், ஸ்ரீ ஜவஹர்லால் நேரு தமது மனைவியார் அபாயநிலையிலிருந்ததற்காக விடுதலை பெற்று, தமது பத்தினியின் முகம் கண்டார். சில நிபந்தனைகளின்மீது பூரண விடுதலை தரக் கவர்ன்மெண்டார் இணங்கியும், இப்பெரியார் அதற்கு ஒப்பாததால் மறுபடியும் சிறைக்கு அனுப்பிவிட நேர்ந்தது. சிறை செல்ல ஜவஹரிலால் தமது தாயாரிடம் விடை பெறும்பொழுது அவரைக் கட்டிப்பிடித்து முத்தமிட்டாராம். அன்புள்ள அன்னையும், கலாவதியான பத்தினியும், எல்லா பாக்கியங்களுமிருக்க, அத்துடன் சிறைவாசக் கோணலும் கூடிக் கொண்டதுபோலும். சர்க்காரின்

இறைவன் ஒவ்வோர் செவிப்புலனுக்கும் தெரிவிக்கும் சில உண்மைகளே அசரீரியாம்.

நிபந்தனைகளுக்கு ஒப்பி ஒரு வார்த்தை கூறினால் உடனே விடுதலை பெறலாம். வீரத்தன்மை அதற்கு ஒப்ப மறுக்கிறது. பழைய நாளில் காங்கிரஸ் தலைவர்கள் ஹைகோர்ட் ஜட்ஜ் பதவிகள் பெற்றனர். இப்போதோ சிறைவாசம் காண்கின்றனர்

ஃ

வேலையில்லாத் திண்டாட்டம்:—

"கண்டும் காணாததுபோல விட்டுவிடவேண்டும்" என்பார்கள். உத்தியோகக் கல்வி கற்று உத்தியோகம் கிடைக்காமல் திண்டாடுங் கஷ்டம் நேருக்கு நேராகத் தெரிந்திருப்பினும், அதைக் கவனியாததுபோல் இருந்து, தமது மக்களுக்கும் உயர்தரப் படிப்பையே போதித்து, அவனவன் அதிர்ஷ்டப்படியாகிறதென்று விட்டுவிடவேண்டுமாம். இது தற்காலத்தாரின் கொள்கை. 1933-ம் வருஷத்திய சென்னை மாகாணப் போலீஸ் நிர்வாக ரிபோர்ட்டில், எஸ். எஸ். எல். ஸி. பரீக்ஷை தேறியவர்களில் 90-பேர்கள் கான்ஸ்டேபில் பதவியைப் பெற்றுள்ளாரென்றும், இதில் ஒருவர் இண்டர்மீடியேட் பரீக்ஷையில் தேறியவரென்றும், பி. ஏ. பட்டம் பெற்ற ஒருவரும் இவ்வேலைக்கு வந்திருக்கின்றாரென்றும், எம். ஏ. பட்டதாரிகள் இருவரும், பி. ஏ. (ஹானர்ஸ்) பட்டதாரிகள் இருவரும், பி. ஏ பி. எல். பட்டதாரி ஒருவரும் ஸப் இன்ஸ்பெக்டர் வேலையில் அமர்ந்திருக்கிறார்களென்றும் சொல்லப்படுகிறது. பெரிய உத்தியோக பதவிகளுக்கு அதிர்ஷ்டம் செய்திருந்தாலன்றி, படிப்பைக் கொண்டு உயரமுடியாது போலும்!

இன்னொருவருக்குத் தருவதற்கென எடுத்து வைத்துள்ள ஒரு வஸ்துவை வேறொருவருக்குக் கொடுத்துவிட எண்ணுகையில், தனது அவசர புத்தியை நிதானத் தன்மையில் சில நிமிஷங்கள் வைத்து யோசித்துப் பார்க்க வேண்டும். முதலில் எவருக்குக் கொடுப்பதென்று எடுத்து வைக்கப்பட்டதோ அவருக்கே அதைக் கொடுப்பதுதான் சரியாகும். முதலில் செய்த தீர்மானமே பிறகு சரியாயிருக்கும்.

பொருளைத் தேடுபவர் ஒருவரும், அதை யனுபவிப்பவர் வேறுமாயிருக்கிறார்கள். வழியைக் கண்டு பிடிப்பவன் ஒருவன். நடப்பவன் ஒருவன். வீட்டைக் கட்டுவோன் ஒருவன். அவன் கடன்பட்டு வீட்டை விற்றுவிட, அதில் வாழ வருவோன் வேறொருவன். சில பெண்கள் தாம் செய்த பக்ஷணங்களைத் தாம் ஒன்றுகூட எடுத்துண்ணாமல், பிறருக்கு வைப்பதிலேயே செலவழிக்கும் பெருந்தன்மை பூண்டிருப்பர்.

எவ்வளவு மிருதுமயமான கடிதம் எழுதினாலும் தனது குணத்தை யறிந்துகொண்ட பிறரைக் கடிதங்களால் மறுபடியும ஏமாற்றிவிட முடிகிறதில்லை. எவ்வளவோ சொந்தமபோல் எழுதிக்கொண்டாலும், அவ்வளவு சொந்தம் பாராட்ட இவர்களுக்குத் தகுதியும் யோக்கியதையும் உண்டா என்று அந்தத் தேனொழுகும் கடிதத்தைப் பெற்றவர்கள் வெகு நீளமாய் யோசித்துவிட்டு வெறுக்கிறார்கள்.

மாதிரி மணம்.

—மேனாட்டுக் காதலின் விநோதம்—

மாலையில் மணி ஐந்து அடித்தது. அதுவரையில் "கன்னியின் காமம்" என்ற சிற்றின்பம் ததும்பும் நாவலை வாசித்துக்கொண்டிருந்த ஸோபையா ஜேன் என்ற யுவதி தன் புஸ்தகத்தை மூடிவிட்டு நடனசாலைக்குச் செல்வதற்காகத் தன்னைச் சிங்காரித்துக்கொள்ளலானாள். ஜேன் தனது கணவனான ஜாக்ஸன் அத்தனையாக சரசபுருஷனல்லவென்றும், அதிக சிகரெட்டுகள் மதுபானங்கள் உபயோகிப்பதில்லையென்றும் வெறுத்து விவாக ரத்து செய்துகொண்டு, வேறொரு புதிய ஆடவனான பால் என்பவன் மீது காதலைச் செலுத்தியிருந்தாள். அவள் சிங்காரித்துக்கொண்டு முடிந்ததும், புதிய காதலனான பால் அனுப்பியிருந்த மோட்டாரில் ஏறி நடனசாலைக்குச் சென்றாள். அங்கு காத்துக்கொண்டிருந்த பால் ஜேனுக்குக் கைலாகு கொடுத்துக் கீழே இறக்கும்போது அதுவரையில் முத்தத்திற்கெனத் தவித்துக்கொண்டிருந்த அவனது உதடுகளின் தாபத்தையும் தீர்த்துக் கொண்டன.



ஃ

ஜேனும் பாலும் கைகோர்த்துக்கொண்டு நடனசாலைக்குள் நுழைந்ததும், அங்கு ஓர் கருப்பலகையில் பின் வருமாறு எழுதப்பட்டிருந்தது:-

* 1924-ம் வருஷத்திய விவாக ஒப்பந்த விவரங்கள்.

இடம்.	மாதிரிமணம்.	ரத்துகள்.
கான்ஸான் நகரில்	4821	2400
சிளிவ்லாந்தில்	10132	5256
டென்வர் நகரில்	3000	1500

மாதிரி மணமென்பது ஆணும்பெண்ணும் நடனசாலையிலோ, கடற்கரையிலோ எங்கேனும் சந்தித்துக் காதல் கொண்டதும், உடனே அவர்கள் அருகிலுள்ள ரிஜிஸ்டர் ஆபீசில் (Treal Marriage) தங்கள் மாதிரி மணத்தைப் பதிவு செய்துகொண்டு கணவனும் மனைவியுமாகி வாழ்வதாம். பிறகு, தங்களுக்கு இஷ்டமானல், அந்த மாதிரிமணத்தை ரத்து செய்துகொண்டு வேறு விவாகம் புரியலாம். சாதாரணமாக, அமெரிக்காவில் 100-விவாகங்கள் நடந்தால், அதில் 50-ரத்துகளாகி விடுகின்றன.

ஃ

ஜேன்:—விவாக ரத்துகளின் அட்டவணையைப் பார்த்தீர்களா? உங்களின் கடைசி மனைவியுடன் ஏன் விவாகரத்து செய்துகொண்டீர்கள்?

பால்:—மை டியர் ஜேன்! என் எட்டாம் மனைவியான 'ஆன்' என்பவள் எவனே ஜாக்ஸன் என்பவனைக் காதலிக்கிருளாம். இரண்டு மூன்று முறை அவன் கரத்தில் அவளைக் கண்டேன். ஆனதால் அவளை ரத்து செய்துவிட்டேன்.

ஜேன்:—யாரை? ஜாக்ஸனையா? அவன்தான் என் கடைசி கணவன். அந்த மூடனைக்கூட ஒரு பெண் காதலிப்பாளா? தங்களைப்போன்ற சுந்தர புருஷரைவிட்டுக் காட்டு மிராண்டிபோலுள்ள ஜாக்ஸனை எப்படித்தான் 'ஆன்' விரும்பினளோ?

ஃ

இந்த ஸம்பாஷணை முடியும் தருணத்தில் ஜேனின் கடைசி கணவனை ஜாக்ஸனும், பாலின் கடைசி மனைவியான 'ஆன்' என்ற நங்கையும் ஒருவர்க்கொருவர் கை கோர்த்துக்கொண்டு குதூகலமாய் அங்கு வந்தனர். இவர்களைக் கண்டதும்,

ஜாக்ஸன்:—ஹலோ! மிஸ்டர் பால்! உங்களுடைய புதிய மணவாழ்க்கை இன்பமாக இருக்கவேண்டுமென விரும்புகிறேன்.



பால்:—நாங்கள் இன்னும் விவாகம் செய்து கொள்ளவில்லை. இன்றிரவு தான் திருமண ஒப்பந்தத்தில் கையொப்பமிடுவதாக உத்தேசம். இப்பொழுதுதான் ஜேன் தங்களைப்பற்றிக் கூறினள். அதற்குள் தாங்களும் வந்துவிட்டீர்கள்.


ஜாக்ஸன்:— ஓ! 'ஆன்' கூட தங்களின் கடைசி மனைவியாக இருந்ததாகச் சற்று

முன்பு கூறினுள். கொஞ்சம் சிற்றுண்டி யருந்திவிட்டுவருகிறேம், உங்கள் இருவருக்கும் வந்தனங்கள்.

என்று கூறிவிட்டு, ஜாக்ஸன் தன் புதிய காதலி ஆனின் இடையில் தன் கரத்தைக் கொடுத்துத் தழுவியவாறு சென்றுன். ஜேன் தன் பழைய கணவனுக்கு ஓர் புன்முறுவலில் வந்தனம் செய்தாள்.

ஃ

ஜேனும் பாலும் நடனமேடை மீதேறி சிறிதுநேரம் நடனம் செய்து விட்டுக் களைத்து ஓர் அறைக்குட்சென்றனர். அங்கு இருவரும் தாங்கள் மாதிரி மணம் செய்துகொள் வதற்குமுன் இன்பச் சுவையை முதலில் மாதிரி பார்த்து விட்டு, நேராக ரிஜிஸ்டர் ஆபீஸுக்குச் சென்று தங்களை மனைவி புருஷனுக ஒப்பந்தம் செய்து கொண்டு திரும்பினர்.



ஃ

பால்:—நான் இது வரையில் எட்டு விவாகரத்துகள் செய்தாயிற்று. இனிமேலாவது எவ்வித ரத்துமின்றி நாம் நடந்து கொள்ள வேண்டும்.

ஜேன்:—என் அழகிய காதலா! நீங்கள் பிரித்தாலல்லது, நான் ஒரு போதும் உங்களைவிட்டுப் பிரியேன். என் உள்ளம் தங்களிடம் ஐக்கியமாகி விட்டது. மரணம் வரையில் ஒன்றுபட்டிருப்போமாக.


ஃ

மூன்று மாதங்கள் சென்றன. ஜேனிடம் ஒரு புது மாறுதல் வெகு விரைவில் தோன்றியது. நியூயார்க் நகரத்துப் பிரபல தனவந்தனின் குமாரன் ஒருவன் தன்னிடம் அதிக காதல் கொண்டிருக்கிறுன் என்பதை ஜேன் தெரிந்துகொண்டாள். பிரபு புத்திரனேடு வாழ்ந்தால் மிக்க கண்ணியமாக இருக்குமென்றும், அத்துடன் தானும் ஒரு பணக்காரியாக இருந்தால்தான் அவனும் தன்னைக் கௌரவித்து நடத்துவானென்றும், அதற்காகத் தான் ஒரு உபாயம் செய்யவேண்டுமென்றும் நிச்சயித்தாள். உபாயமாவது, பாலைத் தூங்கும் சமயத்தில் கொன்றுவிட்டு, அவன் சொத்துக்களைத் தன்

* 468-ம் பக்கத்தின் அடியிலுள்ள விவாக ராத்துக் கணக்கு விவரங்களை யறிய ஆவலுள்ள வாசகர்கள் லிண்ட்ஸே அவர்களின் Revolt of Morden youth என்னும் நூலின் 212-ம் பக்கத்தில் காண்க.

வசமாக்கிக்கொண்டு ஐசுவரிய ஸம்பன்னையாகிப் பிரபுவின் குமாரனை மணப்பதென்பதே.


∴



பெண்கள் நினைத்தால் ஆகாததுண்டா? பால் தன் உத்தியோக சம்பந்தமாய் வெளியூருக்குச் சென்றிருந்தான். அவன் திரும்பிவர ஒரு வாரமாகுமானதால், அதன் மத்தியில் தான் அங்கு சென்று ரகசியமாக இரவில் அவனை ஈட்டியாற் குத்திக் கொன்றுவிட்டு, உடனே தன்னிடத்திற்கு வந்து சேர்ந்து ஏதும் அறியாதவள்போல் நடிப்பதென்று ஜேன் தீர்மானம் செய்துகொண்டு புறப்படத் தயாராயிருந்தாள்.

∴

பாலின் முன் மனைவியான 'ஆன்' என்பவளுக்கு ஜேனுடன் பால் இன்பமாக வாழ்வது சகிக்கவில்லை. ஜாக்ஸனும் தன் முன்மனைவியான ஜேன் தன்னைக் கைவிட்டுவிட்டதைப்பற்றி உள்ளுக்குள் அதிக ஆத்திரம் கொண்டிருந்தான். கடைசியில் 'ஆன்' என்பவளும் ஜாக்ஸனுமாகக் கலந்து பேசிக்கொண்டு, பால் போயிருக்கிற வெளியூருக்குச் சென்று, இரவில் அவன் நன்றாகத் தூங்கிக்கொண்டிருக்கும் சமயத்தில்ஈட்டியால் குத்திக் கொன்றுவிட்டு மறு நிமிஷமே ரயிலேறித் தங்களின் ஊருக்கு வந்துவிட்டனர். பால் கொல்லப்படும் சமயத்தில் அவன் அலறிக் கூச்சலிடாமல் சவம்போல் கிடந்ததால், எந்த சந்தடியும் உண்டாகவில்லை. வெளியிலிருந்து எவரும் ஓடி வரும்படியான அவசரமும் நேரவில்லை. தாங்கள் குத்திய சமயம் பால் கூச்சலிடாதது ஜாக்ஸனுக்கும், 'ஆன்' என்பவளுக்கும் ஆச்சரியமாகவே இருந்தது. மறுநாட் காலையில்தான் பால் கொலையுண்டிருப்பதை ஹோட்டல்காரர்கள் அறிந்தனர். கொலையாளி எவரென்று



ஒவ்வொருவரும் முன்னைய சென்றுவிட்ட காலத்தில் நடந்து கொண்ட தாறுமாறுகளையும், துரோக வஞ்சனை மோசங்களையும், தூஷித்த பேச்சுகளையும், வெட்டிக்கொண்டு பிரிந்த விதங்களையும் நினைத்து நினைத்து சதா சிந்திப்பவர்களை, அவ்விதம் நடந்தவர்களோ பிறரோ இலகுவில் ஏமாற்ற முடியாது. தங்களை எவ்வளவுதான் பிறகு நல்லவராய்க் காட்டிக் கொண்டாலும் அவர்களால் ஏமாறியவர்கள் பிறகு நம்பமாட்டார்கள்.




தெரியவில்லை. வெகு தூரமான ஊரில் இருந்த பாலின் மனைவியான ஜேனுக்குத் தந்தி யனுப்பினர். தந்தியைக் கண்டதும் ஜேன் தானே செய்யவிருந்த வேலையை மற்றவர்கள் செய்துவிட்டதற்கு உள்ளுக்குள் சந்தோஷித்தாளாயினும், வெளிக்குத் துக்க அபிநயம் செய்து அலறித் துடித்து, உடனே ரயிலேறிச் சென்று பாலின் சவத்தின்மீது விழுந்து கதறினாள்! ஃ

மேற்கண்ட சங்கதிகள் நடந்து ஆறு மாதங்களாயின. பாலின் எல்லா சொத்துக்களும் ஜேனுக்குச் சொந்தமாகி, அவள் முன்பு நினைத்த வண்ணமே பெரிய சீமாட்டியாயினாள். பிரபுவின் குமாரனும் அவளை விவாகம் செய்துகொண்டான். ஒருநாள் பிரபு மைந்தன் ஜேனுடன் உல்லாஸமாயிருக்கும்போது, உண்மையாகப் பாலைக் கொன்றவன் தானே யென்றும், ஜேன்மீது கொண்ட அளவற்ற காதலால் கொலைக்கும் துணிந்ததாயும், பால் இறந்துவிட்டால் ஜேன் தன்னை மணக்கத் தடையிராதென்று அவ்விதம்



செய்ததாயும் கூறினான். ஜேன் ஆச்சரியத்துடன் "நீங்களா குத்திக் கொன்றவர்கள்?" என்றாள். அதற்குப் பிரபுவின் குமாரன், "ஹோட்டல் வேலைக்காரனைப் பணத்தால் வசப்படுத்திப் பிராந்தியில் கொடிய விஷம் கலந்து கொடுக்கச் செய்தேன். இரவு 7-மணிக்குப் பால் அதைக் குடித்ததும் மயக்கமாகக் கட்டிலில் விழுந்து 8-மணிக்கே இறந்துவிட்டான். மணி 10-ஆன போதும் பால் தன் கட்டிலிலிருந்து எழுந்திருக்கவில்லை யென்று ஹோட்டல் வேலைக்காரர்கள் போலீஸாரிடம் சாக்ஷியம் கொடுத்திருக்கின்றனர். அதற்குப்

உலகில் உள்ளே யொன்றும புறம்பே யொன்றுமாக இருக்கிறதே, அதை மாற்ற முடியாதோவெனில், முடியாதென்றே அனுபவம் கூறுகிறது. குணத்தை மாற்றக் குருவில்லை.



பிறகே எவரோவந்து முன்பே இறந்துவிட்டவனைக் குத்திக் கொலை செய்திருக்கிறார்கள். சவமாயிருப்பவன் தன்னைக் குத்தும்போது எப்படி அலறிக் கூச்சலிட முடியும்? அதனால் குத்திய கொலையாளியும் என்னைப்போல் தப்பித்துக்கொண்டான். பால் குத்தப்பட்டு இறந்ததாகவே போலீஸார் நம்பியதால், அவனுக்கு விஷம் கொடுக்கப்பட்டு இறந்தானென்றாவது. அதற்காக உடலையறுத்து விஷமிடப்பட்டதைச் சோதிக்கவேண்டுமென்றாவது அதிகாரிகள் நினைக்கவில்லை" என்றான்.

ஃ

இதைக் கேட்டதும் ஜேன் தன் புதிய காதலன் பயங்கரமான கொலைப் பாதகன் என்று உள்ளுக்குள் நடுங்கினாளாயினும், அதை வெளியிட்டுக் கொள்ளாமல் மறைத்து, "ஆ! என் கண்ணே! காதல! எனக்காக எவ்வளவு சாமர்த்தியமான வேலையைச் செய்தீர்கள்" என்று கூறி, பிரபுவின் குமாரனைக் கட்டியணைத்து முத்திட்டுக்கொண்டு அவனைப் புகழ்ந்தாள். தன் காதலி தன்னைப் பாராட்டிக்கொண்டாடியதில் அவனும் உள்ளம் பூரித்தான்.

ஃ

ஆயினும், பிரபு மைந்தனின் கொடிய கொலைச்செயலை ஜேன் அறிந்தது முதற்கொண்டு அவனை உள்ளுக்குள் வெறுத்தவளாய், தனக்கும் அவன் எங்கே விஷத்தைக் கொடுத்து விடுவானோவென்று நடுங்கினாள். தன் முன் கணவனான பால் என்பவனைத் தான் கொல்ல நினைத்ததுண்டாயினும், அவன் காட்டிய அபரிமித அன்பு தன்னைத் தடுத்ததால் துணியவில்லை. அவ்வளவு அன்பு காட்டியவனைக் கொன்றதைச் சகியாதவளாகி மனம் வெறுத்து. பிரபுவின் குமாரன் விஷமிட்ட விஷயத்தை ஒரு அநாமதேயக் கடிதத்தின் மூலம் போலீஸாருக்கு அறிவித்து விட்டாள். போலீஸார் சும்மா

பெருந்தன்மை என்பது பணத்தினால் வருவதல்ல. பணமுள்ளோரிற் பலர் அற்பத்தன்மையைக் கொண்டிருக்கின்றனர். எத்தனை தனவான்கள் அற்பர்களோடு இணங்கி ஹீனமான காரியங்களைச் செய்து அவமான மடைந்திருக்கின்றனர்? ஆதலின், பெருந்தன்மை மனதைப் பொறுத்தது. எவனுடைய மனம் நற்காரியங்களில் பிரவர்த்திக்கிறதோ அவனே பெருந்தன்மை யுள்ளவன்.



இருப்பரோ? புதைக்கப்பட்ட பாலின் சவத்தைத் தோண்டியெடுத்து வைத்திய பரிசோதனைக்கு அனுப்பி, விஷமிடப்பட்டதைக் கண்டறிந்து பிரபுவின் குமாரனைக் கைது செய்தனர். அந்த விசாரணையில் ஜேன் ஒரு சாக்ஷியாகி, பிரபுவின் குமாரன் விஷமிட்டதைத் தன்னிடம் தெரிவித்ததாகக் கூறினுள். ஹோட்டல் வேலைக்காரனும் பிரபுவின் குமாரனும் தூக்கிலிடப் பட்டனர்.

ஃ

இதன் மத்தியில் "ஆன்" என்பவள் இறந்து போக, முன்பு தான் இகழ்ந்த ஜாக்ஸனையே மறுபடியும் மணமுடித்துக்கொண்டு வாழ்வதானுள். பிரபுவின் குமாரனை ஜேன் போலீஸுக்குக் காட்டிக் கொடுத்ததுபோல், தான் பாலைக் குத்திக் கொன்றதையும் அவள் வெளியிட்டுவிடுவாள் என்று அஞ்சி அந்த உண்மையை ஜாக்ஸன் அவளிடம் தெரிவியாது மறைத்துவிட்டான். சுற்றிச்சுற்றி சுங்கச்சாவடி வந்ததுபோல் பழய கணவனுடன் ஜேன் மகிழ்ந்து கொண்டிருக்கிருள். என்னே! மேனுட்டுக் காதலின் விநோதம்!!

கே. வி. எஸ். வாஸ், பி. ஏ.

(ஹானர்ஸ்.)

சாக்கடைக்கு அருகேயிருந்துகொண்டு துர்நாற்றம் வீசுகிறதென்று மூக்கைப் பிடித்துக்கொள்வதுபோல், துஷ்டர்களின் பக்கத்தில் வஸித்து நஷ்டம் அடைகிறேனே யென்று மனம் வருந்துவதில் என்ன பிரயோஜனம்? சாக்கடையை விட்டு விலகினுலன்றே துர்க்கந்தம் தொலையும். அதுபோல், தன் பெயரைக் கெடுக்கும் துராத்மாவைவிட்டு நீங்கினுல் கஷ்டமும் தானுகவே ஒழியும்.

அவர் தன்னைப் பகைக்கிறுனென்று தெரிந்தவனை இலகுவில் விடாதவர். வம்பு சண்டைக்குப் போகாதவராயினும், வலியவந்த சண்டையைத் தானும் எதிர்ப்பவர். எவருக்குமே உட்படாதவர். அன்பரிடமே நீண்டபேச்சு; மற்றவரிடம் சில நிமிஷங்களில் வார்த்தையை முடித்துவிடுவார்.

ஒரு மளிகைக் கடையைப் பெரியதகய் வைக்க இரண்டாயிரம் ரூபாய் வேண்டுமென்றும், ஆனுல், 200-ரூபாய் முதற்கொண்டு ஆயிரம் ரூபாய் வரையில் கடைவைத்து சமாளிக்கலாமென்றும் ஒரு வர்த்தக நிபுணர் கூறுகிருர்.

தாசியும் நாவிதனும்.

தாசி தான் ஒருவருடன் இணங்கி யிருக்கையில் மற்றவரைக் கவனியாதவர்போல் காண்பித்துக் கொள்வாள்.

தாசி ஒருவனுக்கு இணங்கி யிருக்கையி லும், வேறொருவர் வரின், தன் கண் சைகையால் வாருங்கள் என்று கூறி உபசரிப்பாள். மேல் வருமானத்திலேயே கண்ணுவாள்.

தாசிதான்மிகப் பிரயாசப்படுவது போல் காட்டித் தன் லீலைகளைப் புரிவாள்.

தாசி தன் அழகிய மேனியைக் காண்பித்துப் பணம்பெறுவாள்.

பணம் தந்தால் தாசி எதற்கும் இணங்கிடுவாள்.

தாசிக்கு ஒரு மாப்பிள்ளை யொழிந்தால், வேறு மாப்பிள்ளை.

தாசிக்கு நாணம் அசங்கிதம் இல்லை. தன்தொழிலையே கவனிப்பாள்.

தாசியில் நோயுள்ளவளுமுண்டு.

தாசியை எவரும் அறிவர்.

நாவிதன் ஒருவருக்கு க்ஷவரம் செய்கையில், பிறர் வந்தாலும் கவனியாததுபோ லிருப்பான்.

நாவிதன் பிறருக்கு க்ஷவரம் செய்து கொண்டிருந்தாலும்இன்னொருவர் வரின் அவரையும் உட்காருங்கள் என்று பணம்தேடுவதில் நோக்கமாவான்.

நாவிதன் மிகு சிரமத்துடன் க்ஷவரம் செய்வதாகநடித்துவெகு நல்லவனுவான்.

நாவிதன் தன் க்ஷவரக்கத்தியைக்கொண்டு பணம் வாங்குவான்.

நாவிதன் பணத்திற்கு எந்த ரகசியக்ஷவரங்களும் செய்வான்.

நாவிதன் ஒருவருக்கு க்ஷவரம் செய்ததும் வேறொருவரைக் கவனிப்பான்.

நாவிதனுக்கு அசங்கிதமும் நாணமும் இல்லாது தன்தொழிலையே கவனிப்பான்.

நாவிதனின் கத்தியில் ஒட்டுவியாதியுமுண்டு.

நாவிதனை யறியாதவரில்லை.

சரீரம் ஒரு கெடியாரம் போல.

சரியாக ஓடுகிற கடியாரம் ஆரோக்கிய நிலையிலுள்ள ஒரு மனிதனைப்போல் இருக்கிறது. தன் ஜீவியம் செம்மையாய் நடக்கிற ஒருவனை யொத்தும் உளது. கடியாரம் நன்ருக ஓடும்வரையில் எவ்வித விசாரமும் இல்லை. குறித்த வேளையில் அந்தந்த வேலைகளைச் செய்வது சுலபமாகும். தேகம் சுகநிலையிலுள்ளபோது, தான் முடிக்கக் கருதிய எந்த வேலையையும் நன்ருகச் செய்து திருப்தியடையலாம். தன் ஜீவனத்தொழில் நன்ருய் நடக்கையில் எந்தச் செலவுகளையும் தாங்கிக் குடும்பத்தைச் செழிப்பாக்கி உயர்த்தலாம். நன்ருய் ஓடும் கடியாரத்தை எவரும் விரும்புவர். சுகநிலையிலுள்ளவனை எவரும் பிரீதியாய் ஏற்றுக்கொள்வர். தொழில் கெடாமல் நாலுபணம் வருமானமுள்ளவனை எவரும் நம்பி மேன்மைப்படுத்துவர். கடியாரத்தில் பழுதுண்டானுல் ஓடுவது நின்ருே, சரியானபடி மணி காட்டாமலோ, அடிக்கடி நின்றுபோயோ அல்லல் விளைக்கும். சுகம் தப்பிய மனிதனும், தொழில் தவறிக் கெட்டவனும் தங்களின் சுறுசுறுப்பு ஒழிந்து வாடி ஏங்குவர். கெடியாரம் பழுது பார்க்கப்பட்டு முன்போல் ஓடுவதுண்டு. சுகம் தப்பியவனும் மருந்துண்டு குணப்படுவான். தொழில் போனவனும் வேறு தொழிலைப் பிடித்துக்கொண்டு பிழைப்பான். உடைந்த கெடியாரம் குப்பையிலே எறியப்படும். பிராணன் நீங்கிய உடல்நாறும் சவமே. தொழிலை இழந்தவர் பூமிக்குப் பாரமாகி மதிப்பற்றுக் கெடுவர்; சீரழிவர். கடியாரத்தை ஜாக்கிரதையாகக் காப்பாற்றுவதுபோலவே, தன் சுகத்தையும் ஜீவனத்தையும் சிரத்தையுடன் காப்பாற்றவேண்டும்.

மாயமாய்ப்போன மங்கை.

பால விவாகம்

சாரதாச் சட்டம்.

(399-வது பக்கத் தொடர்ச்சி.)

(*Mrs. Neelakanta Sastri Rajammal.*)

நீலா:—எனக்கு அவளைப் பற்றிக் கெட்ட அபிப்பிராயம் ஒன்றும் கிடையாது. என் நடக்கைக்கும் அவள் நடக்கைக்கும் வெகு தூரம்.

பத்மநாபன்:—நீ தான் யாரைக் கண்டாலும் பாவம் பாவம் என்று பரிதாபப் படுவாயே. என் அமிர்தவல்லியிடத்தில் உனக்குப் பச்சாத்தாபம் ஏற்படவில்லையா?

நீலா:—அய்யோ பாவம்! அவளிடத்தில் எனக்கு மிகுந்த பச்சாத் தாபமுண்டு. அவள் கஷ்டப்படும் காலங்களில் என்னிடம் உள்ள எதுவானுலும் நான் அவளுக்குக் கொடுக்கத் தவறிய தில்லை. பாவம்! அவளுடைய நாதனற்ற வாழ்க்கை மிகக் கொடியது. யார்தான் அவளைப் பற்றிப் பரிதாபங் கொள்ளாத வர். ஆனுல் அவளுடைய அடக்கமற்ற அகம்பாவக் குணம் தான் எனக்குப் பிடிப்பதில்லை.

பத்மநாபன்:—உன்னிடம் அவள் ஏதாவது அலக்ஷியமாக நடந் தாளா என்ன?

நீலா:—இல்லை, அவள் பேச்சுகளும் உடைகளும் நடைகளும் எனக்கு அப்படித் தோன்றியது.

பத்மநாபன்:—நன்றுயிருக்கிறது, இதுதானு உனக்குப் பிடிக்க வில்லை? அவள் அந்த மாதிரி யிருப்பதற்குத்தான் நான் அவ ளைப் புகழ்கிறேன். நீயும் அவளைப்போலவே இருக்க வேணு மென்பது என் அபிப்பிராயம்.

நீலா:—அய்யோ! அது ஒருநாளும் முடியாது. சரி, இது என்ன ஸாரமில்லாத பேச்சு. முக்கியமாக நடக்கவேண்டிய காரி யத்தை யல்லவோ நாம் கவனிக்க வேண்டும்.

பத்மநாபன்:—எந்தக் காரியம் நாம் இப்பொழுது கவனிக்க வேண்டியது.

நீலா:—அமிர்தவல்லியைப் பற்றித்தான்.

பத்மநாபன்:—ஆம். அது முக்கியந்தான். நானும் சுந்தரேசனுக்குக் கடிதம் புறப்பட்டு வரும்படி எழுதியிருக்கிறேன். இந்த விஷயத்தைப் பற்றி நீ அமிர்தவல்லியிடம் சொன்னதுண்டா?

நீலா:—நேற்றுக்கூட நான் அவளிடம் அவளுக்கு உறுதிப் படுமாறு வெகு நேரம் சொன்னேன். அவள் தனக்கு விவாகத்தில் விருப்பே கொள்ளவில்லை யென்றும், கூடுமானல் இப்பொழுதிருப்பது போலவே காலம் முழுவதும் இருக்கத் தீர்மானமென்றும் சொன்னுள். அவள் வார்த்தையில் எனக்கு நம்பிக்கை கிடையாது. அவள் வாழ்நாள் கெடாமலிருக்க நாம் உபகாரம் செய்யவேணுமென்பதே தான் என் அபிப்பிராயம். ஆகையால், நாம் தான் அவளுக்கு அடிக்கடி புத்தி சொல்லி இந்த விவாகத்தை நடத்தவேண்டியது.

பத்மநாபன்:—ஆம், அப்படியே செய்யலாம். நான் கூட அவளைப் பார்த்துச் சொல்லுகிறேன். இத்தனை நாள் இந்த விஷயமாக அவளை நான் கேட்டதே கிடையாது. நான் அவளை ஒப்புக்கொள்ளும்படி செய்கிறேன். அவளை யாரையாவது விட்டுக் கூப்பிட்டு வரச் சொல்லட்டுமா?

நீலா:—சாயங்காலம் அவள் பரீக்ஷை தேறியதாக ஸந்தோஷ சமாசாரம் கொண்டு பார்க்க வந்தாள். நீங்கள் இல்லை. இனிமேல் அவளுக்கு ஏதாவது பிழைப்புக்கு வழியுமாயிற்றென்று ஸந்தோஷமாகப் பேசி யிருந்தோம். பிறகு வீடு சென்றுள். இந்த இரவு நேரத்தில் அவளைத் தனியாக அலக்கழிப்பது நன்றாக இருக்காது. காலையில் சொல்லலாம்.

பத்மநாபன்:—ஓஹோ! ஆனல், அவளுடைய சந்தோஷ ஸமாசாரத்தையும் விசாரித்துக்கொண்டு அவள் அபிப்பிராயத்தையும் தெரிந்துகொண்டு நானே போய்ப் பார்த்து வருகிறேன் என்று தான் மோட்டாரி லேறிக்கொண்டு அமிர்தவல்லி வசித்து வரும் வீட்டுக்குச் சென்றுன். அவளறையில் அவள் யாருக்கோ கடிதம் எழுதிக் கொண்டிருந்தாள். பத்மநாபன் உள் நுழைந்

தும் சற்று நேரம் அவள் கவனியாமல் கடிதம் எழுதி உரையில் போடும் சமயத்தில் திரும்பியதும் பத்மநாபன் நிற்பதைக்கண்டு திடுக்கிட்டெழுந்து அவரை வரவேற்று ஒரு நாற்காலியை இழுத்துப்போட்டு அதில் அவரை உட்காரச் சொல்லித் தானும் ஒரு நாற்காயியில் அமர்ந்தாள்.

அமிர்தவல்லி:—ஏது தாங்கள் இப்பொழுது இவ்வளவு தூரம் வந்தது? ஸாயங்காலம் நான் வீட்டிற்கு வந்திருந்தேன்.

பத்மநாபன்:—ஆம், நீலா உன் பரீக்ஷை தேறிய சமாசாரம் சொன்னாள்; மிகவும் ஸந்தோஷம்.

அமிர்தவல்லி:—ஏதோ தங்கள் உதவிகளாலும் ஆசீர்வாதங்களாலும் தான் நான் பரீக்ஷை தேறியது. அதைப்பற்றி நான் மிகுந்த நன்றியுள்ளவளாக நமஸ்கரிக்கிறேன்.

பத்மநாபன்:—ஓ! அதைப்பற்றி என்ன? கடிதங்கள் உன் தோழர்களுக்கா?

அமிர்தவல்லி:—ஆமாம்.

பத்மநாபன்:—உன்னுடைய சில முக்கியமான தோழர்களின் புத்திமதி உனக்கேதாவது கிடைத்ததா?

அமிர்தவல்லி:—எனக்கு நீலாவையும் உங்களையும் விடப் புத்திமதி சொல்லும் நேசர்கள் இருப்பதாக நான் நினைக்கவில்லை.

பத்மநாபன்:—உன் தோழி நீலா கூட உன் பிற்கால நன்மையைக் கோரி ஏதோ சொன்னதாகச் சொன்னாள்.

அமிர்தவல்லி:—என்ன, நீலா எனக் கொன்றும் சொன்னதாக நினைப்பில்லை. தாங்கள் கேட்பது ஒன்றும் எனக்குப் புரியவில்லையே என்று பத்மநாபனைக் கூர்ந்து கவனித்தாள்.

பத்மநாபன்:—இல்லை, அவள் ஏதோ உனக்குச் சொன்னதாகச் சொன்னாள்.

அமிர்தவல்லி:—மிகவும் வெட்கி நாணினவள்போலக் கடைக்கண்ணால் அவனைக் கவனித்துக்கொண்டே, ஆமாம், நினைப்பிருக்கிறது.

பத்மநாபன்:—அதைத்தான் நான் உன்னைத் தீர விசாரித்துப் போக வந்தேன், என் தோழன் சுந்தரேசன் மிகவும் யோக்கியன், நல்லவன், படித்தன். உன் அபிப்பிராயமென்ன?

அமிர்தவல்லியின் முகம் மாறிற்று. பெருமூச்சு விட்டுக் கொண்டே தன் முந்தானையைப் பிடித்துச் சுருட்டிக்கொண்டிருந் தாளே யொழிய பதில் ஒன்றும் பேசவில்லை. பத்மநாபனும் அவள் மொழியை எதிர்பார்த்து அவளைக் கண் கொட்டாமல் கவனித் தான். கொஞ்ச நேரம் வரையில் இருவரும் மௌனமாகவே யிருந் தனர். பிறகு, பத்மநாபன் என்ன அமிர்தவல்லி, உன் அபிப்பிராய மென்ன? நான் அவனுக்குக் கடிதம் எழுதவேண்டும். தெரிவி.

அமிர்தவல்லி:—என் மனதில் ஒன்றுமே நினைக்காமலிருக்கும் பொழுது நான் என்ன பதில் சொல்வது? நான் என்னவோ உங்களுக் கடங்கியவள்; உங்களிஷ்டம் எப்படி வேணுமானு லும் செய்யலாம்.

பத்மநாபன்:—என்ன அமிர்தம், நீ இப்படிப் பதில் சொல்கிறாய்? உன் எண்ணம் எனக்குத் தெரிந்தாலல்லவா உன் நன்மைகளைச் செய்ய என்னால் முடியும். உன் விஷயத்தில் நீலா மிகவும் கவலை யெடுத்துக் கொண்டிருப்பதை நீ கவனித்தாயா?

அமிர்தவல்லி:—ஆகா எனக்கு நன்றாகத் தெரியும்.

பத்மநாபன்:—பிறகு நீ ஏன் உன் விஷயங்களைச் சொல்ல முடியாம லிருக்கிறாய்?

அமிர்தவல்லி:—நான் என்ன சொல்வது? நான் ஒரு தாய் தந்தை யற்ற அனாதை. மேலும், பணங்காசற்றவள். என் செலவுகளுக் காக நான் ஸம்பாதித்தல்லவோ யோசனை செய்யவேண்டும். என்று தான் கண்களிலிருந்து சொரியும் பெரிய முத்துப் போன்ற கண்ணீர்த் துளிகளைத் தன் முந்தானையால் துடைத் துக் கொண்டாள்.

பத்மநாபன்:—சே! இந்த ஒரு அல்ப சமாசாரத்திற்காகவா நீ கண் கலங்குவது. உனக்குப் பணம் காசுதானா அகப்படாது. உனக்கு விவாகமாய் விட்டால் உன் பிழைப்புக்கு நீ யேன் தேடவேண்டும்? உன் கணவன் பொறுப்பல்லவோ அது.

அமிர்தவல்லி:—அது வரைக்கும் கூட தாய் தந்தையற்ற ஏழை யாகிய என்னை யார் விவாகம் செய்ய முன் வருவார்கள்?

(தொடரும்.)

" அமிர்த குணபோதினி "

பவஹஸத்திய புரட்டாசி மாத பஞ்சாங்கம்.

யோகம்	இங்	தமிழ்	வார	திதி, நக்ஷத்திரம், விரதாதிகள், முதலியவை.
ம-அ	16	1	ஞா	ஸப்-1-31, உப-55-56, கேட்-28-59, கன்யாரவி [18-50, ஷடசீதி, ஸமார்க்கம்.
சி-உ	17	2	திங்	நவ-52-19, மூல-26-12, நந்தநவமி.
சி-பி	18	3	செவ்	தச-46-18, பூரா-22-27. க்ஷீரவிரதம்.
அ-சி	19	4	புத	ஏகா-39-31, உரா-17-50. திருவகீந்திரபுரம் தேர்.
சி	20	5	வியா	துவா-32-10. ஶ்ரூவ-12-34, ஶ்ரூவண துவாதசி.
சி	21	6	வெ	திர-24-28. அவி-6-55.
அ-ம சி	22	7	சனி	சசி-16-49, சத-1-13, உப-54-33, உமா மஹேசுவர அனந்த விரதம்.
அ	23	8	ஞா	◯ 9-34, உட்-51-0. துலாயனம் 43-5.
சி	24	9	திங்	பிர-3-7, உப-54-37, ரே-47-14, மஹாலயமாரம்பம்
சி	25	10	செவ்	திரி-53-53, அசு-44-53, பிரஹதீ கௌரீவிரதம்.
சி-அ	26	11	புத	சது-51-50, பர-44-18, மஹாபரணி.
ம-உ	27	12	வியா	பஞ்-51-45, கிரு-45-38, கிருத்திகாவிரதம்.
ம-சி	28	13	வெ	ஷஷ் 53-41, ரோ-48-59.
சி	29	14	சனி	ஸப்-57-31. மிரு-54-7.
சி	30	15	ஞா	அஷ்-60-0, ஆரு-60-0, மஹாலக்ஷ்மி விரதம்.
சி-அ	1	16	திங்	அஷ்-2-50. ஆரு-0-42, கரிநாள், அவிதவநவமி.
சி	2	17	செவ்	நவ-9-7, புந-8-13.
சி	3	18	புத	தச-15-43. பூச-16-3.
சி-அ	4	19	வியா	ஏகா-22-3, ஆயி-23-36. அதிதி, ஸர்வைகாதசி.
ம-சி	5	20	வெ	துவா-27-33, மக 30-21.
சி-உ	6	21	சனி	திர-31-51, பூர-35-54, பிரதோஷம், சிவராத்திரி.
அ	7	22	ஞா	சசி-34-45, உத்-40-9. விஷசஸ்திரஹத பிதுருதிதி.
சி-பி	8	23	திங்	● 36-18, ஹஸ்-43-5, சோமவார-மஹாலய-அமாவாசை.
சி	9	24	செவ்	பிர-36-34, சித்-44-47, நவராத்திரி பூஜாரம்பம்.
சி	10	25	புத	துவி-35-41, ஸ்வா-45-23.
சி	11	26	வியா	திரி-33-53, விசா-45-6.
சி-ம	12	27	வெ	சது-31-16, அநு-44-3.
சி	13	28	சனி	பஞ்-27-57, கேட்-42-23, உபாங்கலலிதா விரதம்.
அ-சி	14	29	ஞா	ஷஷ்-24-6, மூல-40-7, கரிநாள், ஷஷ்டி விரதம், ஸரஸ்வதி ஆவாஹனம்.
உ-ம	15	30	திங்	ஸப்-19-39, பூரா-37-24, திதிதுவயம்.
பி-சி	16	31	செவ்	அஷ்-14-48, உரா-34-12, துலாரவி 48-36, மஹாஷ்டமி.

(தமிழ் column: கன்யாமீ 5—4; இங் column from 1: அக்டோபர்மீ)

	15வ-உதயத்திற்கு ராசி		குஜ கேது
சனி ராகு			ரவி
		புத குரு	சுக்

Printed & Published by the Proprietor E. M. Gopalakrishna Kone, at the Amirtha Gunabodhini Press, 158-A, Broadway, Madras.